# கொழு

—சிறு கதைகள்—

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அன்பளிப்பு
தி.க. சண்முகசுந்தரம்
தமிழியல் துறை

சக்தி காரியாலயம்

சென்னை மதுரை

தமிழனின் உணர்ச்சிகளைப் பிரதிபலித்து, கவிதா சக்தியுடன் தமிழ் நாட்டுக் காட்சிகளை வர்ணிக்கும் அற்புதமான பல சிறு கதைகள் ஆங்கிலத்தில் எழுதிப் புகழ் பெற்றவர் மஞ்சேரி எஸ். ஈச்வரன். அவருடைய கதைத் தொகுப்பு, தமிழில் முதன் முதலாக வெளி வருவது இதுவே யாகும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழ்ப் பல்துறை

முதற்பதிப்பு ஜூன் 1944
உரிமை பதிவு செய்யப்பெற்றது

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 746

விலை ரூபாய் மூன்று

நன்கொடை எண்: 746

ஜூபிடர் பிரஸ் லிமிடெட், சென்னை.

என் அன்பு நிறைந்த

அன்னையின்

ஞாபகமாக

# நன்றி

ஆங்கில மூலத்திலிருந்து 'கொலு', 'ஜௌரம்மா', 'கிளிஞ்சல்', 'அரங்கேற்றம்' ஆகிய கதைகளை என் நண்பர் டாக்டர். வே. ராகவன் தமிழ்ப்படுத்தியுள்ளார். மற்றக் கதைகளைத் தமிழ்ப்படுத்தி, எல்லாக் கதைகளை யுமே ஒரே அச்சுப்போல் உருவாக்கி, அவைகளுக்கு ஒரு சோபையும் விறுவிறுப்பும் ஊட்டியவர் என் நண்பர் தி. ஜ. ரங்கநாதன். இருவருக்கும் என் வந்தனம் உரிய தாகும்.

'ஹிந்து' துணையாசிரியர் ஸ்ரீ நா. ரகுநாதன், என்னிடம் அன்பும் வாஞ்சையும் காட்டி எழுதியுள்ள முன்னுரைக்காக அவருக்கு என் வந்தனத்தைச் செலுத்துகிறேன். அவருடைய அனுதாபம் அபரிமிதமானது. ஓர் இலக்கிய சிருஷ்டிகன் தனது எக்களிப்பிலும் சோர்விலும் ஒரேவிதமான பணிவு பூணும்படி செய்வது அந்த அனுதாபம்தான். மனித வாழ்க்கையிலே எது பொன், எது கலப்படம் என்று சோதித்துப் பார்த்துவிடக்கூடிய உரைகல், அந்தப் பணிவே யல்லவா?

இந்தக் கதைகள் ஆங்கிலத்திலே வெளியானபோது, பொதுஜனங்களும் சரி, பத்திரிகைகளும் சரி, தாராளமாய் ஆதரித்தார்கள். நமக்கியற்கையான தமிழிலே இந்தக் கதைகள் இப்போது வந்திருப்பதால், முன்னையும் விடத் தாராளமான ஆதரவு இவைகளுக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

சென்னை,
ஜூன் 1944

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

# முன்னுரை

**ஸ்ரீ** ஈச்வரன் ஆங்கிலத்தில் வன்மையும் அழகும் பொருந்திய பல கவிதைகளையும் சிறு கதைகளையும் இயற்றியிருக்கிறார். இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ள பதினொரு கதைகளில் இரண்டைத்தவிர மற்றவை எல்லாம் ஏற்கெனவே வெளிவந்துள்ள அவருடைய ஆங்கில நூல்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. 'பொம்மை மரணம்', 'உடன் கட்டை', இவை மட்டும் இன்னும் அச்சேறாத ஆங்கிலக் கதைகளைத் தழுவி எழுதப்பட்டவை. மூலத்தையும், மொழிபெயர்ப்பையும் ஒத்திட்டுப் பார்த்தால், மொழிபெயர்ப்பு எவ்வளவு நேர்மையாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். கருத்து பேதம், ரஸச்சிதைவு முதலிய கேடுகள் இல்லாமல், தமிழ் 'பாணி'யை இங்கிதத்துடன் அமைத்திருப்பதால், இந்தக் கதைகள் தமிழிலேயே எழுதப்பட்டாற்போல் சரளமான நடையும் சுபாவமான தோரணையும் வாய்ந்து மனதைக் கவர்கின்றன.

இதற்கு, மற்றொரு காரணமும் சொல்லலாம். ஆங்கிலத்தில் எழுதப்பட்டவையானாலும், தமிழனின் மனப்பான்மையையே இவை பளிங்கு படுத்திக் காட்டுவனவாதலால், தமிழ் உடை இந்தக் கதைகளுக்கு ஸகஜமாகவேயிருக்கிறது. ஸ்ரீ ஈச்வரனைத் தனித் தமிழன் அல்லது பச்சைத் தமிழன் என்று சொல்ல முடியாதுதான். இவர் தமிழைத் தாய் பாஷையாகவும், மலையாளத்தைத் தம் முன்னோர்கள் குடியேறிய வழியில் சம்பாதித்த இரண்டாவது பாஷையாகவும், ஆங்கிலத்தைத் தமது படிப்புக்கடிப்படையான மூன்றும் பாஷையாகவும் கொண்டவர். ஆங்கிலத்தில் ஆர்வமும், ஆற்றலும் அடைந்திருந்தும், அவர் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளும், எண்ணங்களும்,

நோக்கங்களும், தமிழ் மக்களிடம் விசேஷமாகக் காணக் கூடியவையே. நம் சமூகப் பழக்க வழக்கங்கள் சில வற்றில் வெறுப்பும், மனிதன் தன் இனத்திற்கு விளைக் கும் கொடுமையைக் கண்டு துயரமும், அன்பு வறண்டு வியர்த்தமான வாழ்க்கையில் உழலும் பிராணிகளிடம் அநுதாபம் ஒரு புறமும், அவமதிப்பு ஒருபுறமுமாக, இவர் மனதில் கொந்தளிப்பை உண்டாக்கி, இவர் கதைகளுக்கு ஒரு புது வேகத்தைத் தருகின்றன. ஆனால், இந்த வேகத்திற்கும், மேல் நாட்டு நவநாகரிகத்திலுள்ள மோகத்தால் நமது மதம், தத்துவம், தர்மம், கலைச் செல் வம், இவை எல்லாவற்றையும் அடியோடு ஒழித்தால் தான் நமக்கு க்ஷேமம் உண்டாகும் என்ற விபரீத நோக் கத்துடன் ஒரு சாராரிடையே தற்காலம் நடமாடிவரும் புரட்சிக்கொள்கைக்கும் வெகு தூரம்.

மாற்றுந்தாயின் கொடுமையால் வாடும் ஸரஸுவும் புத்திர சோகத்தால் பீடிக்கப்படும் கிழத் தம்பதிகளும், ஆறாத் துயரத்தில் அழுந்திக்கிடக்கும் பாலிய விதவை யும், தெய்வத்தை நிந்தித்தோ சமூகக் கட்டுப்பாடுகளை அர்த்தமற்றவையென்று நிச்சயித்துத் தகர்க்க எத்த னித்தோ ஆறுதலடைவதற்கு வழி தேடவில்லை. பாரத பூமிக்குச் சொந்தமான பொறுமையே அவர்களுக்குத் துணையாகிறது. அருமைத் தம்பியை இழந்து வருந்தும் காளிக்கு, செத்த மாரியே தனக்குப் பிள்ளையாக வந்து பிறந்திருக்கிறான் என்ற தீர்க்க நம்பிக்கையின் காரண மாக யமனே வலிமை யிழக்கவேண்டியல்லவா ஆகிறது? ஆயிரம் ஆசை வார்த்தைகள் சொல்லிப் பணக்கார எஜ மானி பட்டணத்துக்கு அழைத்தும், ரயிலேறும் சமயத் தில், மலை நாட்டுப் பேதைப்பெண் ஜௌரம்மா, தன் கணவன் தன்னந்தனியே மழையிலும் பனியிலும் பாடுபட நேரிடுமே யென்றெண்ணச் சகியாதவளாய், "நான் வரல்லேங்க" என்று எவ்வளவு தீர்மானமாகச்

சொல்லிவிடுகிருள்! இவ்விதம் சாமான்ய மக்களின் சுக துக்கங்களையும் நம்பிக்கைகளையும் குணதிசயங்களை யும், மாறுபாடில்லாமலும் அங்கலாய்ப்புடனும் படிப்பவ ருக்குச் சுவையூட்டும் வண்ணம் விளக்குவதே இந்தக் கதைகளில் மெச்சக்கூடிய முக்கிய அம்சம் எனக் கொள் ளலாம். வெகு ஆழ்ந்த கருத்துக்களும் அபூர்வ உணர்ச்சி களும் கூட நாடோடி ஜனங்களினுள்ளத்தில் பாந்தமாய் எழுந்து இன்பம் ஊட்டக் கூடும் என்பதை, குழந்தை மனோதர்மத்தின் மர்மங்களைத் திறந்து காட்டும் 'அரங் கேற்றம்', ஏழை வாசற்காப்பான் காணும் பகல் கனவை விவரிக்கும் 'துரும்பின் ஆவேசம்', அன்பால் கோழைபடும் மனதுக்கு 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்றபடி ஏற்படும் கலவரத் தைச் சித்தரிக்கும் 'பொம்மை மரணம்' இந்தக் கதை களில் வெகு உருக்கமாகவும் அழகாகவும் ஆசிரியர் புலப் படுத்துகிருர்.

இம்மாதிரி பல ரஸங்களையும் கையாண்டு, வாழ்க் கையின் விமரிசைகளையும் மக்களின் மனோபாவத்தையும் உண்மையாயும் உவகையுடனும் வர்ணிக்கும் பல இலக்கி யங்களைச் செய்து, ஸ்ரீ ஈச்வரன் நம் நாட்டுக்கு நீடித்துத் தொண்டு புரியவேண்டும்.

நா. ரகுநாதன்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | கொலு | ... | 1 |
| 2. | ஜெளரம்மா | ... | 13 |
| 3. | கதவின் சாட்சி | ... | 30 |
| 4. | துரும்பின் ஆவேசம் | ... | 46 |
| 5. | மாரி | ... | 56 |
| 6. | கிளிஞ்சல் | ... | 89 |
| 7. | அரங்கேற்றம் | ... | 98 |
| 8. | பொம்மை மரணம் | ... | 106 |
| 9. | ஞாபகச் சின்னம் | ... | 122 |
| 10. | ராட்டினம் | ... | 131 |
| 11. | உடன் கட்டை | ... | 149 |

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

# கொலு

வி–ர்–ர்–ர்!

தலைக்கு மேலே வளைந்து, காலின் கீழே சுழன்று, 'ஸ்கிப்பிங்' கயிறு 'சட், சட்' என்று தரையைச் சாட்டை வாங்கிற்று; பறவையின் ரக்கைகள் போல் தன் கைகள் பறக்க, ஒரு பெண் குதித்துக் கொண்டிருந்தாள்; அவளுடைய தம்பியும் தங்கையும், அதை ஆவலோடு பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

பெண்ணா குதித்தாள்? ஏதோ ஒரு மான் கன்று துள்ளிக் கொண்டிருந்தது. அவளுடைய கறுத்த கண்கள், மேலும் மை தீட்டி, ஈட்டிபோல் பாய்ந்து கொண்டிருந்தன. காதில் லோலக்கு, துடித்த வண்ணம், அவள் ஒவ்வொரு தரம் குதிக்கும்போதும், அவளது தோளின்மேல், தன் மரகதவொளியைச் சொட்டவிட்டுக் கொண்டிருந்தது.

"எவ்வளவு ஆச்சு?" என்று கேட்டுச் சற்று நின்றாள். 'ஸ்கிப்பிங்' கயிற்றைப் பிடித்த பிடியும் சிறிது தளர்ந்தது.

"நூறு" என்றாள் அவளுடைய தங்கை.

"இல்லே; தப்பா எண்ணிண்டு வந்துருக்கே. எம்பளது தான் ஆச்சு" என்றாள் கமலா.

குழல் போன்ற குரலில், "நானு தப்பா எண்ணி னேன்; நான் சரியாத்தான் எண்ணினேன்" என்று அழுத்தமாகச் சொன்னுள் தங்கை.

"சரி, சரி, சண்டைப்படுவானேன்; நானுனு நீ கயத்தை எடுத்துக்கலாம்னு சொன்னேன்; மின்னுடி வேணும்னு எடுத்துக்கோயேன்; அதுக்காகத் தப்பா எண்ணுவானேன்?" என்ருள் கமலா. மூன்று வயது மூத்தவள் அல்லவா; அந்தத் தயாளம்!

யாரோ தன்னை அடித்துவிட்டது மாதிரி, தங்கை யின் முகம் கலங்கிச் சிவந்தது; கண்களைக் கசக் கினுள்; மார்பு படபட என்று அடித்துக்கொண்டது. அவ்வளவுதான்; அழ ஆரம்பித்து விட்டாள். இதைப் பார்த்துத் தம்பியும் அழத் தொடங்கி அம்மாவை எங்கே அழைத்துவிடுவானே என்று அஞ்சி, கெட் டிக்காரியான கமலா, "இல்லேடி, சும்மாச் சொன் னேன். இந்தா" என்று சொல்லி, 'ஸ்கிப்பிங்' கயிற் றைத் தங்கையிடம் கொடுத்துவிட்டு நகர்ந்தாள்.

"அடீ, இருடீ! நான் ஒனக்கு எண்ணலேயா? நீ எனக்கு எண்ணமாட்டே?" என்று, தங்கை கத்தி னுள். கமலா திரும்பிப் பார்த்தாள்; தங்கை அக்கா ளிடம் வந்து, "எம் மேலே கோவமா?" என்ருள்.

"அதெல்லாம் ஒண்ணு மில்லே."

"கோவந்தான் போலிருக்கு."

"இல்லவே யில்லே."

இந்த வாய்ச்சண்டை முற்றி, கண்ணீரில் முடியும் போல் இருந்த சமயத்தில், கூடத்துக் கதவடியில் ஒரு

சப்தம் கேட்டது; ஏதோ ஒரு தலை, கூச்சத்தோடு எட்டிப் பார்த்துவிட்டு, திரும்பவும் உள்ளே மறைந்தது.

" ஸரஸூன்னு? நம்பாத்துக் கொலுவைப் பார்க்க, வரச்சொல்லி யிருந்தேன்" என்று தங்கையிடம் சொல்லிவிட்டு, கதவடிக்குக் கமலா ஒரே ஓட்டமாய் ஓடினாள்; அவள் பின், அவளுடைய தங்கையும் குதூகலமாக ஓடினாள்.

ஸரஸூவுக்கு ஏழெட்டு வயது இருக்கலாம். கொஞ்சம் கறுப்பு உடம்புதான். மான்போல் மருண்ட தோற்றம். மாசற்ற வைரமென மின்னும் கண்கள். அவள் கறுப்பா யிருந்தால் என்ன? சூரிய ஒளியிலேயே வாழ்ந்து வரும் ஒரு மனிதனுடைய மேனி மெருகு பெறுவதுபோல, அடுப்படியில் ஓய் வில்லாமல் வேலை செய்துவந்த அவளுடைய உடம்பும் கறுத்துவிட்டது. ஆயினும், அந்தச் சிறுமி அழகி தான். அதை வர்ணிக்க இயலாது; பார்த்தால் உங் களுக்கே தோன்றும். ஜிலு ஜிலு என்று கொப்புளிக் கும் ஊற்றுக் கண்ணை அடைத்தால் எப்படி யிருக் கும்? பொன்போல் ஒளிரும் தன் தேனடைமீது ஒரு தேனீ மூர்ச்சித்து விழுந்தால் எவ்வா றிருக்கும்? தோட்டத்தின் ஒரு மூலையிலே தொங்கி, சூரிய ஒளி பட்டு அந்தரங்கமாய்க் கனியும் ஒரு திராட்சைக் குலை எவ்வித மிருக்கும்? காட்டிலே எதேச்சையாய் இளம் புல்லை மேய்ந்து துள்ளித் திரியும் ஒரு மான் கன்று, ஒளிந்து மறைந்த வேடன் விடுத்த அம்பொன்று தன்னை நாற்புறமும் விரட்டுகிறதே என்று நடுங்கித் திகைத்து நின்றால் எவ்வித மிருக்கும்? – இவை அனைத்

தையும் அச்சிறுமியின் தோற்றம் ஞாபக மூட்டியது. அவள் மேனியின் அழகிலே இவ்வளவு செல்வங்கள் புதைந்து கிடக்கையில், ஸரஸு கறுப்பா யிருந்தால் என்ன?

ஸரஸு அதே தெருவில் வசித்து வந்தாள், நாலு வீட்டுக்கு அடுத்தாற் போல்; கமலாவின் தோழி. ஸரஸு போவதும் வருவதும் தெரியவே தெரியாது; நிழலோ என்று சொல்லும்படி நகருவாள். பெரு மூச்சோ, பேச்சோ என்று சந்தேகம் வரும்படி, மாறி விட்டது அவளது குரல் இனிமை.

"எப்படி வச்சுருக்கேன்னு சட்டுனு பார்க்கத் தான் முடியும். அவள் என்னைக் காணுமேன்னு சொல் ரத்துக்கு முன்னே, நான் ஆத்துக்குப் போயிடணும்" என்ருள் ஸரஸு.

"அடி, இவ்வளவு பயம் எதுக்கு? ஒண்ணும் ஆயிடாது" என்று தேற்றி, ஸரஸுவைக் கையைப் பிடித்து, கொலு வைத்திருக்கும் அறைக்கு, கமலா அழைத்துக்கொண்டு போனுள்.

கொலு வெகு அழகாய் வைக்கப்பட் டிருந்தது; மிக்க அற்புதமா யிருந்தது. படிப்படியாய் மரப் பலகைகளைக் கொண்டு கட்டி, மெல்லிய மூங்கில் சிம்புகளால் விதானம் அமைத்து, பல வர்ணக் காகி தங்கள் ஒட்டிய மண்டபத்தில், அநேகவிதமான பொம் மைகள் வைக்கப்பட் டிருந்தன. கண்ணைப் பறிக்கும் பல வர்ணங்களிலும் பல உருவங்களிலும் அமைந்த ஸெலுலாயிட் பொம்மைகளும், பீங்கான் பொம்மை களும் ஒரு புறம். தங்கமும் வெள்ளியும் தோற்கும்படி

மெருகிட்ட பித்தளை, வெண்கலப் பொம்மைகள் மற்றொரு புறம். நீர் போல் தெளிந்த பளிங்கிலும், மணம் வீசும் சந்தன மரத்திலும் செய்த பொம்மைகள் இன்னொரு பக்கம். செக்கச் செவேல் என்றிருந்த கழுத்துப் பட்டையோடு, திறந்த வாய் திறந்தபடி குரைக்கும் நாய்க் குட்டிகளும், கீழே நிர்ப்பயமாய்க் கிடக்கும் எலிக் குஞ்சுகள்மீது குதித்துப் பாயும் பூனைகளும், காதை நெறித்து அஞ்சிக் கலங்கிய கண்களோடு படுத்திருக்கும் முயல் குட்டிகளும் அங்கேயிருந்தன. கட்டிவைத்த குதிரைகள் சில; 'காலப்'பில் தாவும் குதிரைகள் மற்றும் சில. துதிக்கையை மேலே உயர்த்தி, மண்ணைவாரித் தலைக்கு மேலே தூற்றிக்கொள்வது போல் இருந்தன சில யானைகள். வன விலங்குகளின் மன்னன் போன்ற வங்காளப் புலியொன்று, மூர்க்கவெறியோடு நின்றது. கம்பீரத் தோற்றத்துடன், ஒரு சிங்கமு மிருந்தது. செருக்கோடு தோகை விரித்த ஒரு மயில், ராஜசர்ப்பம் ஒன்றைக் காலின் கீழே போட்டு மிதித்துக்கொண்டிருந்தது. சில கிளிகள், கோவைப் பழம் போல் சிவந்த தம் அலகுகளால், கொண்டைகளைக் கோதிக்கொண்டிருந்தன. மொத்தத்தில், சகலவிதமான பறவைகளும் விலங்குகளும் மனிதர்களும், மந்திரவாதியின் மாத்திரைக்கோலால் சிருஷ்டித்துவைக்கப்பட்ட அற்புதச் சிறு உலகம் போல், அது விளங்கிற்று. வர்ணங்கள் ஒளிவிட, உயிரோவியங்களாய் நின்ற அவை, வான் மணமும், மண் மணமும் ஒருங்கே கமழ்ந்தன. ஆண்டவனின் சிருஷ்டி ரகஸ்யத்திலும் அதிசயமாய், என்றும் மங்காப் புதுமையுடன், அது அந்தச் சிறுமிகளின் மனத்தைக் கவர்ந்தது.

கமலா ஒரு புருஷப் பொம்மையைக் காட்டி, "அதோ அதன் வயறு எவ்வளவு பெரிசா யிருக்குப் பார்த்தியா!" என்றாள்.

எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள்.

"அந்த உச்சிப்படியிலே, மாப்பிள்ளையும் பொண்ணும் ஜோரா உடுத்தி அலங்காரம் பண்ணிண்டு, ஒத்தர் கையை ஒத்தர் பிடிச்சுண்டிருக்காளே; அது ரொம்ப அழகா யில்லெ, ஸரஸு?"

ஸரஸு புன்சிரிப்புச் சிரித்தாள்; மங்கலான புன்சிரிப்பு.

"கல்யாணப் பொண் என்னமாய்த் தான் நாணிண்டு, தலையைத் தொங்கப் போட்டுண் டிருக்காள்! கழுத்தெ வலிக்காதோ, எப்ப பார்த்தாலும் இப்படிக் கட்டெ விரலையே பார்த்துண்டு ஒக்காந்திருந்தா?..." என்ற கமலா, தன் தங்கையை நோக்கித் திரும்பி, "ஏண்டி, நாளைக்கு உன் கல்யாணத்தின் போது, உனக்கு உன் ஆம்படையான் மாலையிடச்சே, உன் கட்டெ விரலையா நீ பார்த்துண் டிருப்பே?" என்று கேட்டாள்.

இப்படிக் கேலி செய்தவண்ணம், கமலா தன் தங்கையை முழங்கையால் மெல்ல முட்டியபோது, கூச்சம் நிறைந்த ஸரஸுவுக்குக் கூடச் சிரிப்பு வந்து விட்டது. மணப்பெண் கோலத்தி லிருந்த ஸெலுலாயிட் பொம்மையைப் பார்த்து, எல்லாச் சிறுமிகளுமே 'இடியிடி' என்று சிரித்தார்கள். ஏதோ தையல்காரனின் கடையிலே விழுந்த துண்டு துணுக்களைக் கொண்டு தயாரிக்கப்பட் டிருந்தது அந்தப்

பொம்மையின் சேலே. அதன் கழுத்திலே, ஸ்படிக மணிகளால் ஒரு மாலே அணியப்பட்டிருந்தது. இந்தச் சிறுமிகளின் சிரிப்பிலே, அந்தச் சேலே நைந்து கிழிந்ததுபோல் இருந்தது; அந்த ஸ்படிகமணி மாலேயும் ஒளியிழந்துவிட்டது.

“ என்னடி குட்டிகளா சிரிச்சுண்டிருக்கேள் ? ”

வெகு நேரமாய்ச் சமையலறையில் காரியமாயிருந்த தாயார், இவ்வாறு கேட்டுக்கொண்டே, அறைக்குள் பிரவேசித்தாள். நல்ல தேக்க் கட்டும் அழகு முடையவள். அமைதியும் களிப்பும் நிறைந்த இல்வாழ்க்கையால், அடைந்த சௌபாக்கியம் இது. ஸரஸு வந்திருப்பது அவளுக்குத் தெரியாது. ஸரஸுவைப் பார்த்தவுடனே, அவள் முகத்திலே வியப்பு நிறைந்த ஒரு புன்சிரிப்பு மலர்ந்தது.

“ தினம் உன்னே வா, வா இன்னு கமலா அழச்சுண்டே இருக்காள். எட்டு நாளாயிடுத்தே. இன்னிக்கும் நீ வரமாட்டேன்னே நாங்க நினேச்சோம் ” என்று கமலாவின் தாய், ஸரஸுவைப் பார்த்துச் சொன்னுள்.

“ வரப்படாதுன்னு, மாமி ; அவள் ஆத்தை விட்டு நகரமாட்டேங்கரா ; நான் இப்போ அவளுக்குத் தெரியாமெ வந்துருக்கேன் ; இதோ ஒரு நிமிஷத்துலே திரும்பி ஓடணும்.”

“ எல்லாம் போகலாம், இரு ; ஒண்ணும் வந்துடாது. கொலுப் பார்க்க வந்தவ, பாடாதெ போகவாவது ! அது உனக்குத் தெரியாதா ? ஒரு பாட்டுப் பாடம்மா” என்ருள் கமலாவின் தாயார்.

அதன்பின், மீனாட்சி அம்மாள் உள்ளே விரைந்தாள்; ஒரு நொடியில் ஒரு பாத்திரத்தில் என்னவோ எடுத்துக்கொண்டு திரும்பிவந்தாள். அது மூடியிருந்தது.

இதற்குள் மாலைநேரம் ஆகிவிட்டது. மூங்கில் விதானத்தின் இரு புறங்களிலும் தொங்கிய விளக்குகளை ஏற்றினார்கள். இந்தத் தீபச் சுடர்கள், பல வைர மணிகள் போல் மின்னின. அந்த ஜோதியிலே, முன்னிலும் அதிக ஜீவகளையோடு, பொம்மைகளெல்லாம் பிரகாசித்தன. ரோஜா அத்தர் வைத்த சிமிழ்கள் போல் இருந்த செப்புகள்,வாய்திறந்து அந்த ஒளியிலே மணம் வீசுகிற மாதிரி தோன்றின. சருகாயிருந்த இலைகளும் மலர்களும், பசுமை ஏறி ஜொலித்து, வசந்தத்தைக் கூவியழைத்த மாதிரி தோன்றின. தொங்கிக் கொண்டிருந்த தொரு வாழைச் சீப்பின் மஞ்சள் வர்ணம், தோலுரிந்து உள்ளிருக்கும் பழத்தின் தந்த நிறத்தை வெளிக்காட்டுவது போல் பிரகாசித்தது. எதிரே புத்தப் புதிதாய் வெள்ளையடித்த சுவரில் மாட்டியிருந்த ஒரு நிலைக்கண்ணாடி, இந்த அற்புதக் காட்சியை யெல்லாம் தத்ரூபமாய்ப் பிரதி பலித்துக்கொண் டிருந்தது. பொம்மைகள் அனைத்தும் ஏதோ ஒரு மந்திர ஜாலத்துக்குக் கட்டுப்பட்டுக் கிடப்பவை போல் தோன்றின. இல்லையானால், அந்த வன்னப் பறவைகளும், வன விலங்குகளும் மனிதக் குரலிலே பாடியும் பேசியு மிருக்குமே! வளர்பிறைச் சந்திரன் ஒளிவீச, தாரகைக் கணங்கள் கண்சிமிட்ட, கோடிகோடி யாழ் நரம்புகளிலே வாயுத் தேவன் இன்னிசை யெழுப்ப, அந்த இன்னிசையின் நடுவே, ஒவ்வொரு சின்னஞ்சிறு மலரி லிருந்தும் அனந்தமான

தேவமாதர் தோன்றிக் குதித்து நடனமாடி யிருப்பார் களே! இந்தக் காட்சிகளின் பேரானந்தத்திலே மெய் மறந்துவிட்ட ஸரஸு, தான் சமீபத்திலே கற்ற ஏதோ ஒரு பாட்டை, பாடம் ஒப்புவிப்பது மாதிரி பாடினுள்.

"ரொம்ப நன்னுப் பாடினேடி" என்று மீனுட்சி அம்மாள், ஸரஸுவைப் பாராட்டினுள். இதோடு பாட்டு முடிந்தது.

"சரி; எல்லாரும் ஒக்காந்து, இந்தச் சுண்டலைச் சாப்பிடுங்கோ."

சிறுமிகள் உட்கார்ந்தார்கள். ஸரஸு மட்டும் கொஞ்சம் சங்கோசத்தோடு உட்கார்ந்தாள். எல்லோ ருடைய கையிலும், ஒவ்வொரு பிடி சுண்டலை, மீனுட்சி அம்மாள் கொடுத்தாள். அதைத் தின்ன, ஸரஸு தயங்கினுள். கமலா தன் வாய் நிறையச் சுண்டலை அடைத்துக்கொண்டே, ஸரஸுவையும் தின்னும்படி வற்புறுத்தினுள்.

ஸரஸு ஒரு பிடி எடுத்து, வாயின் கிட்டக் கொண்டுபோனுள்.

அந்த க்ஷணத்தில், "ஏ ஸரஸு!" என்று கடுங் கர்ஜனை ஒன்று கேட்டது.

"அவள் வந்துட்டாள்!" என்று கிலிபிடித்த குர லில் கூவிக்கொண்டே, எழுந்து ஓடினுள் ஸரஸு. மீனுட்சி அம்மாள் அவளைத் தடுக்கு முன்பாக, வாசல் வராந்தாவுக்கு ஸரஸு போய்விட்டாள்.

"ஐயோ பாவம்!" என்று முனகினுள் மீனுட்சி.

இரண்டு சிறுமிகளுக்கும் கண்ணீர் வந்து விட்டது. சிறுவனோ, ஆத்திரத்தோடு சுண்டலை வீசி யிறைத்தான். எப்படி யிருந்தாலும், அவன் ஆண் பிள்ளை அல்லவா ?

“ ஐயோ பாவம் !” என்று மீண்டும் இரங்கினாள் மீனாட்சி.

கண்களிலே கோபத்தணல் வீச, வாசலில் ஒரு யுவதி, “ வாடீ ” என்று சீறிக்கொண்டே, வீதியிலே நடந்தாள். சதா கொடுமைக்காளான ஓர் அநாதை போல, ஸரஸு அந்த யுவதியைப் பின்தொடர்ந் தாள்.

இருவரும் தங்கள் வீட்டுக்குள் போய்ச் சேர்ந்ததும், அந்த யுவதி, ஸரஸுவை நோக்கி, “இதான் கொழந்தெயைப் பாத்துக்கற லட்சணமோ ? ” என்று கேட்டாள்.

ஸரஸு பதில் சொல்லவில்லை ; அவள் கண்கள் தாழ்ந்து, தரையை நோக்கின. அவள் தொண்டையிலே அழுகை வெள்ளம் வந்து அடைத்துக்கொண்டது. அந்த வெள்ளத்துக்கு அணைபோடுவது போல, அவளுடைய கண்ணிமைகள், அவள் கண்களை மூடிக் கொண்டன. அந்தக் கண்களைத் திறந்துபார்த்தால், - எதிரே உள்ளவளை அல்ல ; இன்னொருத்தியை - அவளைப் பார்த்தால், கண்ணீர் வெள்ளம் உடைப் பெடுத் திருக்கும். உருண்டு திரண்டு அகன்ற அதே விழிகள், சிறுத்து நிமிர்ந்த அதே மூக்கு, மெல்லிய உதடு, தளிர்போன்ற கன்னம் — எல்லாம் துளிக்கூட வித்தியாச மில்லாமல் அதேதான் ; அவளைப் பார்த்து விட்டால், அவளை முன்போல மார்புறத் தழுவி

அவளுடைய அன்பு நிறைந்த புஜங்களைத் தீண்டிவிட்டால், அந்தக் கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டு சொரிந்திருக்கும். ஆனால், இருவருக்கும் இடையிலே, இருவரையும் பிரிக்கும் இருள் திரை யொன்று என்றென்றும் அகலாதபடி தொங்கிக் கிடக்கிறது. ஸரஸு சித்திரம்போல் மௌனமாய் நின்றாள்; அவளுடைய கண்கள் பூமியை நோக்கின; அவளது அழகிய வாய், வாடிச் சுருங்கியது; சோகத்தால் அவள் சோர்ந்துபோனாள்.

"நீ உருப்படப் போறதில்லை!" என்று உறுமிய வண்ணம், அந்த யுவதி, தொட்டிலில் ஓயாது புலம்பிக் கொண்டிருந்த சிறு குழந்தையைத் தூக்கி எடுத்துக் கொண்டே, "நீ உருப்படவே போறதில்லை; நான் நிச்சயமாய்ச் சொல்றேன்" என்றாள். இப்படிச் சொல்லிய அவள், திடீரென்று மௌனம் பூண்டு, தன் சொல்லைவிட அதிகக் குரூரமாய், சிறுமியை உறுத்து விழித்தாள்.

ஸரஸு இன்னும் தரையையே பார்த்துக் கொண்டு நின்றாள். ஸரஸுவுக்கு, தாயில்லாத கொலு வந்தது, முதன் முதலாய் இந்த வருஷம்தான். தந்தைக்கோ, வெகு சீக்கிரத்திலே மனைவி வாய்த்துவிட்டாள். ஸரஸுவின் கொலுப் பொம்மைகள் எல்லாம், பரணில் எங்கோ ஒரு கூடையில் முடங்கிக் கிடந்தன. ஆனால், தன் சிநேகிதி ஒருத்தியின் வீட்டுக் கொலுவைப் போய்ச் சில நிமிஷ நேரம் பார்த்த போது, சென்ற காலத்திய அற்புதக் காட்சியொன்று அவள் கண்முன்னே வந்து நின்றது — அது உலக ரோஜாக்கள் அனைத்தும் திரண்ட அழகினும் அதிக

அழகா யிருந்தது; அமிழ்தத்தையும் மிஞ்சிய அன்பு கனிந்திருந்தது. அந்த அற்புதக் காட்சியிலே, இறந்த தாயே திரும்பி வந்து, ஸரஸுவின் உள்ளத்தோடு பேசத் தொடங்கிவிட்டாள்.

# ஜௌரம்மா

பனிச்சென்று பகல் புலர்ந்திருந்தும், உச்சியேறுவதற்கு முன் சூரியன் மறைந்து போயிற்று. மேலே மேகங்கள் ஓட, கீழே மலைச்சாரல்களிலும், பள்ளங்களிலும், வெளிகளிலும், நிழல்கள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டு ஓடின. தூரத்தில் யூகலிப்டஸ் மரங்களின் பக்கத்தில், மஸ்லின் துணியைப் போன்ற மூடு பனி ஒன்று தோன்றி, அடிக்கு அடி வலுத்துக் கொண்டு எங்கும் பரவிற்று. சிறிது நேரத்துக்கெல்லாம், மற்றுமுள்ள பிரதேசம் முழுதும் மேகமண்டலத்தில் மறைந்து போனாற் போல் ஆகி விட்டது. அந்தப் பெரும் மூட்டத்தில், மண்ணுலகும் விண்ணுலகும் ஒன்ருய்க் கலந்தன.

எங்கிருந்தோ வந்த ஒரு சப்தம் அந்த மௌன அமைதியைக் கலைத்தது. சப்தம் வரவர வலுத்தது. அது வேறேதுமில்லை; மணி பனிரண்டு என்று தெரிவிக்கும் மின்சாரச் சங்கின் சப்தம்தான். சங்கின் ஊதல் நின்றதும், சிறிது நேரத்துக்கு முன் விலகத் தொடங்கிய மூடு பனி, அடியோடு அகன்றது. மாதா கோயில் கோபுரங்கள், மீண்டும் வான வெளியை நோக்கி நிமிர்ந்தன. மர உச்சிகளில் உறங்கிய பனி முத்துக்கள், கீழே உதிர்ந்து, அங்கங்கிருந்த குழிகளையும் வளைகளையும் அலங்கரித்தன. புல் வெளியெல்லாம், மரகதப் பசுமையுடன் புதுமை பெற்றுத் திகழ்ந்தன.

பனி மூட்டம் விலகியதும், கொடப மண்டலத்தில் கெல்ஸோ ரோட் செங்குத்தாய் உயருமிடத்தில், உருளைக் கிழங்கு தோண்டிக்கொண் டிருக்கும் ஒருவன் தென்பட்டான். அவனுக்கு வயது முப்பத்தைந்து இருக்கலாம்; நல்ல உழைப்புக் கெடுத்த திட தேகம்; கனமாய் முழங்கால் வரைக்கும் ஒரு முரட்டுத் துணி; முன்னே ஒரு பிரபுவின் உடலுக்கு அலங்காரமா யிருந்த நீலக் கம்பளிக் கோட் டொன்றை, அவன் போர்த்தி யிருந்தான்; அவனுடைய தலையைப் பெரிய தொரு முண்டாசு சுற்றி யிருந்தது. காலையிலிருந்து, அவன் தன் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தான். முட்டக்கோசுக்கும், காலிபிளவருக்கும் எருப் போட்டாகி விட்டது. ஏற்கெனவே சாகுபடியான உருளைக்கிழங்குகளை, அப்போது தோண்டிக் கொண்டிருந்தான்.

மின்சாரச் சங்கு ஊதியதும், அவன் தோண்டுவதை நிறுத்தி, முதுகை நிமிர்த்தி, தன் எதிரிலுள்ள சாக்கைப் பார்த்தான்; அது பாதி நிரம்பியிருந்தது. வரப்போகும் சந்தையை நினைத்து, அவனுள்ளம் பூரித்தது. மண் வெட்டியைப் போட்டுவிட்டு, வெற்றுச் சாக்கொன்றை விரித்து, அதன்மேல் உட்கார்ந்து, "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டான். தன் உடம்பில் படிந்திருந்த மண் தூளிகளைத் தட்டிவிட்டு, "இந்த உருளைக் கிழங்குகள்தான் இந்த விளைவிலேயே ரொம்பப் பெரிசு; ரொம்ப நேர்த்தியாயும் இருக்கு. வீசை நாலணுவுக்கு விக்கலாம்; ஒரு ஜதை காலிபிளவர் பனிரண்டணுவுக்கு விற்பேன். பாலோ, ரூபாய்க்கு அஞ்சுபடி இல்லாமெ, மூணுபடிதான் குடுப்பேன்" என்றெல்லாம் மனக்கோட்டை கட்டிக்

கொண் டிருந்தான். திடீரென்று இந்த யோசனை கலைந்து, சட் என்று திரும்பிப் பார்த்தான். அவனது கூர்மையான பார்வை, அவனுக்கு ஏதோ பளிச்சென்று நினைவு வந்தது போல் காட்டிற்று. அவனது சிந்தனை, முற்றிலும் வியாபார விஷயத்தி லேயே மூழ்கியிருக்க வில்லை. அவன் மனத்துக்குள்ளே தெளிவின்றி உருவகம் செய்து கொண்டிருந்த ஓர் உருவத்தை, அவனுடைய கண்கள் சந்தித்தன; முத லிலே முகமும், குளுமை நிறைந்த பிரகாசமான இரு கண்களும் தோன்றி, அதன்பின்னே ஜீவகளை நிரம் பிய ஒரு பரிபூர்ணப் பெண்ணுருவமாகப் பரிண மித்து, கீழிருந்த பள்ளத்தாக்கினின்றும் மேலே எழுந்து வருவது தென்பட்டது.

வயது இருப திருக்கும். சிறிய மேனி; அழ குடையது; மலை ஜாதிப் பெண்களுக்கு இயற்கை யான செழிப்பும் பெண்மையின் நிறைவும் படைத் தது. அவள் தலையில் ஒரு சட்டி யிருந்தது. வரப் பிலே ஊர்ந்தும், வாய்க்கால்களைத் தாண்டியும், துள்ளிக் குதித்து ஒய்யாரமாய், ஒரு வனதேவதை போல், அவள் வந்தாள். சில நிமிஷங்களுக்குள் இவ னருகே வந்து சேர்ந்து, சட்டியைக் கீழே வைத்தாள். அவள் குனிந்தபோது, அவளது தலையை மூடி யிருந்த முட்டாக்கு நழுவித் தோள்மீது விழ, அடர்ந்து பள பள என்றிருந்த அவளது கூந்தல் பிரகாசித்தது. அவள் ஆடையைச் சரி செய்துகொண்டு, மௌன மாய் நின்றாள்.

இவன் அந்தச் சட்டியைக் கையில் எடுத்து, மெல்லக் கலக்கிக் குடிக்க ஆரம்பித்தான்; நடு நடுவே,

முகத்தைத் தூக்கி, தன்முன் நிற்பவளைப் பார்த்தான். என்ன காரணமோ, அவள் மட்டும் இவனைப் பார்க்கவில்லை. இவன் சட்டியைக் கீழே வைத்து, புறங்கையால் வாயைத் துடைத்துக் கொண்டு, ஏப்பம் விட்டு, ஓர் இருமலும் இருமிவிட்டு, பேச ஆரம்பித்தான்:

"என்ன பேசாமெ நிக்கிறே?"

"எல்லாத்தியும் தான் சொல்லிட்டேனே" என்று பதிலளித்தாள் அந்த ஸ்திரீ. குரல் மெதுவாயிருந்த போதிலும், கொஞ்சம் சிடுசிடுப்பைக் காட்டியது. இன்னும் அவன் கண்களை அவள் ஏறெடுத்துப் பார்க்காமலே, மீண்டும் மௌனம் பூண்டு, கழுத்து மணிகளை உருட்டிக் கொண்டும், கால் கட்டை விரலால் தரையில் ஏதோ கீறிக்கொண்டும் நின்றாள்.

"எல்லாத்தியும் சொல்லிட்டியோ, உன் பைத்தியக்காரத்தனத்தை யெல்லாம்! இதெல்லாம் பாத்துண்டு பொறுத்துண்டு இருக்கிறவன் இல்லே நானு." தன் கோபத்தை வேண்டு மென்று அவள் கிளப்புகிறாள் என அவனுக்குத் தோன்றியது.

"நானு ஒன்னெ உட்டூட்டு ஒரேடியாய்ப் போயிடலியே. ஏழு வருசமா, நகராமெ ஒன்கிட்டயே இருக்கல்லே? நான் சொல்ர ஞாயத்தெக் கொஞ்சம் கேக்கப்படாதா?" என்று அவள், நயந்த மொழியோடு தன் கணவனைப் பார்த்தாள். இவ்விதம் நயந்து பேசினால், அவன் மனம் இளகிவிடும் என்ற நிச்சயத்துடன், தன் மருண்ட கண்களால், அவனை நோக்கினாள். ஆனால், அவன் முகத்திலே கோபம் அதிகரிப்பதையே கண்டாள்.

"நீ சொல்ரத்தெத்தான் நான் கேக்கணுமோ? என்னெ உட்டுட்டு, நீ ஓரேடியாப் பூடலாமே. போ. அவங்க ஒன்னைப் பைத்திய மாக்கிட்டாங்க, அதான் பேத்தரே."

"மூணு வருசமா அவங்களும் கூப்பிட்டிண்டு இருக்காங்க; நானும் போவணும்னு கேட்டுண்டிருக்கேன்...ரொம்ப நல்லவங்களாவும் இருக்காங்க. நானு இந்த வருசம் நிச்சியமா அவங்களோட போகத்தான் போரேன்."

"போவியா? அவ்வளவு தைரியமா ஒனக்கு?" என்று அவன் துள்ளி எழுந்தான். அவள் கையைப் பிடித்துக்கொண்டு கன்னங்களில் அறையலாமென்று நினைத்தவன், அவளுடைய கண்களின் நிர்மலமான ஒளியைக் கண்டு மனமிளகி, கையை உதறிவிட்டு, சற்றுப் பின் நகர்ந்தான். அவனை அவன் பார்த்த பார்வையில், ஒரு பயமும் ஒரு வெறுப்பும் கலந்திருந்தன.

"அப்பிடியா? – சரியாப் பூடுச்சு – நான் போரது நிச்சியம்."

"பிள்ளெயெ ஆரு பாத்துக்குவா?"

ஒரு கணம் கலங்கி நின்ற அவள், மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, "அதையும் என்னோடே இட்டுண்டு போயிடரேன்" என்றாள்.

இவ்வாறு உதடு நலுங்காமல் முரட்டுத் தனமாய் அவள் பேசியது கண்டு, அவன் திடுக்கிட்டான். கர்வம் பிடித்த அவள் மண்டையை, அப்படியே மண்

வெட்டியால் நொறுக்கிவிடலாமா என்றுகூட அவ னுக்கு ஆத்திரம் வந்தது. ஆனல், சாந்தமும் பணி வும் நிரம்பிய மனைவியல்லவா என்ற நினைவு குறுக் கிட்டு, அவனுள் எழுந்த பேய் எண்ணத்தை அடக் கியது. இனிமேல் என்ன நியாயம் சொன்னலும் அவள் கேட்கப் போவதில்லை. இவனுக்கே அல்லவா அவள் நியாயம் சொல்ல வந்துவிட்டாள்! அந்தப் பட்டணத்துப் பாவிகள், இவள் மனத்தைக் கலைத்து விட்டார்கள் என்று அவன் நினைத்தான். அவர்கள் மீது அவனுக்கு அடங்காக் கோபம் வந்தது. ஆனல், அவர்களோ சர்க்கார் மனிதர்கள்; பணக் கொழுப்பும் உள்ளவர்கள். இவனே ஓர் ஏழை; சில பசு மாடுகளும், சேத்து முதலாளி கொடுத்த ஒரு துண்டு நிலமும் தான், இவனிடம் உண்டு. சேத்தின் பங்களாவைப் பார்த்துக் கொள்வதற்குப் பிரதியாக, இவன் அந்த நிலத்தில் சாகுபடி செய்து கொள்ளலாம். இவ்வளவு தான், அந்த நிலத்தின்மீது இவன் உரிமை. அந்தப் பங்களா இருக்கிறதே அதுவோ, சர்க்காரின் கச்சேரி கள் வருஷத்தில் ஆறு மாதம் சென்னைக்குப் போய் விடுமே, அப்போதெல்லாம் குடியிருப்பின்றிக் காலி யாகவே கிடக்கும்.

இல்லை; முடியாது. என்னதான் சொற்ப காலத்துக்கே என்ருலும் சரி, எவரா யிருந்தாலும் சரி; தன் மனைவியைத் தன்னிட மிருந்து பிரித்து அழைத்துச் செல்ல, யாருக்கும் இடங் கொடுப்பதில்லை என்று அவன் திடமுடிவு செய்துவிட்டான். இந்த முடிவை உறுதியாய்த் தன் மனத்துக்குள்ளே முடி போட்டுக் கொண்டு, மறுபடியும் கிழங்குகளைத் தோண்டுவதில் ஈடுபட்டான். அவன் மனைவி அவ

ளையே சிறிது நேரம் உற்று நோக்கிக்கொண் டிருந் தாள்; புன்சிரிப்பும் புருவச்சுளிப்பும் மாறி மாறி அவள் முகத்திலே திகழ்ந்தன. ஆனால், அவன் சமா தானமாய்ப் பேசப் போவதில்லை என அவள் உணர்ந்து கொண்டாள். அவனுக்கு உருமவேளைக் கஞ்சி கொண்டுவந்த சட்டியைக் கையிலே எடுத்துக் கொண்டாள். வேகமாய் நடந்தாள்; ஏன், ஓட்ட மாய் ஓடினாள் என்றே சொல்லலாம். ஓடி, பள்ளத் தாக்கிலே இறங்கி மறைந்தாள்.

## 2

ஜௌரம்மா ஏழு வருஷங்களுக்கு முன் மாலியை மணந்து, உதகமண்டலத்துக்கு வந்தாள். மைசூர்ப் பக்கத்திலிருந்து வந்தவள், அதற்குப் பின் ஒரு தரம் கூட, தான் பிறந்த இடத்துக்குப் போனதில்லை; ஏனெனில், அவளுக்கு அங்கே உற்றார் யாரும் இல்லை. அவளுக்கு மணமான வருஷமே அவளுடைய தந்தையும் தாயும், ஒருவர் பின் ஒருவராக இறந்தார் கள். அவள் சகோதரன், சிறு வயதிலேயே தகப்ப னுடன் சண்டை போட்டுக் கொண்டு, வீட்டைவிட்டு ஓடிப் போய்விட்டான். இப்போது அவன் இருக்கும் இடம் யாருக்கும் தெரியாது. தன் கணவன் மாலி யிடம், ஜௌரம்மா மிக்க அன்பாயிருந்தாள். அந்தச் சின்னஞ் சிறு துண்டு நிலத்தைச் சாகுபடி செய்வ தில், தன் கணவனுக்கு உதவி புரிவாள்; சிக்கன மாய்க் குடித்தனம் நடத்துவாள்; காய் கறியும் பால் தயிரும் விற்று, சிறிது பணம் சேமித்தாள். அந்தக் குடிசையும் துண்டு நிலமுமே அவளுடைய உலகம்; மழையிலே நனைந்து வெயிலிலே காய்ந்து, ஒன்றிய

மலர்போல், அந்தத் தம்பதிகள் வாழ்ந்துவந்தார்கள். அவர்களுடைய காதலிலே அரும்பிய மொக்குள் போல், ஆண் குழந்தை ஒன்றும் அவர்களுக்குப் பிறந்தது.

கஷ்டமோ சுகமோ எது வந்தாலும் சந்தோஷ மாகவே, இந்தத் தம்பதிகள் இன்னும் வாழ்க்கை நடத்திக்கொண் டிருந்திருப்பார்கள். அதற்கு இடை யூறாக, மூன்று வருஷங்களுக்கு முன்னே, ஒரு கன வான் தம்முடைய மனைவி மக்களுடன், உதக மண்ட லத்துக்கு வந்து சேர்ந்தார். அதன்பின், வருஷந் தோறும் திரும்பத் திரும்ப, அவர் வந்து போய்க் கொண்டிருந்தார். ரெவின்யூ இலாக்காவில் அவ ருக்கு உதவிக் காரியதரிசி உத்தியோகம். கோடை யிலே சென்னை சர்க்கார்க் காரியாலயங்கள் மலைவாசத் துக்காக வரும்போ தெல்லாம், அவைகளோடு இவரும் இங்கே வந்துவிடுவார்.

அந்த உத்தியோகஸ்தர் இங்கே தங்கியிருக்கும் நாட்களில், அவர் வீட்டிலே வேலைசெய்ய, ஜௌ ரம்மா அமர்த்தப்பட்டாள். உத்தியோகஸ்தரின் மனைவி, மிகவும் நல்லவள். வருஷத்துக் கொரு குழந்தை தவறுமல் பெற்றதனுல், பொறுமையும் நற் குணமும் தாமாகவே அவளுக்கு உண்டாகிவிட்டன. ஜௌரம்மா வேலைக் கமர்ந்த நிமிஷத்தி லிருந்தே, அவளிடம் எஜமானிக்குப் பிரியம் ஏற்பட்டது. “நல்ல ஸாது இந்த ஜௌரம்மா” என்று, அம்மாள் தன் கணவனிடம் அடிக்கடி சொல்லுவாள். வீட் டைக் கூட்டி மெழுகிச் சுத்தமாய் வைத்துக்கொள் ளுவதிலும், பாத்திரம் பண்டங்களை விளக்குவதிலும்

அவளுக்கு யாரும் இணை கிடையாது. சமையல்கார னுக்கு வேலையே இல்லாமல் போய்விட்டது. அவன் சோற்றைப் பொங்குவதோடு சரி; அதையும் சில சமயம் குழைத்து விடுவான். அம்மாள் கையில் இருந்தால் தாங்கமுடியாமல் பாடுபடுத்தும் குழந்தைகள், ஜௌ ரம்மாவின் கைக்குப் போனால் பரம சாது ஆகிவிடும். சாயங்காலத்தில், குழந்தைகளை அவள் தோட்டங் களுக்கு அழைத்துச் செல்லுவாள். அல்லி பூத்த குளக்கரைகளிலே, ரோஜா மலர்களும் பிற பூக்களும் காற்றிலே ஊசலாடும் வேலிகளுக்கிடையே, அவர்கள் உலாவுவார்கள். தோடர்கள் வசிக்கும் ஓடம் போன்ற குடிசைகளில் ஏறி, அந்த மலை ஜாதிப் பெண்கள் விநோதமாய்ப்பாடி விசித்திரமாய் ஆடும் ஆட்டங்களை யும் காண்பார்கள். அப்போதெல்லாம், அந்தக் குழந் தைகள் அடங்கா ஆனந்தம் அடையும்.

ஏன் இந்த ஜௌரம்மாவைத் தங்களோடு சென் னைக்கு அழைத்துச் சென்று விடக் கூடாது? நகரத் தில் உள்ள நூறு வேலைக்காரிகள் சேர்ந்தாலும், இந்த ஒரு ஜௌரம்மாவுக்கு ஈடாக மாட்டார்கள். அவர்க ளெல்லாம் பேராசை பிடித்தவர்கள்; கள்ளங் கபடு நிறைந்தவர்கள். இந்த யோசனை, எஜமானியம்மா ளின் மனத்திலே உதித்ததும், இதை அவள் தன் கணவரிடம் தெரிவித்தாள். அவரும் உடனே சந்தோ ஷத்தோடு சம்மதித்தார். ஆனால், ஜௌரம்மா வரச் சம்மதிக்க வேண்டுமே? அவளென்ன, வீடு வாசல், குடி குடித்தன மில்லாதவளா? தன் கணவன் மாலி யிடம் எஜமானியம்மாளின் விருப்பத்தை அவள் தெரி வித்தாள். மாலி சிரித்துக்கொண்டு, "போடி மூடம்

பணக்காரங்களே இப்படித்தான்" என்று அலட்சிய மாகக் கூறி, மேலே பேச இடங்கொடாமல் முடித்து விட்டான்.

மறு வருஷம் அவர்கள் வந்து தங்கியபோது, எஜமானியம்மாள், ஜௌரம்மாவுக்கு ஆசை வார்த் தைகள் சொல்லி, அவள் மனத்தைக் கலைக்க ஆரம் பித்தாள். "ஏண்டி, நீ இங்கே இந்தக் குளிர்லேயும் பனிலேயும் நடுங்கிண்டு கிடக்கணுமா? பட்டணம் எவ்வளவு சுகமா இருக்கும் தெரியுமா? இன்னிக் கெல்லாம் ஊரைப் பார்த்திண்டிருந்தாலும், போரு மே. நீ வேலெக்கி வந்துடு. நல்ல சம்பளம் தரேன். உன் புருஷனும் இந்த அல்ப நிலத்தை விட்டுட்டு, பட்டணம் வரட்டும். எங்க பங்களாத் தோட்டக் காரனா இருக்கலாம்" என்றெல்லாம் சொன்னாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட ஜௌரம்மாவுக்கு, இதெல்லாம் ஏதோ கனவைப் போல் தோன்றிற்று. எஜமானியம்மாள் வர்ணித்த வர்ணனைகளை, அவளால் நம்பவே முடியவில்லை. அவை அவளுக்கு அவ்வளவு ஆச்சரியத்தைத் தந்தன. அவள் மனம் சஞ்சல மடைந்தது. ஆனால், என்ன நிர்ப்பந்தத்தினாலும், எப்படிப்பட்ட ஆசை வார்த்தைகளாலும் மாலியின் உள்ளம் மட்டில் துளிக்கூட அசையவில்லை. தான் பிறந்து வளர்ந்த கொடப மண்டலத்தை விட்டுச் செல் வதா! குளிர்ந்த மழையும், அழகிய பனியும், மணம் வீசும் காற்றும், சிவந்து கனிந்த பழங்கள் தீட்டும் பல வர்ண நிழல்களும் நிறைந்த கொடப மண்ட லத்தை விட்டுச் செல்வதா! தான் உழைத்துப் பயி ரிட்ட நிலத்தை விட்டுச் செல்வதா! பூ! இதைவிட,

அதோ அங்கே நிமிர்ந்து நிற்கும் மலை உச்சியிலிருந்து குதித்து உயிரையே விட்டு விடலாமே! இந்தக் குங்கும வர்ண பூமியே அவன் புதை குழியும், அந்த மலையைச் சூழ்ந்த பனிப் படலமே அவனது மூடுபடாமும் ஆகிவிடுவதே மேல் ஆகுமே!

ஜௌரம்மாவின் முகத்தில் எப்பொழுது பார்த்தாலும் ஒருவிதச் சிடுசிடுப்பு ஏற்பட்டது. இது வரையில் வீட்டிலே எந்தவிதமான சச்சரவும் நடந்தறியாத மாலியும், மிகுந்த வியாகுலம் அடைந்தான். ஆனால், தன் வியாகுலத்தை அவன் துளியும் வெளியே காட்டாமல் அடக்கிக்கொண் டிருந்தான். "என் பெண்சாதியின் மனசெக் கலைக்கிறாளே, அவ நாசமாப் போவ! அவளுக்கு வேணும்னா வேறொரு வேலைக்காரி வெச்சுக்கட்டும். என் பெண்சாதி இனிமே அவ கிட்ட வேலைக்குப் போக வேண்டியதில்லை" என்று திட சங்கல்பம் செய்து கொண்டான்."

ஆனால், உத்தியோகஸ்தரின் மனைவி அவ்வளவு சுலபமாய், அடங்கிவிடுகிறவளா? ஜௌரம்மா தன்னோடு கொஞ்ச காலம் மட்டில், சென்னைக்கு வந்து தங்கிவிட்டுப் போகலாமே? ஜௌரம்மா இல்லாததைப் பற்றி மாலிக்குத் துளி வருத்தம் ஏற்படுவதற்குள்ளே, அவள் திரும்பி வந்துவிடலாம் – இந்த ஏற்பாட்டுக்கு ஜௌரம்மா இணங்கும்படி செய்து விட்டால், பிறகு நிரந்தரமாய் அவளைத் தன்னோடேயே வைத்துக்கொண்டு விடலாம் என்று, எஜமானி எண்ணினாள்.

மாலிக்குக் கடுங்கோபம் வந்தது. அற்பமாய் ஆரம்பித்த விஷமம், மலை போல வளர்ந்துவிட்டது.

மகா சாதுவாய், சொன்ன சொல் தவறுமல் நடந்து வந்த மனைவி, அடங்காப்பிடாரி யாகிவிட்டாள். இயற்கையிலே மிகவும் சாந்த சுபாவ முடையவனுகையால், மனைவியைக் கடுமையாய்க் கண்டிக்க, மாலிக்கு மனம் வரவில்லை. அவளுக்கு இயற்கையான நற்குணம் மீண்டும் திரும்பிவிடும் என்று அளவற்ற நம்பிக்கை வைத்தான். ஆனுல், அவன் ஏமாந்தான்.

## 3

உத்தியோகஸ்தரின் மனைவிக்கு, கட்டுக்கடங்காத சந்தோஷம் பொங்கியது. டிரங்குகள், பெட்டிகள், கூடைகள் முதலியவை, முன்னதாகவே ஸ்டேஷனுக்குப் போய்விட்டன. அவளும் அவள் கணவனும் குழந்தைகளும், பிரயாணத்துக்குத் தயாராய், உயர்ந்த உடுப்புகள் அணிந்து அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். புறப்பட இன்னும் ஒரு மணிநேரம்தான் இருக்கிறது. ஜௌரம்மாவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஜௌரம்மாவும், சற்று நேரத்திலே, இடுப்பில் தன் சிறு மகனையும், கையில் ஒரு சின்ன மூட்டையையும் எடுத்துக்கொண்டு வந்துசேர்ந்தாள்.

“ நீ வந்ததில் எங்களுக்கு எவ்வளவு சந்தோஷம், தெரியுமா ? இந்த மட்டில், உன்னை உன் புருஷன் மடக்கி உட்கார்த்திவிடாமல் அனுப்பினுனே; அதிர்ஷ்டந்தான். ஜௌரம்மா ! நீ ரொம்பக் கெட்டிக்காரிடீ ” என்று அவளிடம் அம்மாள் சொன்னுள்.

இந்த அன்பு நிறைந்த வார்த்தைகளைக் கேட்டு, ஜௌரம்மா புன்னகை பூத்தாள். அந்தப் புன்னகை

யிலே, நன்றி ததும்பியது. அவளுடைய ஆனந்தத்தில், அவளால் பேசக்கூட முடியவில்லை. ஆனால், அது ஆனந்தம்தானா ?

எல்லாரும் ரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்கள். வீட்டை விட்டுத் தூரத்திலே போகப்போக, ஒவ்வோரடியிலும், ஜௌரம்மாவுக்குத் துயரம் மிகுந்தது. முதல் நாள் இரவு, தன் புருஷனுடன் மிகக் கடுமையாய் அவள் சண்டையிட்டு விட்டாள். அவனுடைய கோபக் குரல், இன்னும் அவள் காதிலே ஒலித்துக் கொண்டிருந்தது. வண்டியிலே செல்லுகையில், அவளது மடியிலே உட்கார்ந்துகொண் டிருந்த அவள் மகன், ஆச்சரியத்தால் கண்ணிமை கொட்டாமல் விழித்துக்கொண் டிருந்தான். அவள் குனிந்து, அந்தச் சிறுவனின் அகன்ற விழிகளை முத்தமிட்டுக் கொண்டாள். சந்தடியிட்டுக் கொண்டிருந்த மற்றச் சிறுவர்கள் எல்லாம், அங்கே இருப்பதையே அவள் மறந்தாள் ; அவர்களின் சந்தடியெல்லாம், அவளுக்கு ஏதோ வெறும் பிதற்றலாகவே தோன்றியது.

ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தாயிற்று. டிக்கட்டும் வாங்கிவிட்டார்கள். இடுப்பிலே தன் சிறுவனைச் சுமந்துகொண்டு, ஜௌரம்மா, பிளாட்பாரத்திலே நின்றுகொண் டிருந்தாள். கொஞ்சநேரத்துக்கெல்லாம், வண்டி அவளை மலையிலிருந்து இறக்கி, இதுவரையில் அவள் கண்டிராத எங்கேயோ கண்காணாத ஒரு பிரதேசத்துக்குக் கொண்டுபோய்விடும். உத்தியோகஸ்தருக்கும் அவருடைய மனைவி மக்களுக்கும் நடுவே, தான் ஏதோ ஓர் அந்நியப் பெண் மாதிரி அவளுக்குத் தோன்றியது. அவர்களெல்லாம், தன்

மனுஷ்யர்களைப் போல, அவளுக்குத் தோன்றவே யில்லை. மழை தூற ஆரம்பித்தது; அதோடு மூடு பனியும் சூழத் தொடங்கியது. இன்னும் அரைமணி நேரம்தான் இருக்கிறது; அதன்பின், வண்டி புறப் பட்டுவிடும்.

ஜௌரம்மாவின் உள்ளம் விதிர்த்தது; தலை கிறுகிறுத்தது; ஜன்னிபிடித்தவளைப் போல், அவள் கண்கள் மின்னின. உடலை நடுக்கும் குளிர் காற் றிலும் கொட்டும் மழையிலும் மூடுபனியிலும், தன்னந்தனியனாய், உதவியற்று, சோருக்கி, மாடுகளை மேய்த்து, பயிர்பச்சைகளைப் பார்த்துக்கொள்ளும் தன் புருஷனின் உருவம், அவளது மனக் கண்முன் தோன்றியது. உலகத்தையே பனிப்படலம் ஒன்று சூழ்ந்ததுபோலவும், வானமே அழுது வழிவதுபோல வும், ஜீவனற்ற பூமாதேவியின் மடிமீது மரங்களெல் லாம் இலையுதிர்ந்து கிளையொடிந்து மொட்டையாய் நிற்கும் பேய் பிசாசுகள் போலவும் அவளுக்குத் தென்பட்டன. அந்தப் பனிமூட்டத்துக்குள்ளே, வெகு தூரத்தில், ஒரு கோடியில், தன் புருஷனின் முகம் பூதாகாரமாய் வளர்ந்து, கண்களை அகல விரித்து, இவள் தனக் கடங்காமல் தன்னைக் கைவிட் டோடியதைப் பழிப்பது போலும், அவளுக்குத் தோன்றியது. அவள் நெஞ்சிலே அழுகை வந்து அடைத்துக் கொண்டது; உள்ளத்தின் ஆழத்தி லிருந்து கண்ணீர் துளித்தது. தன் சிறுவனை மார் போடு கெட்டியாய்க் கட்டியணைத்துக்கொண்டாள். மூட்டையைக் கையிலே எடுத்துக் கொண்டாள். பிளாட்பாரத்தின் வெளி வாசலை நோக்கி விரைந்து நடந்தாள். உத்தியோகஸ்தரும் அவர் மனைவியும்,

இவளுடைய விசித்திரமான செய்கையைக் கண்டு பிரமிப்புற்றார்கள். அவர்களை, ஜௌரம்மா மிக மெல்லிய குரலில் அழைத்து, "நான் வரல்லேங்க" என்றாள்.

கார்டு ஊதலை ஊதினான்.

வண்டி போய்விட்டது; அதன் புகை மட்டில், பிளாட்பாரத்தை மண்டலமிட்டுக் கொண்டிருந்தது.

உத்தியோகஸ்தரின் மனைவிக்கு அளவுகடந்த ஆத்திரம் வந்தது. ஆனால், அவர்கள் சுகமாய் உட்கார்ந்திருந்த முதல்வகுப்பு வண்டியின் மெத்தையிலே மூட்டுப்பூச்சிகள் ஓடுவதைக் கண்டு, அவைகளை நசுக்கினாள். அவைகளை நசுக்க நசுக்க, அவற்றின் நாற்றம் சகிக்காமல், அவளுடைய கோபமும் வளர்ந்தது.

கொடப மண்டலத்துக்குப் போகும் பாதையில், இடுப்பிலே குழந்தையும் கையிலே மூட்டையுமாய், ஒரு பெண் நடந்துகொண்டிருந்தாள். அவள் வெகு வேகமாக நடந்துகொண்டிருந்தாள். காற்றிலே பறக்கும் பட்சிபோல் இருந்தது அவள் தோற்றம்.

## 4

பனிமூட்டம் விலகியது. ஜொலிக்கும் கோஹினூரைப்போல், தன் குளிர்ந்த கிரணங்களை, குன்றிலும் பசிய வனங்களின்மீதும், சூரியன் பொழிந்து கொண்டிருந்தான். குறும்புத்தனமுள்ள ஒரு சிறுமியைப் போல், மரங்களைச் சுற்றிச் சுற்றி வந்தும்,

இலைகளைச் சலசல என்று அசைத்தும், நீரிலே சிற்றலைகள் எழுப்பியும், ரத்தினம்போல் மின்னிய மலர்கள்மீது மோதிச் சிரித்தும் காற்று அலைந்துகொண்டிருந்தது.

அந்தச் சிறிய தோட்டத்தில், அவன் உருளைக் கிழங்குகளைத் தோண்டிக்கொண் டிருந்தான். நேற்றிருந்த குதூகலமும் ஊக்கமும், இன்று அவனிடம் காணப்படவில்லை. அவனது நடமாட்டத்தில் ஒரு சோர்வு தோய்ந்திருந்தது; ஏதோ ஒரு பொம்மையைப் போல் அவன் கைகள் தோண்டிக்கொண் டிருந்தன. பாதி நிறைந்த ஒரு சாக்குப் பை, அவன் பக்கத்திலே கிடந்தது. அவனுடைய கண்கள், சிரத்தை யின்றி, சற்று நேரத்துக் கொரு தரம் அதைப் பார்த்தன.

மின்சாரச் சங்கு ஊதி, மணி பனிரண்டு என்று தெரிவித்தது. சங்குச் சத்தம் மெலிய மெலிய, அவன் மனத்திலே ஓர் ஏக்கம் பொங்கியது. குனிந்த உடம்பு நிமிர்ந்து எழுந்தான். மண்வெட்டியை வீசி எறிந்தான். பாதி நிரம்பிய சாக்கின்மீது உட்கார்ந்தான். பெருமூச்சு விட்டான். வழக்க வாசனையால், திரும்பிப் பார்த்தான்.

அவன் கண்கள், ஆச்சரியத்தால், இமை கொட்டாமல் மலர்ந்தன. தன் மனைவி அதிவேகமாய்த் தன்னிடம் நெருங்கி வருவதை அவன் கண்டான்.

எழுந்தான். காற்றிலும் மழையிலும் வெயிலிலும் அடிபட்டு ஒட்டிக் குழிந்த அவனுடைய கன்னங்கள், ஒளியும் மென்மையும் பெற்றுப் பிரகாசித்தன. கரைபுரண்ட உணர்ச்சியோடு, அவளை மார்

புறத் தழுவிக்கொண்டான். மென் காற்றின் சல சலப்பைப் போல், அவன் குரல், அவள் காதிலே ஒலித்தது.

“நீ ஏன் போகல்லே?” என்று கேட்டான்.

“நான் எப்பிடிப் போவேன்?” என்று, மெல்லிய குரலில் சொல்லி, வெட்கமும் அன்பும் கலந்தவளாய், அவள் அவன்மீது சாய்ந்தாள்.

அவன் பதிலே சொல்லவில்லை. மெல்ல அவள் முகவாயைப் பிடித்து, முகத்தை நிமிர்த்தி, அன்போடு முத்தமிட்டுக்கொண்டான்.

அவன் இறுகி அணைத்த அணைப்பிலே, சுற்றிலு மிருந்த மலைகளின் வலிமையையும் மரங்களின் அமைதியையும் அவள் அனுபவித்தாள்; அவள் முகத்தில் தோய்ந்திருந்த பனி முத்துக்களில், வாழ்க் கைப் பேரின்பத்தையும் மண்ணின் பேரெழிலையும் அவன் பருகினான்.

# கதவின் சாட்சி

என் பாட்டி முதல்தரமாய்க் கதைகள் சொல்லு வாள். நான் சின்னப் பையனு யிருந்தபோது, எத்தனையோ கதைகள் சொல்லி யிருக்கிருள். அவற் றிலே ஒன்று, ஆச்சரியப்படும்படி மிகத் தெளிவாய், இன்றுங்கூட எனக்கு ஞாபக மிருக்கிறது. கதைகள் ஒன்றும் அவ்வளவு பிரமாத மில்லே. ஆனுல், அவள் அவைகளிலே வைத்திழைத்த ஞான மணிகளும், பளிங்குபோல் பளிச்சென்று காட்டிய நீதி போதனே களும் மதிப்பரிய மாணிக்கங்க ளாகும். அப்போது, எனது உலகம் வேறுவிதமானது. அந்தப் பிள்ளேப் பிராயத்தில், வெள்ளேயுள்ளமும் எதையும் நம்பும் சுபாவமும் கொண்டிருந்தேன். இப்போது, எனது உலகம் மாறிவிட்டது. இந்த வாலிபப் பருவத்திலே, மூர்க்கத்தனமும் தெய்வ நிந்தையும் நிறைந்திருக் கிறேன். என் வயதொத்த பிற வாலிபருடன் சேர்ந்து, தெய்வங்களேப் பழிக்கிறேன்; தெய்வங்கள் போல் பாவிக்க வேண்டிய பெரியோரைப் பழிக்கிறேன். இதெல்லாம், நம் குற்ற மன்று. தேவர்கள்தான் எப்படிப்பட்டவர்கள்? ஈக்களேப் போல் நம்மைப் பிடித்துக் கொன்று விளேயாடும் துஷ்டக் குழந்தைகள் தானே அந்தத் தேவர்கள்? நாம் அவர்களே ஏன் பழிக்குப் பழி வாங்கலாகாது? நமக்குள்ளே துணிச் சல் உள்ளவர்கள், அந்தத் தேவர்களின் அபிஷேக தைலத்திலே விழுந்து அதை ஏன் அசுத்தம் செய்ய லாகாது?

நான் எங்கெங்கோ சுற்றுகிறேனே; என் பாட்டியையும் அவளது கதையையும் பற்றி அல்லவா சொல்ல வந்தேன்? எதையும் நம்பும் சுபாவம், அப்போது காலைக் கதிரவன்போல் என்னிடத்தே உதித்திருந்தது; அந்த இளம்பிராயத்திலே, அவள் சொன்ன கதை அது. என் ஜீவிய நாள் முழுவதும், இளம் பருவமென்ற காலையாகவே இருந்திருக்க லாகாதா! அப்படி யிருந்திருந்தால், அதன் குளிர்ந்த ஒளி, நம்மீது வீசிக்கொண்டே யிருக்குமே; புதிதாய்ப் பிறந்த குழந்தையின் கண்களிலே நாம் காணும் வியப்பை, அது நமக்கு அளித்துக்கொண்டே யிருக்குமே—இதுதான் எனது தீராத வருத்தம்.

கிழவர்கள் சென்ற காலத்தைச் சேர்ந்தவர்கள். என்றாலும், அவளுடைய வார்த்தைகள் இன்னும் என் செவிகளிலே ஒலித்துக்கொண் டிருக்கின்றன. எத்தனையோ வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவங்களை, நேற்றுத்தான் நிகழ்ந்தவைபோல், நம் செவிகள் ஞாபகம் வைத்திருக்கின்றன; நேற்று நிகழ்ந்தவைகளையோ மறந்துவிடுகின்றன.

"வாழ்விலே நிகழ் காலம் என்பது—இதோ இந்த நிமிஷமுங்கூட—எங்களுக்கு வெறும் சூன்யமேயாகும். திக்கற்றவர்களாய், இருளிலே அதை நாங்கள் தட்டித் தடவித் தேடுகிறோம். இதைத்தான், வாலிபம் நிரம்பிய நீங்கள், கிழத்தனம் என்றோ மடமை என்றோ மாய்மாலம் என்றோ பரிகசிக்கிறீர்கள்" என்று அவள் சொல்லுவாள்: "அப்போது, எனக்கு வயது இருபத்தைந்து......" இங்கே அவள் சிறிது நிற்பாள். அவளுடைய முதிர்ந்த கண்களுக்கு

முன்னே, இறந்த கால சம்பவங்களின் நிழல்கள், விர் என்று பறந்தோடும்; அவளுடைய உள்ளத்திலே நிகழும் சிந்தனைகள், அநேகமாய் என் காதிலேகூடக் கேட்கும். அருமையான புருஷனைப் படைத்து எவ்வளவு சந்தோஷமாய் வாழ்ந்திருந்தாள்! தேவர்களின் அன்பன் அவர்; அதனால்தான் அவரைத்தேவலோகத்துக்கு இளமையிலேயே அவர்கள் அழைத்துக் கொண்டு விட்டார்கள்! புருஷனை யிழந்த பின்பு, ஒரு தலைமுறைக்கு மேலான சந்ததியின் களிப்பிலும் கண்ணீரிலும் – களிப்பைவிடக் கண்ணீரே அதிகம் – அவள் எப்படியெல்லாம் கலந்துகொண் டிருக்கிறாள்! இதையெல்லாம் அவள் எண்ணுவாள்.

பிறகு, அவள் சொல்லுவாள்: "எங்கள் கிராமத்தில் சுமார் ஐம்பது பிராம்மண வீடுகள் உண்டு. அவைகளில் நாலைந்தைத்தான் நல்ல பணக்கார வீடுகள் என்று சொல்லலாம். பதினைந்து இருபது வீடுகள் நடுத்தரமானவை. மற்றவை யெல்லாம் ஏழை வீடுகள். நாலைந்து பணக்கார வீடுகள் என்று சொன்னேனே, அவைகளில் ஒன்றின் எஜமான், பசுவைப் போல் பரம சாது. இது எங்கள் அபிப்பிராயம்— அதாவது, ஊரில் உள்ள பெண்களின் அபிப்பிராயம். ஆனால், அவருடைய சம்சாரம் லட்சுமியோ...! அட ஈசுவரா! அவளது ஜனன காலத்தில் ஏதோ திடீர் என்று ஆச்சரியக் கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால்தான், அவள் தப்பிப்போய்ப் பெண்ணாய்ப் பிறந்து விட்டாள். எப்பொழுது பார்த்தாலும், ஆலாய்பறந்துகொண்டிருப்பாள்; திருப்தி என்பதே கிடையாது. ஆண் பிள்ளைப் பாப்பாத்தி. தன்

அகமுடையானின் பௌருஷம் பூராவையும், தான் இழுத்துக் கொண்டு விட்டாள். தன்னிட மிருக்க வேண்டிய பணிவை, அவரிடம் ஒப்படைத்து விட்டாள். அவள் மிகவும் சாமர்த்தியமான குடித்தனக்காரி. தன் திறமையிலே அவள் மிகுந்த பெருமை கொண்டிருந்தாள். தன் அதிகாரத்துக்கு உட்பட்ட ஜனங்களை, கண்ணிலே விரல் கொடுத்து ஆட்டிவைக்கும் சாமர்த்தியம் உடையவள். அவளுடைய அதிகாரத்துக்கு விளம்பரமாக இடுப்பிலே கொத்துச் சாவிகள் தொங்க, அவள் வெகு கம்பீரமாக நடந்து கொள்வாள். திண்ணை பெருக்குவது முதல் அடுப்பங்கரையிலே சமைப்பது வரையில் சகல வேலைக்காரிகளின் வேலையையும் பார்வையிட்டுக் கொண்டே அவள் நடக்கும்போது, வேலைகளெல்லாம் அப்பழுக்கில்லாமல் நடைபெறும். தன் பதவியை ஏதோ தெய்வநியதியாலேயே தான் பெற்றிருப்பதாக, அவள் மதித்தாள். ஒவ்வொரு வஸ்துவுமே அந்த நியதிப் பிரகாரம் அதததற்குரிய இடத்தில் இருக்கும்படியும் அவள் பார்த்துக் கொள்வாள். அவளிடம் ஒரு வேலைக்காரி ஒரு வாரத்துக்குமேல் தங்குவது அபூர்வம். ஆனால், அவளுக்கு மூன்று வேலைக்காரிகளும் ஒரு வேலைக்காரனும் உண்டு. இந்த வேலைக்காரருக்கு, அவள் நாள் பூராவும் வேலை கொடுப்பாள். அவளுடைய குடும்பத்துக்கு, தாலூக்கா பூராவும் பல இடங்களில் நிலங்கள் உண்டு. ஆதலால், தூர தூர வயல்களிலிருந்தெல்லாம், நூற்றுக்கணக்கான வண்டிகளில் அவளுக்கு நெல் வரும். அப்போது, அந்த நெல் குவியலைப் புடைக்கவும் அளக்கவும் களஞ்சியத்தில் கொட்டவும் ஏராளமான வேறு பல வேலைக்காரர்களை, அவள்

அமர்த்திக் கொள்வாள். அவர்களின் ஊழியத்துக்கு, முதலிலே அவள் முணுமுணுக்காமல் கூலி கொடுத்து வந்தாள். ஆனால், காலம் செல்லச்செல்ல, குடும்பம் பெருத்துக்கொண்டே வந்தது; வருஷந்தோறும் ஒரு பிள்ளையோ பெண்ணோ பிறந்து கொண்டேயிருந்தது. பிள்ளையானால், படிப்புச் செலவு; பெண்ணானால். கல்யாணச் செலவு! அந்தச் செலவுகளைப்பற்றியெல்லாம் நினைக்கும்போது, லட்சுமிக்குத் திகில் உண்டாயிற்று. வேலைக்காரர்களின் கூலியில் பிடித்துக் கொள்ள ஆரம்பித்தாள்; அந்த வழக்கத்தில் இறங்கிய அவள், மெள்ள மெள்ள அவர்களது கூலியை மோசம் செய்யக்கூடத் தொடங்கி விட்டாள். உழைத்த கூலியை மோசம் செய்வதிலே, அவளுக்குப் பரம ஆசையும் உண்டாகி விட்டது. தன் வேலைக் காரரின் எண்ணிக்கையைக் குறைத்து, இரண்டேயிரண்டு வேலைக்காரிகளை மட்டில் வைத்துக் கொண்டாள். அவர்களில் ஒருத்தி குருடி; மற்றொருத்தி கிழவி: ஆனால், வஞ்சக மில்லாமல் உழைப்பார்கள். லட்சுமி அந்த இரு வேலைக்காரிகளையும், தினந்தோறும் சகலவித வேலைகளும் வாங்கி, கசக்கிப் பிழிந்து விடுவாள். வீட்டிலே எந்த மூலையிலாவது ஒரே ஒரு தூசி குப்பை கிடந்தாலும் போதும்; அந்தத் துர்ப்பாக்கிய வேலைக்காரிகளுக்கு, அந்தக் குப்பையிலும் மகா ஆபாசமான வசவு அபிஷேகம் நடக்கும்.

" ஊரெல்லாம் இதைப்பற்றி வம்பளந்தார்கள். ஊர் வம்பைப்பற்றி, லட்சுமி துளியும் லட்சியம் செய்யவில்லை. இப்போது மாதிரிதான், அப்போதும் வேலைக்காரப் பெண்கள் வயிறு நிரப்ப வேண்டியிருந்தது. ஆனால், ஒரு வித்தியாசம். தங்களுடைய ஒரு

சாண் வயிற்றை நிரப்ப, தங்கள் ஆசை நாயகரைவிட எஜமானிகளையே, அவர்கள் அதிகமாய் அந்தக் காலத்தில் நம்பினார்கள். இப்போதோ அவர்கள் கௌரவமாய்க் கல்யாணம் செய்து கொள்ளுகிறார்கள். இது கிடக்கட்டும்; இது ஏதோ சில்லறை விஷயம். அந்த ஒரு சாண் வயிற்றைச் சுருக்கிச் சுருக்கி வற்றச்செய்து விடுவாள் லட்சுமி. அதற்குமேல் சுருக்கவே முடியாது. இப்பேர்ப்பட்ட எஜமானி லட்சுமி என்று காட்டவே, இதை நான் சொன்னேன்.

" இவ்வாறு வருஷங்கள் சென்றன. சிக்கனம் சிக்கனம் என்று பணத்தைச் சேர்ப்பதிலேயே, அவளது உடலெல்லாம் இளைத்து விட்டது. 'சிக்கனம்' என்ற அந்த ஒரு வார்த்தை, ஏதோ பிசாசு போல் வீட்டிலே அலறிக் கொண்டிருந்தது. சமயலறை அலமாரியிலே பளபள என்று துலங்கிக்கொண்டிருக்கும் பாத்திரங்களும் சரி, ரேழியிலே கிடக்கும் ஒரு ஜதை பெஞ்சிகளும் சரி, வாசற்படியிலே போவோர் வருவோரின் பாத தூசியை ஏந்திக் கொண்டு கிடக்கும் தரைச்சேலையும் சரி கருமித்தனமான சிக்கனக் கொடுமையைப் பற்றியே முணு முணுப்பது போல் இருந்தது. 'இவ்வளவு கருமித்தனமா? இவ்வளவு செல்வம் கொழித்தும்,இவ்வளவு கருமித்தனமா? நம்பவே முடியவில்லையே!' என்று கிராமத்தாரில் சிலர் கூறினார்கள். 'என்ன கருமித்தனம்! என்ன அற்பத்தனம்! மகா அற்பத்தனமாக அல்லவா நடக்கிறாள்!' என்று, கொஞ்சம் தைரியசாலிகளான ஸ்திரீ புருஷர்கள் பேசிக்கொண்டார்கள்.

"அந்தப் பேச்செல்லாம் திடீரென்று நின்றது. லட்சுமி இறந்தாள் என்ற சேதி கேட்டு, கிராமத்தார் பூராவுமே திடுக்கிட்டார்கள். ஏதோ சொற்பக் காய்ச்சல் வந்தது. லட்சுமி அதைச் சட்டை செய்யாமல், புது வருஷப்பிறப்பிலே, கோயில் குளத்தில் ஸ்நானம் செய்தாள். அதிலே பிடித்த ஜலதோஷம், கப ஜுரமாய் மாறிற்று. புருஷனுக்குத் தெரிந்தால் வைத்தியனைக் கூட்டி வந்து விடுவாரே, வைத்தியன் வந்தால் பணம் கேட்பானே என்ற பயத்தால், தனது வியாதியை லட்சுமி ஒளித்து ஒளித்துத்தான் வந்தாள். ஆனால், இனி ஒளிக்க முடியாது என்ற நிலைமை வந்து விட்டது. என்றாலும், தன் வாழ்நாளின் கடைசி நிமிஷம் வரையில் சிக்கனம் பிடித்து விட்டோம் என்ற திருப்தியோடு, அவள் மாண்டாள்.

"மரண சமயத்தில் அவளுக்கு வயது நாற்பது. சில மாதங்களுக்கு முன், தன்னுடைய மூத்த மருமகளை வீட்டுக்கு அழைத்து வந்தாள். அவள் ஆட்டி வைத்தபடி ஆடியதால், மௌட்டிக மடைந்தவர் அவளுடைய புருஷன். உலகமே தெரியாத அந்தப் புருஷனைத் தவிக்க விட்டு, இவ்வளவு இளம்பிராயத்திலே அவள் மாண்டுபோனது மகா பரிதாபமாயிருந்தது. அவள் பல குழந்தைகள் பெற்றாள். சில குழந்தைகளைக் குழியிலும் போட்டாள்; அவைகளைக் குழியில் போட்டபோது, அவள் மனம் கலங்கவில்லை; தீரமாகவே இருந்தாள். உற்சாகம் வந்த சமயங்களிலே, 'பிள்ளை பெறுவதும் குழியில் போடுவதும் என் குடும்பக் கடமைகளிலே ஒன்று' என்று அவள் தமாஷாகச் சொல்வதுண்டு. லட்சுமி தன் துக்கத்தை

வெளியே விடாமல் அடக்கிக்கொள்ளும் நெஞ்சழுத் தக்காரி.

"பிரேதம் எடுக்கு முன்னேயே, பல புருஷர் களும் பெண்களும் அந்த வீட்டில் துக்கங் கேட்கக் கூடினார்கள். அவர்களில் நானும் ஒருத்தி. கிராம வாசிகளுக்குக் கள்ளங்கபடு கிடையாது. யாருக்கா வது ஆபத்தோ துக்கமோ நேர்ந்தால், எல்லாரும் ஒன்றுகூடி விடுவார்கள். தங்களுடைய மனஸ்தா பங்களை யெல்லாம் மறந்து போவார்கள்; சண்டை சச்சரவுகளை யெல்லாம் ஒருபுறமாக மூட்டைகட்டி வைத்துவிட்டு, அபவாதங்களை யெல்லாம் புதைத்து விடுவார்கள். அந்தச் சமயத்துக்காவது, வேதாந்த மாகத் திரும்பி, கருணையுடனும் அழகாகவும் நடந்து கொள்ளுவார்கள். ஆத்திர சுபாவமும் விஷம நாவும் திடீரென்று அடங்கிப் பணிவது, ஓர் அற்புதமாகும். சாவு வீட்டிலே, பெண்கள்தான் அதிக வேதாந்தமாய் நடப்பார்கள். அனுபவம் இல்லாத இளம் பெண்கள், மௌனமாய்க் கண்ணீர் விடுவார்கள். கிழவிகளும் அமங்கலிகளும், உண்மையான துக்கக் குரலிலே, நீண்டு, தீனமாய் ஒப்பாரி வைப்பார்கள். வெளியி லுள்ள புருஷர்கள், மூங்கிலையும் தென்னைமட்டை களையும் கொண்டு பாடை முடைவார்கள்.

"இறந்த பெண்ணின் நெருங்கிய சிநேகிதியும், அயல் வீட்டுக்காரியுமான ஒரு கிழவி வந்தாள். அவள் எத்தனையோ சாவுகளைப் பார்த்துப் பார்த்து அனு பவம் நிறைந்தவள். அரும்பிலே உதிர்ந்த குழந்தை கள், மலரிலே வாடிய வாலிபர், கனிந்து விழுந்த கிழ வர் ஆகிய பலவிதச் சாவுகளையும் கண்டவள் அவள்

அந்தக் கிழவியே பிரேதத்தை ஆயத்தம் செய்தாள். மெல்ல மெல்ல விறைப்படைந்து வரும் அந்தத் தேகத்தின் மேல், குளிர்ந்த ஜலத்தை ஊற்றி, அவளைக் கழுவிக் குளிப்பாட்டினுள். நாங்கள் எல்லோரும், பயமும், பக்தியும், உள்ளத்திலே ஒரு பரபரப்பும் நிறைந்தவர்களாய், சூழ்ந்து நின்றேம். பிறகு, அந்தக் கிழவி. லட்சுமியின் விலையுயர்ந்த சேலை ஒன்றைக் கொண்டுவரச் சொன்னுள். கல்யாணங்களிலே தரித்துப் புனுகு ஜவ்வாது வாசனைகள் வீசும் புதுச்சேலையொன்றை, மருமகள் கொண்டு வந்தாள். அதை லட்சுமியின் உடம்பிலே உடுத்தி, மங்களகரமான குங்குமப் பொட்டணிவித்து, அவளுடைய தலையிலே இன்னமும் அடர்ந்து நிறைந்த கட்டுக் கூந்தலிலே, பளிச்சென்று ஒளிசெய்த மல்லிகைப் பூக்களை அள்ளிச் சொருகி விட்டாள். பின்பு, ஒரு வாழைப் பழச் சீப்பையும் வெற்றிலை பாக்கையும், லட்சுமியின் மடியிலே, கிழவி கட்டி விட்டாள். ஆஹா! அந்தக் கடைசி அலங்காரம்தான் என்ன அழகா யிருந்தது! லட்சுமி சுமங்கலியாய் மாண்டாள்; அவள் நித்திய சுமங்கலி யாகிவிட்டாள்!

"பிறகு, கிழவி ஒதுங்கி நின்றுள். புதிய லட்சுமியைப் பார்த்து, கர்வம் நிறைந்த வொரு புன்சிரிப்பு, கிழவியின் முகத்திலே பிரகாசித்தது. மரணத்தினுல் பரிசுத்தமாகி, மாசற்று விளங்கினுள் லட்சுமி. அவளுக்குப் புதியதொரு வாலிபம் உண்டாகிவிட்டது. இப்போது உன் முகத்தை எவ்வளவு தெளிவாகக் காண்கிறேன்? இதேபோல, அப்போது, லட்சுமியின் முகத்திலே ஒரு கன்னித் தோற்றத்தைக் கண்டேன்.

அதிலே வான ஒளி ஒன்று வீசியது. விசித்திரமான துக்க உணர்ச்சி யொன்று எங்களை ஆட்கொண்டிருந்திராவிட்டால், பாதி திறந்த உதடுகளுடனும், பாதி மூடிய கண்களுடனும், அவள் தனது மணவறை மஞ்சத்திலே உறங்குகிறு ளென்றே சொல்லியிருப்போம். இப்படி, அழகிய மரண அலங்காரத்தோடு அவள் கிடந்தாள்; உற்ருர் உறவினரெல்லாம் மிக அருகிலேயிருந்தும், அவர்களுக்கெல்லாம் எட்டாதவளாகக் கிடந்தாள். ஆனல், அவளுடைய புருவங்கள் சிறிது சுளித்துக்கொண் டிருந்தன. சாவிலே மகா வருத்தம் கொண்டும், சிறிதும் இஷ்ட மில்லாமலுமே, அவள் உயிர் நீத்திருக்கிருள் என்பதை, அவளது அந்தப் புருவச் சுளிப்புக் காட்டியது. கண்ணீர் விட்டுக் கதறி யழைக்கும் தன் குழந்தைகளின் குரல் கேட்டு, அவள் விழித்தெழுந்து பதிலளிப்பாளோ? அன்றி, தன் புருஷனின் பரிதவிப்புக்கு இரங்கிக் கண் விழிப்பாளோ? என்ன பைத்தியக்கார எண்ணங்கள்! மரண காலத்திலே மனித இதயங்கள், உயிரற்ற தரிசு நிலங்க ளாகிவிடுகின்றன; மீண்டும் அவை, தம் ஜீவப் பிரகாசத்தையும் அருளையும் அடையச் சிறிது நேரம் ஆகிறது.

"பாடை தயாராகிவிட்டது. மீண்டும் ஒருமுறை ஒப்பாரியும் மாரடிப்பும் மழையெனக் கிளம்பி ஓய்ந்தன. பிரேதத்தை வெளியே யுள்ள பாடைக்கு எடுத்துச் செல்ல, நான்கு புருஷர்கள் வந்தார்கள். அதைத் தூக்கி, தணியப் பிடித்துக்கொண்டு, வாயிற்புறமாய் நடந்தார்கள். வாயிற்படி யருகே சென்றதும், திடீரென்று நின்று, லட்சுமியின் உடலத்தை வெற்றுத் தரையிலே நழுவ விட்டார்கள்.

“அதிவிரைவாய்த் திடீரென்று இந்தச் சம்பவம் நிகழ்ந்ததால், கூடியிருந்தோர் திகைப்புற்றூர்கள். அவர்களின் திகைப்புத் தெளிந்து, ‘இதென்ன விஷயம்?’ என்று அந்தப் புருஷர்களைக் கேட்கச் சில நிமிஷ நேரம் ஆயிற்று. அந்தச் சில நிமிஷமும், பல மணி நேரம் போல் எங்களுக்கெல்லாம் தோன்றியது. ஆனால், பிரேதத்தை எடுத்துச் சென்ற புருஷர்கள், பதில் சொல்லவில்லை; திக்பிரமைகொண்டு, வாயடைத்துப் போன ஊமைகள் போல் தோன்றினார்கள்.

“கிரியை நடத்திவைக்க வந்த புரோகிதர் திடுக்கிட்டுப் போனார். அப்போது அவருடைய முக விகாரத்தைப் பார்க்கவேண்டுமே! அதை நான் ஒருநாளும் மறக்கமாட்டேன். அக்கினிச் சட்டியைத் தூக்கிக் கொண்டு நின்ற புத்திரன், கண்ணீர் சொரிந்தவண்ணம், சட்டியைக் கீழே விட்டுவிட்டான். பெண்களெல்லாம் திகில் சூழ்ந்ததொரு மௌனம் சாதித்தார்கள். எந்த நிமிஷத்திலே அவர்களுடைய துக்கம் மடை யுடைத்துக்கொண்ட வெள்ளம்போல் குமுறிக் கொண்டு வெளி வருமோ என்று அஞ்சும்படி யிருந்தது. மகா பயங்கரக் குழப்பமொன்று நேர்ந்ததை, சகலரும் ஒரு கணத்தில் கண்டுகொண்டார்கள். இந்தச் சமயத்திலே, ஒரு கிழவனார் முன் வந்தார். பிரேதத்தைத் தூக்கியவர்களை, அமைதியான அதிகாரக் குரலிலே, அவர் கேட்டார்: ‘பிரேதத்தை ஏன் இம்மாதிரி கீழே போட்டீர்கள்? மழுப்பாமல், நேரே பதில் சொல்லுங்கள். சீக்கிரம் கூறுங்கள்.’

“பிரேதத்தைத் தூக்கியவர்கள், நிமிர்ந்து நின்றார்கள். ஆனால், அவர்களுடைய முகங்கள் கவிழ்ந்

தன. கிழவனாரின் அதிகாரத் தொனியைக் கேட்டதும், அந்த நால்வரில் ஒருவரின் வாய் திறந்தது. அவர் சொன்ன பதிலாவது: 'கதவடியில் ஏதோ ஒன்று தோன்றி, எங்களை வழி மறித்துக்கொண் டிருக்கிறது. மிகக் கறுப்பாகவும் பிரம்மாண்டமாகவும், அது நின்றுகொண் டிருக்கிறது.'

"மற்ற மூவரும் நடுங்கிக்கொண்டே, 'ஆம்' என்று தலையசைத்தார்கள்.

"'கறுப்பாம்! சுவர்போல் பிரம்மாண்டமாம்! அட போடா மடையர்களே!' என்று கர்ஜித்த கிழவனார், கதவைத் தாண்டி உள்ளே செல்வதற்காகப் பாய்ந்தார். பாய்ந்த கிழவனார், மெய்நடுங்கிப் பயந்து கூச்சலிட்டுக் கொண்டு, சட்டென்று அப்படியே நின்றுவிட்டார். அந்தக் கறுத்த பிரம்மாண்ட உருவம், அவரது முகத்திலே பளீரென்று ஓர் அறை விட்டதாகத் தோன்றுகிறது. என்றாலும், கதவுகள் மட்டில் ராஜபாட்டையாகத்தான் திறந்து கிடந்தன. அப் போது மாலை மூன்று மணி யிருக்கும். கோடைகால சூரியன், பளிச்சென்று வானத்திலே பிரகாசித்துக் கொண்டிருக்கிறான்.

"ஏதோ தெய்வக் கோளாறென்று பயந்து, சகலரும் மௌனம் சாதித்தார்கள். பிறகு, கிசுகிசு என்று பேசிக்கொண்டார்கள். ஜோதிஷரைக் கூப்பிடுங்கள் என்று ஒருவர் யோசனை சொன்னார். பிரேதம் குளிர்ந்து, விறைத்துவிட்டது; மாந்தளிர் போன்ற கருநீல வர்ணம் அதன் முகத்திலும் செவிகளிலும் படர்ந்து, மேலும் அதிகமாய்க் குளிர்ந்து, விறைப் படைந்தது. அப்போது, வீட்டுக்குள்ளிருந்து ஒரு

குரல் புறப்பட்டு, சகல கிசுகிசுப்பு ஹேஷ்யங்களையும் அமர்த்தி விட்டது.

"பிரேதத்தை அலங்கரித்த அந்த விதவையின் குரல்தான் பேசிற்று: 'எனக்குத் தெரிந்துவிட்டது. அந்த ரகஸ்யம் என்னைக் கதி கலங்கச் செய்கிறது. அட ஈசுவரா! அதுவாய்த்தான் இருக்குமோ? ஆமாம்; அதுவாய்த்தான் இருக்கவேண்டும்.'

"ஜனங்களெல்லாம் ஏகோபித்து, 'தாயே! அதென்ன சொல்லேன்? இந்தக் கிராமத்திலே உன்னை விடப் புத்தியில் சிறந்த வேறு யார் இருக்கிறார்கள்?' என்று கேட்டார்கள்.

"கைம்பெண் தன் தொண்டையைக் கனைத்துச் சரி செய்துகொண்டு, பயத்தால் தழதழத்த குரலுடன் கூறினாள்: 'லட்சுமி ஒரு கடனைத் தீர்க்கவில்லை. அந்தக் கடனைச் செலுத்தி முடித்த நிமிஷத்திலேயே, அவள் வெளியே போய்விடலாம். உயிரோடிருக்கும் போது, அதை அவள் செலுத்தவில்லை. மரணத்தி லாவது செலுத்தித் தீர்க்கவேண்டும். ஏனென்றால், எம தர்மன் மகா பலவான். யாரும் அவனை ஏமாற்ற வோ, மீறி நடக்கவோ முடியாது. அவளுடைய அந்தக் குருட்டு வேலைக்காரி, தனக்கேற்பட்டுள்ள ஜயத்தை அறிய மாட்டாள். அதுவும் எப்படிப்பட்ட ஜயம்! இருபது வருஷங்கள், அவள் லட்சுமிக்கு உழைத்தாள்; முதிர்ந்த தன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்து, அவள் உழைத்தாள். அவளது கூலியை ஏமாற்றி விட்டாள் லட்சுமி. அவ்வளவு தூரம் தன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்து வேலை செய்தும், இவ்வளவு சொற்பமான கூலிதானா என்று அவள் ஆச்சரி

யத்துடன் கேட்பாள். வழக்கமாக எல்லாருக்கும் கொடுக்கும் கூலியைவிட இது அதிகம் என்று, அவளுக்கு உறுதி கூறி விடுவாள் லட்சுமி. ஒன்றும் புரியாமல் திகைத்த அந்த ஏழை, அந்தி வேளையிலே வீடு செல்லும்போது, 'வாடிக்கையான கூலியைவிட எனக்கு அதிகமாய்க் கொடுப்பதாய், நீ சொல்லுகிறாய். ஆனால், நான் பார்த்துத் திருப்தியடைய, எனக்குக் கண்ணில்லை. எனக்கென்னவோ மோசடி நடப்பதாகவே தோன்றுகிறது. இந்த நிலைப்படிதான் எனக்குச் சாட்சி' என்று சொல்லி, நிலைப்படிக் கட்டையைத் தடவி விட்டுச் செல்வாள். வேலைக்காரி இப்படிப் புகார் செய்த ஒரு சமயம் - ஏன், பல சமயங்கள் - நான் கூடவே இருந்திருக்கிறேன். கஷ்டப்பட்டு உழைத்த வேலைக்காரியின் கூலியை, அதுவும் குருடியான ஒருத்தியின் கூலியை, இப்படி அல்பத்தனமாய் ஏமாற்றுவது பாவமென்று, லட்சுமியை நான் கண்டித்த துண்டு. லட்சுமி கள்ளத்தனமாய்க் கண்ணைச் சிமிட்டி, விஷமமாய் நாவைச் சொடுக்கி, என்னை அப்பால் போகுமாறு சமிக்ஞை செய்துவிடுவாள். அந்த வேலைக்காரியைக் கூப்பிடுங்கள்; பல வருஷங்கள் வருந்தி உழைத்த அவளுடைய கடனைச் செலுத்தித் தீருங்கள்.'

"லட்சுமியின் கணவன் சாந்தமாய், 'எப்படிச் செலுத்துவது?' என்று கேட்டார். அந்தக் குரலிலே வெட்கமும் துயரமும் கலந்திருந்தன.

"கைம் பெண் கூறியதாவது: 'களஞ்சியத்தைத் திறவுங்கள். அரிசியை — அவள் உதிரமும் எலும்புங்

குலுங்கக் குத்திய, பழுப்பான, பிரகாசமான அரிசியை-கொண்டு வாருங்கள். இந்தக் கதவின் உச்சியைத் தொடும் வரையில், அதை இங்கே கொட்டிக் குவியுங்கள். அந்த அரிசிக் குவியலை எடுத்துக்கொண்டு போகும்படி, ஏழை வேலைக்காரியிடம் சொல்லுங்கள். ஒரு மணி கூடப் பாக்கி யில்லாமல், அவள் அந்த அரிசியை எடுத்துக் கொண்டு போய்விட்டாளானால், வழி சம்பூர்ணமாய்த் திறந்துவிடும்.'

"கைம்பெண்ணின் யோசனையை நிறைவேற்றினார்கள். குருட்டு வேலைக்காரி, தனக்கு வந்த நல்லதிர்ஷ்டத்தைக் கண்டு ஆச்சரிய மடைந்தாள்: தன் எஜமானியின் வைபவமான ஈமச் சடங்கிலே தனக்குக் கிடைத்த தானமோ இது என்று அவள் எண்ணினாள்.

"நிலைப்படியும் அற்புதமாய்த் தன் சாட்சியக் கடமையைப் புரிந்தது. கன்னங் கரிய, சுவர் போன்ற அந்தப் பிரம்மாண்ட உருவமும், நிலைப்படிக்கு மேலே எழும்பி மறைந்தது. லட்சுமி வெளியேறி, மயானம் சென்று, உலகிலே ஒன்றுக்கும் உதவாத ஒரு பிடி சாம்பலானாள். ஆனால், அவள் எப்படிப் பெருந்தன்மையைக் கொன்று, அல்பத்தனத்தை அரியாசனமேற்றி விட்டாள் என்று, கிராமத்தோரெல்லோரும் பேசிக்கொண்ட பேச்சுத்தான் நின்றது.

"இவ்வளவு தான். நான் வாலிப மனைவியாயிருந்த காலத்திலே இதெல்லாம் நடந்தது. நாற்பது வருஷங்கள் கழிந்து விட்டன. இந்த அதிசய சம்பவத்தைப் பற்றி இப்போது நினைக்கும்போது, அது ஒரு

கனவாய், கனவின் நிழலாய்த் தோன்றுகிறது. இதெல்லாம் வெறும் மூட நம்பிக்கை என்று நீ சொல்லலாம். ஆனால், நான் சொன்ன இதே கதையை, ஒரு நாள் நீயும் உன் குழந்தைகளுக்குச் சொல்லுவாய்.''

# துரும்பின் ஆவேசம்

**கா**லிங் பெல் கண கண என்று ஒரு முறை அடித்தது; இரு முறையும் அடித்தது. அதிலே எஜமானின் அவசரம் தொனித்தது. ஆனால், ஆதம் கானுக்கு அந்த மணி யோசை காதில் விழவில்லை; அதை அவன் லட்சியம் செய்ததாகவே தெரியவில்லை.

அவனுக்கு வயது ஐம்பத்தெட்டு இருக்கும். ஆறடி, நாலங்குல உயரம். தூய வெண்மையான அங்கியும் தலைப்பாவும் அணிந்திருந்தான். தங்கச் சரிகையிட்டு, கறுப்புக்குஞ்சலம் தொங்கும் ஒரு கமர்ப் பந்தை, அவன் இடையிலே வரிந்துகட்டி யிருந்தான்; அது இடையைக் குறுக்கி எடுப்பாய்க் காட்டியது. அதேபோல், தங்கச்சரிகை போட்ட பட்டையொன்று தலைப்பாவையும் சுற்றி யிருந்தது. அவனுடைய மீசையும் தாடியும் கச்சிதமாய் நறுக்கி விடப்பட்டு, வீட்டிலேயே தயாரித்த ஏதோ மைபூசிக் கன்னங் கறேல் என்றிருந்தன. ஆனால், அவைகளின் மயிர்க் காம்புகள் மட்டில், மை படாமல் சாம்பல் நிறத் தோடேயே காட்சியளித்தன.

திறந்து கிடக்கும் கதவுக்கு வெளியே போட்டிருந்த ஒரு ஸ்டூல்மீது, அவன் அமர்ந்திருந்தான். மார்பின்மேல் கைகளைக் கட்டிக்கொண்டு, சுவரிலே சாய்ந்திருந்தான். கண்கள் மூடியிருநதன. நிச்சிந்தை யாக, அவன் உட்கார்ந்திருந்தான்.

பியூன்கள் கட்டுக் கட்டாய்க் கச்சேரிக் காகிதங்களைத் தூக்கிக் கொண்டு, அறைகளுக் குள்ளேயும் வெளியேயும் பரபரப்பாய் நடந்துகொண் டிருந்தார்கள். அது சர்க்கார் காரியாலயத்தின் ஓர் இலாக்காவாகும். வெளியே கொடி மரத்தில் யூனியன் ஜாக் பறந்து கொண்டிருந்தது.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினாலாம் வருஷம் நடந்த மகா யுத்தத்தில், ஆதம்கான், ஒரு போர் வீரனாய்ச் சேவை செய்தான். நேசக் கட்சியார் அற்புதமாய் யுத்தம் புரிந்த போர்க் களங்களில், தன் பங்கு கைங்கர்யத்தை அவனும் புரிந்திருக்கிறான்; ஏன், தன் பங்குக்கு அதிகமாகவே அவன் புரிந்திருக்கிறான். சாமான்ய சிப்பாயாக இருந்த அவன், தன்னுடைய தீரச் செயல்களால், வெகு விரைவிலே, ஹவில்தார் பதவிக்கு உயர்ந்து விட்டான். எங்கேயோ ஒரு புதரில் ஒளிந்து கொண்டு கள்ளத்தனமாய் ஓர் எதிரி வீரன் சுட்ட குண்டு மட்டில் அவன்மீது பாய்ந்திராவிட்டால், அவனுடைய பதவி இன்னும் எவ்வளவோ உயர்ந்திருக்கும். அவனது வாழ்க்கையிலேயே மிக உச்சமான வெற்றி நேரத்தில், அவனுக்கு இந்தத் துரதிர்ஷ்டம் நேர்ந்தது. அந்த எதிரியின் குண்டு, இவனுடைய இதயத்துக்கு வெகு சமீபத்தில் புகுந்து, அங்கேயே சௌக்கியமாய்க் குடி கொண்டு விட்டது. அந்தப் பொல்லாத குண்டை, பட்டாள டாக்டர் வந்து, வெளியே எடுத்து, காயத்தைத் தைத்துவிட்டார். அவரை 'அசகாய சூரன்' என்றே, ஆதம்கான் எப்போதும் புகழ்வான். அவன் பூர்ண சுகமடைந்து, மீண்டும் துப்பாக்கி தாங்கியபொழுது,

அந்தக் காயத்தினுல் ஏற்பட்ட வடுவை, புதிய ராணுவச் சட்டை யொன்று மூடி மறைத்தது; அந்தச் சட்டையின் மேலே, வெள்ளியால் செய்த வீரப் பதக்கமொன்றும் அலங்காரமாகத் தொங்கத் தொடங்கியது. அவனது உள்ளத்திலே புதைந்து கிடந்த வீரத்தனம், இந்த வீரப் பதக்கம் அவன் மார்பிலே ஏறியதும், பொங்கிப் பூரித்துப் பிரமாதமாய் வளர்ந்தோங்கியது. ஆனுல், அவன் எதிர்பாராதபடி சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகி, அவனுடைய பட்டாளத்தையும் கலைத்து விட்டார்களாதலால், அவனுக்கு அளவு கடந்த ஏமாற்றம் ஏற்பட்டது. இன்னும் பெரிய புகழெல்லாம் அடையலாம் என்று அவன் கட்டியிருந்த மனக்கோட்டைகளனைத்தும், அதோடு இடிந்து போயின.

யுத்தம் நின்று, அவனது சிப்பாய் உத்தியோகமும் முடிவடைந்து விட்டதால், அவனுக்குச் சொற்ப உபகாரச் சம்பளம் கிடைத்தது. அவன் குடும்பத்தார் அரை வயிறு அலம்பக்கூட, அது போதவில்லை. இப்படிச் செலவுக்கே கட்டாமல் தடுமாறிக் கொண்டிருந்த அவன், வேறு ஒரு வழியும் புரியாமல், இன்னொரு சம்சாரத்தையும் கலியாணம் செய்துகொண்டான். ஏற்கெனவே ஒரு மனைவி, மூன்று குழந்தைகள், முடமான ஓர் அக்காள், கிழத் தாய், தகப்பன் இவர்களெல்லாம் இடமிடைஞ்சலால் தவித்துக் கொண்டிருந்த குடிசையிலே, அவளும் வந்து புகுந்தது தான் மிச்சம். போர்க்களத்தில் ஒரு துப்பாக்கியை எவ்வளவு குதூகலத்தோடு அவன் கைப்பிடிப்பானே அவ்வளவு குதூகலத்தோடேதான், மாப்பிள்ளைக்

கோலத்தையும் தாங்கிஞன். ஆனால், அந்தக் குதூகல மெல்லாம் வெகு சீக்கிரத்திலே தணிந்து விட்டது. இளைய மனைவி, ஒரு குழந்தையையும் பெற்றுவிட்டாள். அவள் இன்னும் பல வருஷங்கள் யௌவன மாய் இருக்கப் போகிருள். ஆதம்கானுக்கோ, மனக்குழப்பத்தால் அவன் உள்ளத்தில் கவிந்திருக் கும் இருளை நடுநடுவே நீக்கும் ஒளியும் நிம்மதியும் இல்லற சுகமே. ஆதலால், அவனது குடும்பம் மேன் மேலும் வளர்வதில் என்ன சந்தேகம்?

இதனுல், அவன் மனம், பின்னும் அதிகக் குழப் பத்தை அடையவே, அதை நீக்க அதிக ஒளியும் தேவையாயிற்று. மூன்ருவது விவாகம் ஒன்றையும் அவன் உள்ளம் நாடியது. ஆனால், கடவுள் கிருபை யால் ஓர் அதிர்ஷ்டம் பிறந்தது. அண்டை வீட்டி லிருந்த ஒரு கிழவன் இவனிடம் அனுதாபப்பட்டு, ஒரு யோசனை சொன்ஞன்; இவனுக்கு ஒரு மனு எழுதிக் கொடுத்து, அரசாங்கக் காரியாலயத்திலுள்ள பெரிய துரையை இவன் போய்ப் பார்க்கும்படியும் ஏற்பாடு செய்தான்.

ஆதம்கான் தன்னுடைய ராணுவ நிஜாரையும் சட்டையையும் அணிந்து கொண்டான்; பூட்சுக்குப் பளபள என்று கறுப்புப் பாலிஷ் கொடுத்துக் கொண்டான் (அந்தக் காலத்தில் அவனுடைய மீசை தாடிகளுக்குக் கறுப்புச் சாயம் தேவைப்படவில்லை); வீரப் பதக்கத்தைக் கம்பீரமாக மார்பிலே தொங்க விட்டான். இந்தக் கோலத்தில் பெரிய துரையைப் போய்ப் பார்த்தபோது, துரையே பிரமித்துவிட்டார். பாயும் துப்பாக்கிக் குண்டைப்போல, அதிசீக்கிரத்தில்

பலனும் கிடைத்தது. துரையை இவன் பேட்டி கண்ட மறுநாளே, இவனது பெயர் சர்க்கார் சம்பளப் பட்டியலில் ஏறிவிட்டது. அதன்மேல் ராணுவ உடையை, ஆதம்கான் மூட்டை கட்டி வைத்தான். தூய வெண்மையான அங்கி,தலைப்பா, சரிகை போட்ட சிவப்புக் கமர்ப்பந்து ஆகியவைகளை அணிந்துகொண்டான். வீரப் பதக்கம் தொங்கிய மார்பில், பெரிய வில்லை ஒன்று தொங்கியது. அதிலே, 'டபேதார்' என்ற எழுத்துக்கள் பளிச்சென்று செதுக்கப்பட்டிருந்தன. ராணுவத் தோள்பட்டைக்குப் பதிலாக, மற்றொரு ரகமான தோள் பட்டை, அவனை அலங்கரித்தது.

வெகு சந்தோஷமாகவே, ஆதம்கான் தன்னுடைய புதிய 'உத்யோக'த்தை மேற்கொண்டான். அப்படி ஒன்றும் கடுமையான வேலை கிடையாதென்று, சில நாளைக்குள்ளேயே அவன் கண்டுகொண்டான். தனக்குக் கிடைக்கும் இருபது ரூபாய் சம்பளமும், தன் ராணுவப் பென்ஷனைப் போலவே, மற்றொரு பென்ஷன் என்று அவன் கருதினான். ஒரு வருஷ சேவைக்குப் பின், அவனுடைய சம்பளம் ஒரு ரூபாய் ஏறியது. ஐந்து வருஷத்தில், அதிவேகமாய் இருபத்தைந்து ரூபாயை, அவன் எட்டிவிட்டான். அதுவே அவன் சம்பளத்தின் சிகரம்; அதிலேயே அவன் ஆயுட்காலம் பூராவும் தள்ளவேண்டும்.

புதிய உத்தியோகத்திலே, வருஷங்கள் ஆக ஆக, ஆதம்கானுக்கு அருமையான அனுபவம் உண்டாகிவிட்டது. அரசாங்க ரகஸ்யங்களையும், அதிகார தோரணைகளையும் அவன் அறிந்துகொண்டான். தன்

எஜமானின் மனத்தை உள்ளும் புறமும் தெரிந்து கொண்டான். அவர் எப்போது சந்தோஷமா யிருப்பார், எப்போது எரிந்து விழுவார், அவருக்கு என்னென்ன சபலங்கள் உண்டு, எதெதில் அவரை அசைக்க முடியாது என்பவையெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் அவனுக்கு விளங்கின. ஆகையால், தன் சம்பளக் குறைவை ஈடுகட்ட, ஆதம்கான் ஓர் எளிய வழியைக் கண்டுபிடித்தான். எஜமானைப் பேட்டி காண வருவோர் அனைவரும், அவனுக்கு முதலில் காணிக்கை செலுத்திவிட்டுத்தான் உள்ளே போகமுடியும்; வருபவர் அந்நியரோ, ஆபீஸிலேயே உள்ள கீழுத்தியோகஸ்தரோ, யாரா யிருந்தாலும் சரிதான், அதைச் செலுத்தியாக வேண்டும். ஆனால், உத்தியோகஸ்தர்களின் மனம் புண்படாமல் எப்படித் தளுக்காய் நடந்து கொள்ளுவது என்பதும் அவனுக்குத் தெரியும்.

திடீரென்று யாரோ பேசினார்கள்; நல்ல வாலிபமும் விஷய ஞானமுமுள்ள யாரோ, அவன் காதிலே, முணுமுணுத்த குரலில் சொன்னார்கள். அவன் உடுத்தியிருந்த உடை, முகலாய சக்ரவர்த்திகள் பெருமையோடு ஆடம்பரமாய், சுமார் இரண்டு நூற்றாண்டுகள் அணிந்திருந்த உடையாகும் என்று, அந்தக் குரல் கூறியது. அந்த ராஜ உடையை, பரங்கியர், இப்படிக் கேவலப்படுத்தி விட்டார்கள்; தாழ்ந்த வேலைக்காரனின் உடுப்பாகச் செய்துவிட்டார்கள்! என்ன அநியாயம்!

அரபிக் கதையின் மாயாஜாலக் கம்பளம் ஒன்று, அவன் முன்னே வந்து நின்றது. அதன்மீது ஆதம்

கான் ஏறி உட்கார்ந்தான். அவன் கண்ணைத் திறந்த போது, முகலாய சக்ரவர்த்திகள் ஆண்ட சாம்ராஜ்யத் தலைநகரமான டில்லிக்கு, தான் வந்து சேர்ந்திருக்கக் கண்டான்! என்ன அதிர்ஷ்டம்! தர்பார் மண்டபத்தின் அற்புத சோபைகள், அவனுக்குத் தென்பட்டன. தங்கள் சக்ரவர்த்திக்குச் சிற்றரசர்கள் காணிக்கை செலுத்திய தங்கமும், நவரத்தினங்களும் குவியல் குவியலாய்க் கொட்டிக் கிடந்த பளிங்கு மஹால்கள் என்ன! ஆடம்பரமாய் உடை யணிந்து அணிவகுத்துச் செல்லும் வாஜிர்கள், அமீர்களின் அழகென்ன! நேர்த்தியாய் ஜேணமிட்ட குதிரைகள் என்ன! அம்பாரி வைத்த யானைகள் என்ன! பல ஜாதி, பல வர்ண ஜனங்களும் நடக்கும் வீதிகள் என்ன! தேனீக் கூடுகளைப் போல் ரீங்காரம் செய்யும் பஜார்கள் என்ன! - இத்தனையையும் அவன் கண்டான். பஜார்களில் ஒரு புறம் சில பக்கிரிகள், 'ஜல் ஜல்' என்று ஒலிக்கும் தங்கள் தம்பட்டங்களைக் கொட்டிக் கொண்டு, பிச்சை கேட்கிறார்கள்; மற்றொரு பக்கத்திலே ஒரு பணக்காரச் சீமாட்டி, அடிமைகள் தாங்கும் ஓர் அழகிய சிவிகையிலே, தாதிகள் பின் தொடர, சவாரி செய்கிறாள்; வேறொரு பக்கத்தில், ஒரு மைனர், உல்லாசக் கேளிக்கைக்காகக் கிளம்பியவன் போல அலங்காரம் செய்துகொண்டு, தன் பல்லக்கி னின்றும் வெளியே எட்டிப் பார்த்துக் குதூகலப் புன்சிரிப்போடு பவனி செல்லுகிறான் – ஆஹா! என்ன மனங் கவரும் காட்சி! ராஜாங்க விருதுகளுடன் சுல்தான்கள் ஊர்வலம் செல்கிறார்கள். அவர்களுக்கு முன்னே, மெய்காப்பாளர்கள், ஈட்டியும் வாளும் வெள்ளித் தடிகளும்

தாங்கி, முரசொலி முழங்க நடக்கிறார்கள். ரோஜா வர்ணக் கற்களால் கட்டிய பிரம்மாண்டமான கோட்டைகளையும் சிற்பங்கள் கொழிக்கும் அற்புத மசூதிகளையும் அவன் கண்டான். மெக்கா இருக்கும் திசையை நோக்கிய முகத்துடன், பக்தகோடிகளைப் பிரார்த்தனைக் கழைக்கும் முஜீனின் குரலைக் கேட்ட போது, அவன் பரவசமடைந்து, மெய்சிலிர்த்து ஆனந்தபாஷ்பம் சொரியலானான்.

அல்லாஹோ — அக்பர்!

உறக்கத்தைவிடப் பிரார்த்தனையே மேல்!

மீண்டும் காலிங் பெல் கணகண என்று ஒரு முறை அடித்தது; இரு முறையும் அடித்தது. அதிலே எஜமானின் ஆத்திரம் தொனித்தது.

ஆதம்கான் இருந்தபடியே உட்கார்ந்திருந்தான். கண்கள் மூடியபடியே இருந்தன. பிரார்த்தனை செய்வது போல், அவன் உதடுகள் அசைந்தன.

துரை, பரபர என்று வெளியே வந்தார்.

"ஹேய், என்னா செய்றே? தூக்கமா தூங்கறே?"

"ஸுவெர்க்கா பச்சா!" என்று வெறுப்போடு முணுமுணுத்தான் ஆதம்கான். ஆனால், அவன் கண்கள் மட்டில் திறக்கவில்லை.

"என்னா? என்னா சொல்றே? ஒன்னே யார்னு நெனச்சுக்கிட்டே நீ?"

ஆதம்கான் மிக்க செருக்கோடு, "நான் முகலாய சக்ரவர்த்தி" என்றான்.

துரை மிகவும் சாமர்த்தியசாலி. சட்டென்று, விஷயம் இன்னதென்று அவர் புரிந்து கொண்டார். குறும்புச் சிரிப்புடன் கண்ணைச் சிமிட்டினர். இரண்டொரு நிமிஷம் மௌனமாய் நின்று, டபேதாரை உற்று நோக்கினர். முகலாய சக்ரவர்த்தியா! ஆமாம்; இவன் அப்படித்தான் தோன்றுகிறன்-வாட்ட சாட்டமான சரீரம்; கச்சிதமாய் நறுக்கி வண்ணம் தீட்டிய தாடி, மீசை; வெண்மையான தலைப்பா; தூய வெள்ளையாய் அலைபோல் கம்பீரமாக விசிறிக்கொண்டிருக்கும் அங்கி - ஆம்; இவன் முகலாய சக்ரவர்த்திதான். மகாசூரனை பாபரா? அல்லது, கருணை வள்ளல் ஹுமாயூன் தானே? இல்லை, இல்லை; பிரதிவாதி பயங்கரனை அவுரங்கசீப் அல்லவா இவன் - இதுவே பொருத்தம் என்று துரை நினைத்தார். அவரது குறும்புச் சிரிப்பு, இன்னும் பலமாயிற்று.

துரை தமது அறைக்குத் திரும்பிச் சென்று விட்டார்.

பதினைந்து நிமிஷம் கழிந்தது. உள்ளுக் குள்ளேயே கலகம் புரிந்தவர்களின் வாள் வீச்சுக்களாலும், பற்பல போர்கள் மூண்டு இடிபோல் முரசுகள் முழங்கித் தீ கக்கிய பீரங்கிக் குண்டுகளாலும், அழகான இந்தப் பூமி குரூபமாகி, தன் மக்களின் ரத்த விளாருல் மாசுபட்டுப் போனதால், அந்தச் சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றது. இந்த நாச லீலைகளால் கோரமடைந்த பிரதேசமெல்லாம், சமாதிகள்தான் வரிசை வரிசையாய் எழுந்து நிற்கின்றன. இந்த நாசங்களுக்கிடையே, ஏழு டில்லிகள் அழிந்த சாம்பலின் மேலே, அந்தச் சமாதிக் காட்டின் நடுவே, புதிய டில்லி ஒன்று,

அந்நியரால் நிர்மாணமாகி, அந்நிய ஆட்சிக்கு நிலைக்களனுய், எங்கேயோ கடல்களுக் கப்பால் இருக்கும் கண் காணுத் தீவாந்தரம் ஒன்றின் குரலை எதிரொலி செய்து கொண்டு, எழுந்து நிற்கிறது.

அந்த ஒலி, ஆதம்கானுடைய கனவுகளின் இனிமையைக் குலைத்தது. அவன் கண்களைத் திறந் தான். தன் உடுப்பைப் பார்த்தான். அவன் முகத்திலே சந்தேக இருள் சூழ்ந்தது.

"பியூன்!" என்றது ஒரு குரல். அதிகார மிடுக்கு அதிலே நிறைந்திருந்தது.

"சாஹேப்!" என்று கத்திக்கொண்டே, உள்ளே ஓடிஞன் ஆதம்கான்.

"இந்தா; இதை எடுத்துப்போ" என்று சொல் லிய துரை, மேஜைமேல் கிடந்த ஒரு காகிதக் கட் டைச் சுட்டிக் காட்டிஞர்.

கூனிக் குறுகி, காகிதக் கட்டும் கையுமாய், ஆதம் கான் தலை குனிந்து அறையை விட்டு வெளியே நடந் தான்.

துரும்பு ஆவேசம் கொண்டது; ஆல விருட்சம் போல் ஓங்கி நிமிர்ந்தது. ஆவேசம் தணிந்தது; பழைய துரும்பாயிற்று.

# மாரி

வெகு தூரத்துக் கப்பால், மங்கிய ஒளியில், வானும் கடலும் ஒன்றையொன்று தழுவி நிற்குமிடத்திலே, ரோஜா மலர்ந்ததுபோல், செங்கதிர்கள் தோன்றத் தொடங்கின. பளிங்கு பாவிய சம தரைபோல், கடல் ஓய்ந்து கிடந்தது. காற்றுச் சாந்தமா யிருந்தது. இந்த அதிகாலை நேரத்தில், திருவல்லிக்கேணிக் கடல்கரை, அமைதியும் சுறுசுறுப்புமாய்க் காட்சி அளித்தது. நீண்ட மரக்கட்டைகளை மணலிலே தள்ளி யிழுத்து, ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டி, தங்கள் கட்டுமரங்களை, செம்படவர்கள் நீரில் இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

அடிவானக் கோடியில், சூரியன் மெள்ள எட்டிப் பார்த்தான். ஜலத்திரள், விரித்த மயில் தோகை போல் பசுமை அடைந்தது. கடல்கரை மணலில் ஒரே ஒரு கட்டுமரம் மட்டில், இன்னும் நீரிலே இறக்கப்படாமல் கிடந்தது. அதன் பக்கத்தில் ஒரு செம்படவன் நின்றான். அவன் சிறிது நேரம் கடலையும், மற்றும் சிறிது நேரம் கவலை மிகுந்தவனாய் மணல் பரப்புக் கப்பால் இருக்கும் மரீனு ரஸ்தாவையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான். இந்தச் சமயத்தில், மணல் வெளியில் அவசர அவசரமாய் நடந்து வரும் இரண்டு உருவங்கள் தென்பட்டன. ஒருவன் சுமார் பத்தொன்பது வயதுள்ள வாலிபன்; வாட்ட சாட்டமான ஒற்றைநாடி உடம்பு. மற்றவன், ஆறு

வயதுள்ள சிறுவன். வாலிபனின் வேகமான நடைக்குச் சரியாய், சிறுவனும் ஓடிவந்தான்.

இருவரும் நீர்க்கரையை அடைந்தார்கள்.

கட்டுமரத்தின் பக்கத்திலே நின்று கொண்டிருந்த செம்படவன், "மாரி, என்னடா இந்நேரம்?" என்று கேட்டான்.

மாரி பதில் சொல்லவில்லை; ஆனால், தலையைச் சொறிந்துகொண்டு, புன்சிரிப்புச் சிரித்தான்.

"பாரு, அவன்களெல்லாம் போயிட்டானுக. எப்பவும் போலே, நாம்பதான் பின்னே தங்கிட்டோம்" என்று கடலைச் சுட்டிக் காட்டிய வண்ணம் கூறினான் மூத்தவன்.

"எப்பவும் போலேயா!......காளி, எப்பவும் போலே, நம்ப வலை நிறையும்படி சாமி கொடுப்பாரு" என்று பதில் சொன்னான் மாரி.

ஒரு நொடியில் காளியின் சிடுசிடுப்பு மறைந்தது. தன் தம்பியை நோக்கி, அன்போடு சிரித்துக்கொண்டே, "போடா, சோம்பேறி! சோம்பேறி!" என்று சொன்னான்.

இருவரும் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை.

"எலே, பித்துப்பிடிச்ச நாய்க்குட்டி மாதிரி இந்த மணலிலே கிடந்து புரளாமே, மரியாதியாய் வீட்டுக்குப் போயிடு" என்று காளி அந்தச் சிறுவனிடம் கூறினான்.

பிறகு, இருவரும் கட்டுமரத்தின் மீது அமர்ந்து, ஆழ்கடலில் பிரயாணமாகி விட்டார்கள். அவர்களின்

கட்டுமரம் துள்ளிக் குதித்து, ஆடியோடி, கடைசியில் நிதானமாய்ச் செல்லத் தொடங்கியது.

ஆனால், சிறுவனோ, ஒரு மணல் வளையிலிருந்து எட்டிப்பார்த்துக் குறுக்குப் புறமாய் விரைந்தோடிய ஒரு நண்டை, குறும்புக் களிப்புடன் துரத்திக் கொண்டு சென்றான். நண்டு சிறுவனை ஏமாற்றி ஒரு வளையில் பதுங்கிவிட்டது. அது மறைந்த இடத்தில், சிறுவன் முழங்கால்படியிட்டு உட்கார்ந்து, வெகு ஆத்திரமாய் மணலைத் தோண்டத் தொடங்கினான். இந்த வேளையில் வந்து வீசிய ஓர் அலை, மணலை வாரியடித்து, நண்டு மறைந்த வளையையும் பையன் தோண்டிய மண்ணையும் அடையாளமே தெரியாமல் மூடி விட்டுப் போயிற்று. அலை போனதும், ஒரு நண்டுக்குப் பதிலாக அநேகம் நண்டுகள் செவ்வரளிப் பூக்களைப்போல், புதிய புதிய வளைகளிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தன. அவைகளையெல்லாம், மீண்டும் மீண்டும், சிறுவன் துரத்திக் கொண்டோடினான். கடைசியிலே, அவனுக்கே களைத்துப் போய்விட்டது. "சனியன் பிடிச்ச நண்டுங்க?" என்று அவன் அவைகளைத் திட்டிவிட்டு, கட்டுமரத்தையே பார்த்துக்கொண்டு நின்றான். கடலுக் கப்பால் ஏதோ ஓர் அற்புத உலகம் இருப்பதாகவும், அந்த அற்புத உலகத்துக்கு, தன் தகப்பனையும் சிற்றப்பனையும் போல் பெரியவனாய் வளர்ந்த பின்பு தானும் கூடப் போகப் போவதாகவும் சிறுவனின் எண்ணம். அந்த அற்புத உலகத்தைப் பற்றி நாள்தோறும் புதிது புதிதாய் வளர்ந்துகொண்டே வரும் ஆசையோடு தான், கடலிலே செல்லும் கட்டுமரத்தை, அவன்

ஒவ்வொரு நாளும் பார்த்துக்கொண்டு நிற்பது வழக்கம். இன்றும் அவ்விதமே அந்தக் கட்டுமரத்தை, அது ஒரு புள்ளிபோல் சிறுத்து மறையும் வரையில், பார்த்துக்கொண்டு நின்றான். பிறகு, திரும்பி, ஓட்டமாய் ஓடிவிட்டான்.

2

பக்கிங்ஹாம் கால்வாயின் எதிர்க்கரையில் கோலமிழந்த பல குடிசைகள் நிற்கின்றன. அவைகளை விட்டுச் சற்று தூரத்தில் தனியாக ஒரு குடிசை இருக்கிறது. சிறுவன், அந்தத் தனிக் குடிசையின் முன்னே போய் நின்றான். அதைச் சுற்றி நாற்புறமும் மிகச் சுத்தமா யிருந்தது. வெயிலில் காய்ந்து, உப்பங் காற்றில் உலர்ந்து, பழுப்பேறிக் கிழிந்த கட்டுமரப் பாய் ஒன்று, வாசலில் ஒரு பக்கத்தில் கிடந்தது. அதன் அருகே, மிகப் பழமையான ஒரு வலை, பெரிய சுருளாய்க் கிடந்தது. அந்த வலையிலிருந்து இங்குமங்கும் வெண்மையான பல நூல் முனைகள், கள்ளனைப்போல் வெளியே எட்டிப்பார்த்துக்கொண் டிருந்தன. வலை பல முறை பழுது பார்க்கப்பட்டிருக்கிறது என்பதை, அது காட்டியது. கட்டுமரப் பாயின்மீது, கறுப்பு நாய் ஒன்று, சுகமாய்ப் படுத்துக்கொண் டிருந்தது. அது சிறுவனைக் கண்டவுடனே, வாலை ஆட்டிக் கொண்டு எழுந்திருந்தது. நாயைக் கண்டதும், சிறுவனுக்கும் சந்தோஷம் பொங்கிவிட்டது. அவன் நாயின் முதுகில் ஏறிச் சவாரி செய்யலானான். சவாரி உற்சாகத்தினால், தன் முஷ்டியை மடக்கி, நாயின் தலையிலே ஒரு குத்து விட்டான். குத்துப்பட்ட நாய், 'வீல்' என்று அடிவயிற்றிலிருந்து ஊளையிட்டது. நாயின்

ஊளையைக் கேட்டதும், குடிசைக்குள் ளிருந்து ஒரு பெண் வெளியே வந்தாள். தன் முன் நடக்கும் காட்சி யைக் கண்டு, அவள் கல கல என்று நகைத்தாள்.

"போடா! போக்கிரிப் பயலே! போக்கிரி! பாவம், அதைக் கொன்னூடப் போறே. அதுக் கப் பாலே, நீ எதோடே விளையாடுவே?" என்ருள்.

"நான் ஒண்ணும் அதைக் கொல்லமாட்டேன்" என்று தலையை ஆட்டினுன் சிறுவன்.

"அப்பிடியாணு, அதும் முதுகிலே யிருந்து எறங்கி, உள்ளே சோறு தின்னப் போ – மீன் கறியும் ..."

சிறுவன், ஒரு பந்தைப் போல் உள்ளே குதித் தோடினுன். அதைக் கண்ட தாய், ஆனந்தமடைந்து, தன் பேச்சைப் பாதியிலே நிறுத்திவிட்டாள்.

காளியின் மனைவி ஆண்டாயிக்கு, இப்போது வயது இருபது. நடுத்தரமான உயரம். வட்டமான முகம். கள்ளங் கபடற்றுப் பளிச்சென்று காண்போர் மனத்தைக் கவரும் கண்கள்; நிமிர்ந்த பார்வை, விகல்ப எண்ணங்கொண்டு பரபுருஷர்கள் தன்னைக் கண்டு முழிக்கும்போது, அவர்களை வெறுத்து உதா சீனம் செய்யும் கம்பீரமான பார்வை. சாந்தமான கடலைப் போல், அவள் இலங்கினுள்: கடல் நீர்போல், கருமை பூண்டிருந்தது அவள் மேனி; அந்தக் கடலின் மேல் வீசி அலை யெழுப்பும் காற்றைப் போல் பூரித் திருந்தது அவள் இதயம். தலை மயிரை எப்போதும் நன்ருய் வாரி முடித்திருப்பாள். பின் கழுத்துப் பிடரியிலே, அவள் கொண்டை, கிளிஞ்சலைப் போல்

வடிவும் உரமும் பெற்றுத் திகழும். ஆண்டாயி, சீரும் சிக்கனமுமாய்க் குடித்தனம் நடத்துவாள்; வியாபார விஷயங்களிலும் நல்ல புத்திசாலி. மீன் சந்தையில், அவளுக்குத்தான் நிறைய விற்பனையாகும். அதுவும், நல்ல விலைக்கு விற்பாள். இதனால் அவளுக்குக் கிடைத்த வருமானத்தைக் கண்டு, வாயாடிகளான மற்றச் செம்படவப் பெண்களெல்லாம் பொறுமைப் பட்டார்கள். 'மீன் சந்தை ராஜாத்தி' என்றே, அவர்கள் அவளுக்குப் பெயரும் வைத்துவிட்டார்கள்; பொருத்தமான பெயர்! அவளுக்குப் பெரிய வைரி, கறுப்பாயிதான். வசை பாடுவதில், அந்தக் குப்பத்திலேயே அவளை யாரும் மிஞ்ச முடியாது. அப்பேர்ப் பட்ட கறுப்பாயிகூட, ராணி போல் கம்பீரமான ஆண்டாயிக்கு முன்னே, வாயடைத்துப் போய்விடுவாள். ஆண்டாயி, உத்தமமான மனைவி. அவள் கணவன், சற்று இளகிய மனம் உடையவன். அவனிடம் அவள், ஒரு கன்னிப் பெண்ணைப்போல் அன்பு சொரிந்து, பக்தியோடு அவனுக்குப் பணிவிடை புரிந்தாள். ஆனால், அவள், தன் அருமை மகனை, குப்பத்தின் சோம்பேறிப் பயல்களோடு சேர விட மாட்டாள். அந்தி நேரத்தில் நாள் தவறாமல் கள்ளுக் கடைக்குப் போகும் குடியர்களுடன், தன் புருஷனை, கொழுநனை பழகுவதற்கும், அவள் இடம் கொடுப்பதில்லை. இதனால், அவளை ஒரு காளிதேவி என்றும், அவ்விரு சகோதரர்களும் மூளையில்லாக் கழுதைகள் என்றும் சில செம்படவர்கள் பேசிக்கொள்ளுவார்கள். ஆனால், இந்தத் தூஷணைப் பேச்சையெல்லாம் அவர்கள் இல்லாத இடத்தில்தான் பேசுவார்கள்; கோழைகள்!

## 3

படை பதைக்கும்படி தகித்துக்கொண் டிருந்த வெயில், மெல்ல மெல்லத் தணிந்து, மாலையும் வந்தது. குடிசைகளைச் சூழ்ந்திருந்த தென்னந் தோப்பில் புகுந்து, மந்தமாருதம் ஜில் என்று வீசியது. ஆண்டாயி இதற்குள் அடுப்பெரிக்கச் சுள்ளி பொறுக்கிவிட்டு, சந்தைக்குப் போய்ச் சாமான்கள் வாங்கிவந்து, இராச் சாப்பாட்டைத் தயாரித்து வைத்தாள்.

ஒரு கூடையைக் கையில் எடுத்துக்கொண்டு, மகனை இடுப்பிலே தூக்கிக்கொண்டு, கடல்கரையை நோக்கி, அவள் நடந்தாள். அங்கே போய், தன் புருஷனும் கொழுநனும் வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

செம்படவர்கள் நாள் முழுவதும் கடுமையாய் வேலை செய்துவிட்டு, ஒவ்வொருவராக, கட்டுமரங்களைக் கரைக்கு வலித்துக் கொண்டு வந்தார்கள். தூரத்தில் பழுப்பு நிறப் பாய் விரித்த கட்டுமரமொன்று தென்பட்டது. அந்தப் பாய், ஆடம்பரமாய்க் காற்றிலே ஆடிக்கொண் டிருந்தது. சிறிது நேரத்தில், பாய் சுருண்டது; கட்டுமரம் கண்ணுக்கு மறைந்தது. ஆனால், இதோ மறு நிமிஷத்தில், நுரைகொழித்தெழுந்த அலைகளினூடே, பெரு மீன்போல் அது துள்ளிப் பாய்ந்தது – இவ்விதமாக, மேலும் கீழுமாய் வீசும் அலைத் திரளின்மீது, எழுந்தும் விழுந்தும், கட்டுமரங்கள் அனைத்தும், ஒவ்வொன்ருய்க் கரைக்கு வந்துசேர்ந்தன.

கடைசியில் அலைகளோடு பேசி விளையாடிக் கொண்டு வருபவர்கள்போல், காளியும் மாரியும் வந்து சேர்ந்தார்கள். ஆண்டாயி எழுந்து நின்றாள். அவள் முகம், புன் சிரிப்பால் மலர்ந்தது; கண்கள் சந்தோஷத்தால் பிரகாசித்தன. அவர்களும் புன்முறுவல் பூத்தார்கள். அன்று அவர்களுக்குப் பெரிய அதிர்ஷ்டம். பல சிறு மீன்களைத் தவிர, மூன்று பெரிய மீன்களும் அவர்கள் வலையில் அன்று சிக்கின. ஆண்டாயியின் கூடை நிரம்பிவிட்டது. அவள், மௌனமாய், மாரியம்மனை மனமார வாழ்த்தினாள்.

சகோதரர்கள் இருவரும் கட்டு மரத்தை அவிழ்த்து, கட்டைகளைக் கரையிலே இழுத்துப் போடத் தொடங்கினார்கள். இதற்குள்ளே, கூடையைச் சுற்றி ஒரு கூட்டம் கூடிவிட்டது; சிலர் மீன் வாங்க வந்தவர்கள்; பலர் வேடிக்கை பார்க்க வந்தவர்கள்.

"மொத்தமாய் வாங்கிக்கிறேன். ரெண்டு ரூபாய். சம்மதமா?" என்றார் ஒருவர். அவர் நடுத்தர வயதுடையவர். சுத்தமாய் உடை யணிந்திருந்தார். மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு உல்லாசமாய்க் கடல்கரைக்கு வந்திருந்தார்.

"கூட அரை ரூபாய் தரேன்" என்றார். அதே ரகத்தைச் சேர்ந்த மற்றொருவர்.

"மூன்று ரூபாய்" என்று உரத்துக் கூவினார் முதல் மனிதர்.

"மூன்றரை" என்றார் மற்றவர்.

"நாலு."

"நாலரை."

"அஞ்சு."

முதலில் கேட்டவரே, ஏலத்தில் வென்றார். இந்தப் போட்டி நடந்துகொண் டிருக்கையில், ஆனந்த மிகுதியால், ஆண்டாயி பேசவே யில்லை. ஐந்து ரூபாய் வரையில் ஏலம் உயருமென்று அவளுக்குத் தெரியும். இந்த மாதிரி, ஏற்கெனவே இரண்டு மூன்று முறை நிகழ்ந்திருக்கிறது. புத்தப் புதிய ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை, அவள் பெற்றாள். அதை விரலிடையே சிறிது நேரம், பிடித்துக் கொண்டு நின்றாள். அவளுடைய வெற்றியைக் காட்டும் சின்னஞ் சிறு ஜயக்கொடி போல், அது துலங்கியது. பிறகு, இடுப்பி லிருந்து ஒரு சிறிய பையை எடுத்தாள். அவள் வெற்றிலைப் பையும் அதுதான்; பணப் பையும் அதுதான். இந்த ஐந்து ரூபாய் நோட்டை அந்தப் பைக்குள்ளே போட்டு, மறுபடியும் அதை இடுப்பிலே செருகிக் கொண்டாள். மீன்கள் சீக்கிரத்திலே விற்றுப்போய் நல்ல லாபமும் கிடைத்ததால், அவளுக்கு மிகுந்த சந்தோஷம். பின்பு, தன் வீட்டுப் புருஷர்களுடன், தங்கள் குப்பத்துக்குப் புறப்பட்டாள்.

இதைக் கண்டு, கடல்கரையில் கூட்டமாய் நின்ற பிற செம்படவப் பெண்கள், பலவிதமாய்ப் பேசிக் கொள்ளத் தொடங்கினார்கள்.

"அவள் கையிலிருந்து, மீனைப் பிடுங்கிக்கிட்டில்லே போறாங்க! நாமோ சந்தையிலே வெகு நேரம் பேரம் செய்ய வேண்டி யிருக்கு; அதும் பிறவும்,

நட்டமாகவே விக்க வேண்டி யிருக்கு" என்ருள் ஒருத்தி.

"பூ! வாங்க வந்த புருசங்க முன்னே, இப்பி டியா ஒருத்தி மினுக்கிக் குலுக்குவ?" என்ருள் மற் ருெருத்தி. அவள் யாருமல்ல; மூஞ்சியைப் பார்த் தாலே எவரும் வெறுத் தொதுக்கும் கற்பரசி கறுப் பாயிதான்.

"நாம்ப ஏண்டி அவளைக் கண்டு பொருமைப் படணும்? அவ நல்ல அதிட்டக்காரி" என்ருள் இன் ெனாருத்தி.

"அவ பிறத்தியாரு வேலேலே தலையிட மாட்டா. ரெம்ப மரியாதியா நடந்திப்பா" என்ருள் வேெறா ருத்தி.

"போதும், போதும், உங்க பேத்தல். ஏது, கொஞ்சம் போனு அவதான் கோயில்லெ கும்பிடற மாரியாத்தான்னு கூடப் புகள ஆரம்பிச்சிடுவீங்க போலெருக்கே!" என்று அடித் தொண்டையோடு கத்திஞள் கறுப்பாயி.

"என்னடீ அங்கே பேசிக்கிட் டிருக்கீங்க? கட லிலே இருக்கற அத்தனை மீனும், ஒரே வீச்சிலே நம்ம வலையிலே வந்து சிக்கிக்கிட்டாக்கூட, உங்க ளுக்குச் சந்தோசம் பொறக்காது. இந்தப் பொம்பிள் ளைங்களே இப்படித்தான் எப்பவும் முணுமுணுப் பாங்க" என்று அழுத்தந் திருத்தமான ஓர் ஆண் குரல் இங்கே குறுக்கிட்டது.

கறுப்பாயி சட்டென்று திரும்பி, "ஆமாம்; கடலிலே இருக்கற அத்தனை மீனும் அம்பிட்டாத்

தான் என்ன ; உன் மொந்தைச் செலவுக்குப் போதுமா ?'' என்று நறுக்கென்று சொன்னாள்.

எல்லாப் பெண்களும் நகைத்தார்கள். கறுப்பாயி யின் புருஷனான வள்ளத்தனுக்கு, முகத்தில் அடித் தது போலாயிற்று.

"ஆண்டாயி அவ மீனை அஞ்சு ரூபாய்க்கு வித்திட்டா ; அது தெரியுமா உனக்கு ?'' என்று கத்தினாள் கறுப்பாயி.

"ஹூங் !'' என்று உறுமினான் வள்ளத்தன்.

"நீ என்ன கொண்டாந்திருக்கே ! சும்மா டம்பம் பேசறியே! துக்குணூண்டு துக்குணூண்டா, ஒரு பிடி மீன் குஞ்சு கொண்டாந்திருக்கே. அரை ரூபாய்க் காசுக்கு நூறு கொடுத்தாக்கூட, யாரும் அதை வாங்க மாட்டாங்க'' என்று மேலும் சொன்னாள் கறுப்பாயி.

"கேட்டீங்களா, அவ சொல்றத்தை ! ஹா-ஹா-ஹா ! ஹி-ஹி-ஹி ! ஹூ-ஹூ-ஹூ !'' என்று ஆர வாரமாய்ச் சிரித்தான் வள்ளத்தன்.

"அவங்க, எம்மாம் பெரிய மீனைப் பிடிச்சுக் கொண்டாந்தாங்க !'' என்று பெருமூச்சு விட்டாள் கறுப்பாயி.

"அடி கண்ணாட்டி, இங்கே பாரு. இனிமே அவங்க இந்த மாதிரி மீனே கொண்டுவரமாட்டா ஹூங்க'' என்று, வள்ளத்தன், சிரிப்பை அடக்கிக் கொண்டு, தன் மனைவியின் காதோடு காதாய்ச் சொன்னான். அவனுடைய கோரமான முகத்தில் ஒரு பேய்த் தோற்றம் படர்ந்தது.

## 4

குப்பத்திலே, வள்ளத்தன் இருக்குமிடம் தேட வேண்டாம்; பெருங் கூச்சல் எங்கே கேட்கிறதோ அங்கே அவனைக் காணலாம். எடுத்ததற்கெல்லாம் ஆணை இடுவான். அளவில்லாமல் குடிப்பான். ஆயினும், அவன் ஒரு 'கலைஞன்'. சில சமயம், அவனுக்குக் கவிதா சன்னதம் பிறந்துவிடும். அந்தச் சமயங்களில் 'கள் என்பது தேவாமிர்தமாகும். தென்னை, பனை மரங்களிலே, அமரர்கள்தான் அதைப் பெய்து வைத்திருக்கிறார்கள். மனித குலத்துக்கு அவர்கள் அருளிய வரப்பிரசாதம் அது. பருகப் பருகக் குறையாத அட்சய பாத்திரம். அதைக் குடித்து, மனிதர்களும் தங்களையேபோல் தேவர்களாய் வாழ வேண்டுமென்பது அவர்கள் சித்தம்' என்றவாறெல்லாம், மனங்குழைக்கும் மழலைக் குரலிலே, பாடிப் புகழ்வான். ஒரு நாள் இராத்திரி, கள்ளுக் கடையில் தலைக்குமேல் குடித்துவிட்டு, துடுப்பு வலிப்பதுபோல அபிநயித்து, அரைத் துணியையே வலையாக வீசி, மீன் பிடிக்கத் தொடங்கிவிட்டான். இன்னொரு நாள் குடிவெறியில், மொச்சைக்கொட்டை விற்கும் கிழவியின் தோள்மீது முகத்தைப் புதைத்து வைத்துக்கொண்டு அரைமணி நேரத்துக்குமேல் விம்மி அழுதவண்ணம், "என் கண்ணே, பொண்ணே!" என்று பலவிதமாய்க் கொஞ்சி, "வள்ளத்தனா குடிப்பான்; கள்ளெ அவன் வாசங் கூடப் பாக்கமாட்டான்" என்று கூச்சல் போட்டுக் கண்ணீர் சுரந்தான். உப்பிலே ஊறிய ஊறுகாய், காரங் குறைந்துவிடும். ஆனால், கடலின் உப்புத் தண்ணீரிலே நித்தமும் ஊறிய வள்ளத்தனுக்கோ, 'காரங்' குறையவில்லை; அவனுடைய

சிங்கார ரசம் செழிப்பாகவே யிருந்தது. தான் அபார மான விகடகவி என்றும், பெண்களை வசியம் செய் வதில் யாரும் தனக்கு ஈடு ஜோடி இல்லை யென்றும் அவன் நினைத்திருந்தான். ஆனால், அவனுடைய 'அன்புக் களஞ்சியமான' கறுப்பாயி, அவன் இம் மாதிரி வசிய விளையாட்டுகள் புரிய, அவனுக்கு இடம் கொடுப்பதேயில்லை. சூரப் புலியான வள்ளத்தனோ, அதற்குச் சலியாமல் விடாமுயற்சி செய்து, சில சம யம் வெற்றியும் அடைந்தான். இதுவரையில், அதனால் அவனுக்கு அதிக அபாயம் எதுவும் ஏற்பட்ட தில்லை.

தன்னுடைய வசிய சக்தியிலே திட நம்பிக்கை கொண்டவனாய், அவன் கடைசியில் ஆண்டாயியிட மும் தன் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்தான். அந்த உத்தமி, முதலிலே இவனது ஆபாச நடத்தை யைக் கண்டு பரிதாபப்பட்டு, இவனை விலகிப் போய் விடும்படி, கருணையுடனும் நயமாயும் சொல்லிப் பார்த்தாள். அவன் அழும்பு செய்யவே, எரிச்ச லடைந்து, திட்டினாள். முடிவிலே, ஆத்திரமும் வெறுப்பும் பொங்கி, அவனைத் துடைப்பத்தால் அடித்து, நாயை ஏவித் துரத்தி விரட்டினாள்.

“மானங் கெட்ட கழுதெ! இன்னொரு தடவை இம்மாதிரி நீ பேசினே, என் புருசனை விட்டு, கோளி திருகற மாதிரி உன் கழுத்தைத் திருகிப் போடச் சொல்லுவேன். பார்த்துக்க” என்று ஆண்டாயி அதட்டினாள்.

இதைக் கேட்ட வள்ளத்தன், குரூரமாய்ச் சிரித் துக் கொண்டு, அருகே பெரும் சிலந்திபோல் பரவிக்

கிடந்த ஒரு வலையைப் பார்த்தவண்ணம், "அடி மானே! இன்னும் உன்னை நான் விடப்போறதில்லெ. அதோ அந்த வலையிலெ மீன் பிடிக்கிற மாதிரி உன்னைப் பிடிச்சிடறேன். வலையிலே சிக்கற மீனைப் பாத்திருக்கியா நீ? அது என்ன பண்ணும் தெரியுமா? பாவம்! வாலெ அடிச்சுக்கிட்டு, மூச்சுத்திணறி, தவிச்சுப்பிட்டு, கடைசிலெ, வவுத்துமேலெ அப்பிடியே ஓய்ஞ்சு விளுவும். என்கிட்ட நீயும் ஒருநாள் அந்த மீன் மாதிரிதான் படியப் போறே" என்று பயமுறுத்தினன்.

பிறகு, நடந்துகொண்டே, "நரகத்துக்குப்போனலும் சரிதான்; உன்னெ நான் விடப் போறதில்லே. அடடா! அவ மைக் கண்ணும் தலெலெ கட்டு மயிரும் என்ன அளகு! என்னையா எதுக்கிறே நீ? நானு அளகாயில்லே? எதுத்தே, அதை அப்பன் இல்லாத அநாதையாப் பண்ணிடறேன்—உன் வவுத்திலே துள்ளிக்கிட்டுக் கிடக்கே ஒரு கரு, அதை" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். காமவெறி பிடித்த இந்தப் பேய் நினைப்பினல், அவன் கண்கள், குடி மயக்கத்தில் விழுந்தவனைப்போல் ஜொலித்தன; குரல் 'கர கர' என்று கம்மிப் போயிற்று.

## 5

முதலில், ஆண்டாயி, வள்ளத்தனுடைய பயமுறுத்தலைக் கேட்டு நடுங்கி விட்டாள்; வள்ளத்தனின் மானங்கெட்ட நடத்தையையும், தான் ஆத்திரமூண்டு அவனை விரட்டியதையும் தன் புருஷனிடம் சொல்லி விடலாமா என்றும் நினைத்தாள். ஆனல்,

சிறிது யோசித்துப் பார்த்த பின், அப்படிச் சொல்லுவது புத்திசாலித்தனமல்ல என்று எண்ணினாள். ஏனெனில், சொன்னால், அது பெரும் சண்டையாய் முடியும் என்று அவளுக்கு நிச்சயமாய்த் தோன்றியது. வள்ளத்தனைவிட, அவன் மனைவி கறுப்பாயியே அவளுக்குக் கொடிய சத்ரு. இவர்களுடைய செல்வத்தைக்கண்டு கறுப்பாயியின் உள்ளத்தில் ஏற்கெனவே பொறாமைத் தீ கனிந்து கொண்டிருந்தது. ஆண்டாயியைப்பற்றி ஒரு சிறிய அபாண்டம் கிளம்பினால் போதும்; கறுப்பாயியின் உள்ளத்திலுள்ள பொறாமைத் தீயைக்காட்டுத்தீயாய்வளர்த்துவிட,வேறுவினை வேண்டியதில்லை. அந்தக் காளி கறுப்பாயி, இதைத் தனக்கு அனுகூலமாக மாற்றிக் கொண்டு விடுவாள்; பார்ப்பதற்குக் கற்பரசிபோல் வேஷம் போடும் ஆண்டாயியே தன் புருஷன் வள்ளத்தனைத் துன்மார்க்கத்தில் இழுக்க முயன்றாள் என்றும், மகா யோக்கியனை தன் புருஷனை, ஆண்டாயி பெரிய தேவடியாள் என்று கண்டு கொள்ளை நோயைப் பார்த்து மனிதர்கள் அஞ்சுவதுபோல் அவளிடமிருந்து பயந்தோடிவிட்டதாகவும், கறுப்பாயி கதை கட்டி விடுவாள்! ஆகையால், ஆண்டாயி இந்தத் தர்ம சங்கடத்தைப் பற்றித் தன் மனத்துக்குள்ளே எண்ணியெண்ணி வெதும்பினளே யொழிய, வெளித் தோற்றத்துக்கு, எவ்விதக் கலவரமுமில்லாமல் குதூகலமா யிருப்பது போலவே நடந்து கொண்டாள்.

ஆனால், இம்மாதிரி மனவேதனை உண்டாகும் சமயங்களில், ஒருவர் தனக்குத் தானே தேற்றிக் கொள்ளும் தைரியம் நீடித்திருப்பது அசாத்தியம். ஆண்டாயியின் முகத்திலே ஒருவிதக் கவலை படர்ந்

தது. பாவம், அவள் புருஷனே இதைக் கண்டு அவள் கர்ப்பவதியா யிருப்பதால் அவள் முகம் வெளிறிட்டுப் போயிருப்பதாகவே முதலில் எண்ணிக் கொண்டான். எனினும், ஏதோ அவள் மனம் சரியா யில்லை என்று சீக்கிரத்திலேயே அவனுக்குத் தெரிந்து விட்டது. ஒரு நாள் இரவு, அவளை, அவன் கேட்டான்: "உனக்கு என்ன வருத்தம்? உன் மனசை, ஏதோ உறுத்திக்கிட்டிருக்குப் போலெ தோணுதே!"

ஆண்டாயி சிரமப்பட்டு முகத்திலே ஒரு புன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "ஒண்ணுமில்லெ, ஒண்ணுமில்லெ. என்னெக் காப்பாத்த, நீ இருக்கே; உன்கிட்ட ரொம்பப் பிரியம் வெச்சிருக்கற தம்பியும் இருக்கு. நீங்க ரெண்டு பேரும் இங்கெ இருக்கச்சே எனக்கு என்ன விசனம்?—ஆனா, சில சமயம் ஒரே யடியாக் கடல் கொந்தளிக்குதே; நீங்க ரெண்டு பேரும் ரொம்பத் தூரம் தண்ணிக்குள்ளே போயிடிறீங்களே; அப்பொ மாத்திரம், இனிமே உங்க முகத்தெப் பாக்காமெ போயிடுவேனோன்னு பயந்து வருது" என்று பதிலளித்தாள்.

காளி நகைத்துக் கொண்டே, "பயமா! செம்படவன் பெண்டாட்டி, கடலுக்குப் பயப்படுதா? ரெம்ப அதிசயமா யிருக்கே!—உன் மனசிலே ஏதோ வேதனை இருக்கு. அதை நீ ஒளிச்சுக் கிட்டிருக்கே. நீ முன்னெ யெல்லாம் இருந்த மாதிரி, இப்ப சந்தோசமா இல்லே" என்றான்.

அவள் பெருமூச்சு விட்டாள். பிறகு, அவன் திகைத்துப் போகும்படி, திடீரென்று, "வேணும்; வள்ளத்தனோடெ சிநேகமே வேணும். அவனெப்

பாத்தா, கழுகு மாதிரி இருக்கு. அவன் கண்ணு, ஏதோ கொள்ளிக்கட்டை மாதிரி இருக்கு" என்றாள்.

"என்ன பித்துக்குள்ளித்தனம்! அவன் எனக்கு என்ன தீம்பு பண்ண முடியும்?" என்று சொல்லி, காளி மீண்டும் கலகல என்று சிரித்தான். அந்தச் சிரிப்பினுல், அவன் சிறிது உற்சாகமடைந்தான்.

ஆண்டாயி மெல்லிய குரலில், மீண்டும், "அந்தி நேரத்திலெ, கடற்கரையில், அவன் உன்னே ஒரு மாதிரியா விறைச்சுப் பாக்கிருன். அதெ நான் கண்டிருக்கேன்" என்று கவலையோடு சொன்னுள்.

"என்னெ இல்லே; என் மீனத்தான் அவன் அப்படிப் பாக்கிருன். என்னெவிட, என் மீன் கிட்டத் தான் அவனுக்குக் கண்ணு" என்றுன் காளி.

இந்தச் சமயத்தில், வெளியே காலடிச் சத்தம் கேட்டது. காளி, குடிசையை விட்டு, வெளி வந்தான்.

"ஏண்டா மாரி; சோறு தின்னறத்துக்கு இந் நேரம் களிச்சு வர்ரியே! இப்பிடித்தாஞ பண்றது? புதுத் தூண்டில் கயித்துக்குப் பசை பூசடான்ஞ, பூராவும் பூசிக்கிட்டேயிருக்கறதா? பாதியெ, நாளேக்கி வெச்சிட்டு வர்ரதில்லே? அப்பிடித்தானே நான் உன் கிட்டச் சொன்னேன்" என்றுன்.

"அதிஞலே எனக்கு நேரமாவலே" என்று பதில் சொன்ஞன் மாரி. அவன் குரல் நடுங்கிற்று.

தம்பி என்னவோ ஒருமாதிரியாக இருக்கக்கண்ட காளி, அவனிடம் நெருங்கி வந்தான். தென்னே மரங் களுக்கிடையே காய்ந்துகொண்டிருந்த பிறைச்சந்திர

ளின் மங்கலான நிலவில், மாரியின் முகத்தைப் பார்த்தபோது, அவனது கன்னத்தில் ரத்தம் பீறிட்டு, ஒரு கீற்றுப் போல் வழிந்திருந்தது.

காளிக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்னடா காயம்? எப்பிடி உண்டாச்சு?" என்று சொல்லி, தன் மனைவியைக் கூப்பிட்டு, ஒரு விளக்குக் கொண்டு வரும்படி கூவினான்.

"வேணும்; வேணும். நான் சொல்லமாட்டேன். என்ன மோசம்! படுமோசமா யிருக்குதே!" என்று புலம்பினான் மாரி.

"அதென்னடா மோசம்! எப்பவும் எதையும் ஒளிக்காமெ எங்கிட்டப் பேசுவே. இப்ப உனக்கு என்ன வந்துடுச்சு? ஏதோ மாதிரி பேசரையே? நீ மாரிதானா பேசறே!"

உடனே மாரி, ஆண்டாயியைச் சுட்டிக் காட்டிக் கொண்டு, தணிந்த குரலில், "அண்ணியெ உள்ளெ போகச் சொல்லு. அது கேக்கவாணும்" என்றான்.

ஆண்டாயி, வந்ததும் வராததுமாக உள்ளே போய்விட்டாள். என்றாலும், அதற்குள்ளேயே தன் கொழுந்தனின் முகத்திலே வழிந்த ரத்தத்தைக் கண்டு கொண்டாள்; அவனுடைய கிசுகிசுத்த வார்த்தைகளும் அவள் காதிலே விழாமல் இல்லை. அதனால், காற்றிலே அலைபடும் இலையைப் போல், அவளது இதயம் படபட என்று அடித்துக்கொண்டது. ஏதாவது விபரீதம் நேர்ந்துவிட்டதோ!

நடந்த விஷயத்தை யெல்லாம், மாரி சொன்னான். புதிய தூண்டில் கயிற்றுக்கு, அவன் பசை தடவிக்

கொண்டிருந்தான். அப்போது பக்கத்திலே என்ன நடக்கிறது என்றுகூடத் தெரியாமல், அவன் அதிலே ஆழ்ந்த கவனம் செலுத்தி யிருந்தான். இடையிலே சற்று நின்று பசைப்பானையைக் கொஞ்சம் கிளறிவிடுவதற்காகத் தலையை நிமிர்த்தினன். அந்தச் சமயத்தில், தங்களைக் குறித்து யாரோ கேவலமாய்த் தூஷித்துப் பேசும் சொற்கள் இவன் காதில் விழுந்தன. எல்லார் குரலையும் தூக்கி யடித்தது ஒரு குரல். அது வள்ளத்தனின் குரலே என்று அவனுக்கு உடனே தெரிந்தது. அவர்கள் எல்லாரும் ஆபாசமாய்ச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அதற்கிடையிலே வள்ளத்தன் சொன்னன் : 'அதுனலெ தான் அவன் கண்ணலமே செஞ்சுக்கலெ. கொழுந்தன் கிட்ட அவளுக்கு உள்ள பிரியம், வெறும் பிரியமில்லே. அண்ணி மாதிரியா அவ நடந்துக்கரு? காளி சுத்தக் களுதெ. அவனுக்கு மூளையே கெடையாது. தன் காலடியிலே நடக்கறது கூட அவன் கண்ணுக்குத் தெரிய மாட்டேங்குதே!'' பின்பு, வள்ளத்தன், மாரியைப் பலவாறு பழித்துத் திட்டிக் கொண்டிருந்தான். இதை யெல்லாம் கேட்ட மாரி, மெள்ளப் பின்புறமாய் வந்து, பழிகார வள்ளத்தனின் தோளில் அடிப்பதற்காகத் தன் கைத் துடுப்பை ஓங்கினன். அந்தக் குறி தவறி விட்டது. அதன்மேல், வள்ளத்தன், தன் கைத் தூண்டில் முள்ளினல், மாரியைக் காயப்படுத்தி விட்டான். என்றலும், தான் பயங்காளியல்ல என்று மாரி நிரூபித்து விட்டான் அல்லவா?

## 6

இதற்குள்ளேயே ஊரெல்லாம் வம்பளக்க ஆரம்பித்து விட்டார்கள். தன்னை வள்ளத்தன் வேண்டு

மென்றே அவமதிக்கிறான் என்று காளிக்குத் தோன்றியது. தன்னுடைய உத்தம மனைவியின் பெயரை, குடிகாரக் காலிப் பயல்கள் தங்கள் உளறுவாய்களால் உச்சரிப்பதா என்று அவன் மனம் பதைத்தான். ஆனால், ஆத்திரப்பட்டு எதுவும் செய்ய, அவன் விரும்பவில்லை. செய்தால், நிலைமை இன்னும் மோசமாய்ப் போகும் என்று அவன் எண்ணினான். தன் கோபத்தை அடக்கிக்கொண்டு சமரசமாகவே பேச வேண்டுமென்று நினைத்தான். ஆகையால், அபவாதத்தைக் கிளப்பி விட்ட மூலகர்த்தாவான வள்ளத்தனிடம் சென்று, சாந்தமாகவே, "உன் பெண்சாதியைப் பத்தி, யாராவது தீங்கு பேசினா, நீ கேட்டுக்கிட்டு, சும்மா இருப்பியா?" என்று வினவினான். தன்னுடைய சாந்தத்தைக் கண்டு, அவனுக்கே ஆச்சரியமா யிருந்தது.

பச்சையாக இவன் இப்படிக் கேட்டதும், வள்ளத்தன் கோபமடைந்தான். "அதுபத்தி என் பெண்சாதி பாத்துப்பா. என் வேலெ யில்லே அது" என்று பதிலளித்தான்.

"அதிருக்கலாம். ஆனா, பிறத்தியான் பெண்சாதியைப் பத்தி நீ அவதூறு பேசினா, அவ புருசன் சும்மா விடமாட்டான். ஒன் வாயெக் கட்டிப் போடுவான். தெரிஞ்சுக்கிட்டியா?"

"பூ! ஒரு கட்டு மரத்தெக் கட்டக்கூட லாயக்கில்லாத பய நீ! முதல்லெ அதெக் கத்துக்கிட்டு வா; அப்பறம் மனுசன் வாயெக் கட்டலாம்."

"ஆமாண்டா, வள்ளா. நல்ல கெட்டிக்காரத்தனமாத்தான் பேசறே. ஆனா, ஏன் நாய் மாதிரி குலேக்கரே?"

வள்ளத்தனின் உதடுகள் துடித்தன. பந்தயக் குதிரை போல, அவன் நாசிகள் அகன்று சீறின. ஆத்திரம் நெஞ்சை அடைக்க, அவன் உரக்கக் கத்தினுன்: "என்னுடா? என் தூண்டில் முள்ளெ, நீயும் கூட ருசி பாக்கணுமா?"

"வள்ளா! பதருதே, அப்பா! அந்தத் தூண்டில் முள்ளு என் கிட்டேயும் இருக்குது. கள்ளு உன் மூளேயெ மழுக்கிப் பிடிச்சு; அந்த மகராசி கறுப்பாயி, ஒனக்கு உரை யேத்திப் பிட்டா. ஆமாம்; என் தம்பி ஒன்கிட்ட ஒரு வம்புதும்புக்கும் வல்லியே. அவனெ எதுக்காக அப்பிடி அடிச்சுக் காயப்படுத்தினே?" என்று மிகவும் சாந்தமாகவே காளி கேட்டான். இந்தச் சாந்தமான குரலே, வள்ளத்தனுக்கு இன்னும் அதிக ஆத்திரத்தைக் கிளறி விட்டது.

"காயமா! அவனெக் கொன்னே போட்டிருப்பேன். ஆளு ஒன் பெண்சாதிக்குக் கஸ்டமா யிருக்குமேன்னு தான் விட்டிட்டேன். ரெண்டும் பன்னிங்க" என்று வள்ளத்தன் உறுமினுன்.

இப்படி முகத்தில் அடித்தாற் போல் அவமதித்துப் பேசும்போது, எப்பேர்ப்பட்ட பொறுமையுள்ள மனிதனும், தாங்க மாட்டான். காளியின் உள்ளம் கொதித்தது. இந்தக் காலிப் பயலிடம் ஹிதமாய் நியாயம் பேசுவது, தனக்கே அவமானம் என்று, அவன் எண்ணினுன். காளி ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்து நிறுத்து, மெல்ல மெல்ல, அழுத்தந் திருத்தமான குரலில் சொன்னுன்: "ஒன் படுபாவி நாக்கு, மாரியம்மனெக் கூடப் பொல்லாப்புச் சொல்லும். அந்த நாக்கெ, அடியோடே அறுத்துப் போட

றேன். ஒன் மனசு அழுகிக் கெடக்கு-கடக்கரையிலே, காக்கா கொத்தக் கொத்த அழுகி நாத்த மெடுக்குமே, அந்த மீன் குஞ்சு மாதிரி ஒன் மனசு அழுகிக் கெடக்கு அதெ வெட்டித் துண்டம் போட்டுடறேன். ஒன் நாக்கும் மனசும் பிளெச்சுப் போவணும்னு, நீ ஒளுங்கா நடந்துக்கோ."

இதைக் கேட்டதும் வள்ளத்தன், அடிவயிற்றிலிருந்து காறித் துப்பினான். மலையிலிருந்து மணியாம் பருக்கைகளை அலங்கோலமாய் வாரியடிக்கும் நீர் வீழ்ச்சிபோல,வள்ளத்தனின் வாயிலிருந்து வசவு மாரி பொழிந்தது. காளியின் வம்ச பரம்பரையையே, நாக்கில் நரம்பில்லாமல் அநியாயமாய்த் தூற்றினான். காளியின் அக்காள், தங்கை, மனைவி, மற்றுமுள்ள அத்தனை பெண் உறவினர்களையும் கேவலமாய்த் திட்டினான். மேலும், தன் முஷ்டியை ஆட்டிக்கொண்டு, வெறிநாய் குரைப்பது மாதிரி, "என்ன சொன்னே, பயலே! ஒன்னெ இதோ கொன்னு போடறேன், பாரு" என்று கத்தினான். அப்போது அவனுக்கு, முன்னொரு நாள் மாலை தன்னை ஆண்டாயி துடைப்பத்தால் அடித்து நாயை ஏவித் துரத்தியதும், தப்பினோம் பிழைத்தோம் என்று தான் ஓட்டம் பிடித்ததும், அப்படி ஓடுகையில் ஒரு தென்னை மரத்தில் தன் தலை முட்டிக் கொள்ளத் தெரிந்ததும் ஞாபகம் வந்தன.

## 7

அவர்களுடைய குடிசைக்குத் தீ வைத்து விடலாமா என்று, வள்ளத்தன் முதலிலே நினைத்தான். ஆனால், அப்படி ஒரு குடிசையிலே தீ வைத்தால்,

குப்பம் பூராவுமே எரிந்து விடுமே என்று பயந்து, அந்த எண்ணத்தை அவன் கைவிட்டான். காளி, மாரி இரு சகோதரர்களிடமும் வள்ளத்தனுக்குக் கொடுந் துவேஷம் இருப்பது, குப்பத்திலுள்ள பெரும்பாலான செம்படவர்களுக்குத் தெரியும். ஆனால், அதன் மூல காரணம் என்ன என்று அவர் களுக்குப் புரியவில்லை. வள்ளத்தனின் அக்கிரமமான பேச்சை யெல்லாம், வாய் பேசாமல் அவர்கள் கேட் டுக் கொண்டிருப்பதுண்டு. அதுவும், கள்ளுக்கடை யில் நண்பர்களாகக் கூடிக் குடிக்கும்போது மட்டி லும் தான். ஆனால், தாங்கள் அக்கிரமத்துக்குப் பயந்தவர்கள். வள்ளத்தன் தன்னிடம் வந்து முறை தவறி நடந்ததையும், தான் அவனை விரட்டியபோது பிசாசைப்போல் அவன் பயமுறுத்தியதையும் குப்பத் துச் செம்படவர்களிடம் ஆண்டாயி சொல்லியிருந் தால், அவள் வார்த்தையை, அவர்கள் நிச்சயம் நம்பி யிருப்பார்கள்; வள்ளத்தன் மேல், அவர்களுக்குச் சந் தேகமும் உண்டாகி யிருக்கும். வள்ளத்தனின் பெண் டாட்டி கறுப்பாயியே, அவனை இந்தக் காரியம் செய் யும்படி தூண்டி யிருக்க வேண்டும் என்று, அத்தனை செம்படவர்களும் ஒரே முகமாய்ச் சொல்லி யிருப் பார்கள்.

ஆகையால், வள்ளத்தன், வேறொரு வேலை செய்ய, யோசித்தான். அதே யோசனையால், அவ னுக்கு ஒரு பேய்க் களிப்பு—திருப்தி—உண்டாயிற்று.

## 8

அன்று காலையில் சூரியன் உதிக்கும்போது, வானம் நிஷ்களங்கமாகவே யிருந்தது. ஆனால், உச்சி

நேரத்தில், அது புகை யடைந்த கண்ணுடிபோல், மங்க ஆரம்பித்தது. அடி வானத்தைச் சூழ, சிறுசிறு மேகங்கள் ஒன்று இரண்டு கறுத்தன. அலைகளை எழுப்பி அவை ஒன்றை ஒன்று துரத்தும்படி விரட்டிக்கொண்டிருந்த காற்று, தூரத்திலே மெல்ல மெல்ல மடிந்தது. மீன் கூட்டங்கள், சஞ்சலமுற்று, ஒரே திசையில் பாய்ந்தோடின. இவை யெல்லாம், தலைக்கு மேலே வந்து கொண்டிருக்கும் கடும் புயலுக்குத்தான் அறிகுறி என்று, செம்படவர்களுக்கு நன்ருய்த் தெரியும். அவர்கள் அதிவேகமாய்க் கரையை நோக்கிக் கட்டு மரங்களைச் செலுத்திஞர்கள்.

காளியும் மாரியும், மற்றவர்களை விடச் சிறிது அதிக தூரம் சென்றிருந்தார்கள். வனந்தரம் போலிருந்த அந்த ஜலப் பரப்பில், அவர்களது கட்டு மரம் தன்னந்தனியே மிதந்து கொண்டிருந்தது. வானிலும் கடலிலும் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்ட காளி, தன் தம்பியிடம் சொன்ஞன் :

"மாரி, காத்து ஓலமிடுது, பாத்தியா. அலெயெல்லாம், சுருண்டு சுருண்டு விளுது. பெரிய புயல்தான் வரப் போவுது. அது வரத்துக்குள்ளே, வலையெயும் தூண்டிக் கயித்தையும் இளுத்துச் சுருட்டுவோம். சுறுக்கக் கரைக்கு ஓடிப் போவணும்."

சகோதரர்கள் இருவரும் பரபர என்று, வேலை செய்ய ஆரம்பித்தார்கள். வலையை இழுத்தார்கள்: வலையின் நாலு ஓரங்களிலும் கட்டி, கமான் வளைவு போல் மிதந்து கொண்டிருந்த மிதப்புக் கட்டைகள் வரவரச் சுருங்கி ஒன்று கூடின; கடைசியிலே நீர் சொட்டும் வலைப் பின்னல்கள் குவியலாய்ச் சுருண்

டன. அந்தச் சுருளை இழுத்துக் கட்டு மரத்திலே போட்டார்கள். வலைப் பின்னல்களின் கண் வழியாய், உள்ளே குப்புறக் கவிழ்ந்து கிடந்த மீன்கள் வெள்ளிக் கட்டிகள்போல் தகதக என்று மின்னின. பிறகு, அலறிக் கொண்டு வரும் புயல்காற்று, கட்டு மரப் பாயைப் பிய்த்துத் துகளாக்கி விடும்போல் இருந்ததால், அவர்கள் அதைச் சுருட்டி, கட்டுமர நுனியிலும் அடியிலும் இழுத்துக் கட்டினார்கள். தூண்டில் கயிறுகளையும் இழுத்துச் சுற்றி, அவரவர் இடுப்புகளில் ஒவ்வொரு பகுதியைச் செருகிக் கொண்டார்கள்—இத்தனை காரியமும், ஜலப் பரப்பிலே தோன்றிய ஓர் அசாதாரண அமைதி நிலவிய சிறிது நேரத்திலே நடந்து விட்டது. அவர்கள் தங்கள் துடுப்புகளைக் கெட்டியாய்ப் பிடித்து வலிக்கத் தொடங்கினார்கள்.

"கிட்டத்திலே ஒரு கட்டுமரம்கூட நம்ப கண்ணிலே படலியே" என்று முதன் முதலாகப் பேச்சைத் தொடங்கினான் காளி.

"புயல் வருதுன்னு அவங்களெல்லாம், முந்தியே ஓடிட்டாங்க" என்றான் மாரி.

அவன் பேசி முடியவில்லை; அதற்குள், தன் இடது புறத்தில், தூண்டில் வீச்சுத் தூரத்தில், அலை உச்சிமீது ஒரு கட்டு மரம் கிளம்பி நின்றதை, அவன் கண்டான்.

"நமக்குத் துணை அதோ ஒண்ணு இருக்குது" என்று, மாரி ஆச்சரியத்தோடு சொன்னான்.

அந்தக் கட்டு மரம், கிட்ட நெருங்கி வந்தது; சகோதரர்கள் இருவரும், அதிலே வெள்ளத்தனைக் கண்டார்கள்.

வெள்ளத்தன் "ஓஹோ!" என்று சந்தோஷமாய்க் கூவிக் கொண்டு, "நான் ரொம்ப அதிட்டக்காரன் தான். என்னடாப்பா கடும்புய வருதே, தனியா இருக்கணுமேன்னு பயந்தேன். துணை கிடைச்சுப் போச்சு" என்றான்.

அவன் மனம் விட்டுத் தாராளமாய்ப் பேசியதையும், தங்களிடம் அவனுக்கிருந்த குரோதம் இப்போது துளிக்கூடக் காணப்படாததையும் பார்த்து, காளியும் மாரியும் வியப் படைந்தார்கள். கடைசியாய், அவன் நல்வழிக்குத் திரும்பி, தங்களோடு சிநேகமாயிருக்க விரும்புகிறான் என்று எண்ணினார்கள்.

"எங்களுக்கும் தான் அதிட்டம், வள்ளா! கிட்ட வலிச்சுக்கிட்டு வா. நம்ப ரெண்டு கட்டு மரதெயும் சேத்துக் கட்டிப்பிடுவம். அப்பத்தான், பத்திரமா யிருக்கும்" என்று களிப்போடு சொன்னான் காளி.

"வாணுமப்பா, காளி. உன்கிட்ட இருக்கறதே, போதும், அதுவே எனக்குப் பத்திரம் தான்."

"உன் இஸ்டம்."

கட்டுமரங்களை, வலித்துக் கொண்டு சென்றார்கள். நுரை சிதறும் அலைகளின் உச்சிமீது எழும்பியும், பசுமையான ஜல மட்டத்திலே விழுந்தும் கட்டு மரங்கள் ஆடியாடிச் சென்று கொண்டேயிருக்கையில், வள்ளத்தன், காளியோடு தமாஷ் செய்துகொண்டும், கலகலப்பாய்ப் பேசிக் கொண்டுமிருந்தான்.

ஆனல், மாரிக்கோ, அபாண்டப் பழி கூறித் தன்னை யும் காயப்படுத்திய அந்தப் பயலை நம்பவே முடிய வில்லை. பழி வாங்கும் ஆசையைத் தீர்த்துக்கொள் வதற்காகத் தான் ஒரு வேளை இப்படிச் சமரசத்துக்கு வந்ததுபோல், அவன் வேஷம் போடுகிருனே என் னவோ? கல்மனம் படைத்த கொடியவனுன அவன், ஏதாவது சதி செய்ய எண்ணியிருக்கலா மல்லவா? இல்லையானல், அவன் ஏன் தனியாக வந்திருக்கிருன்? எதற்காக இப்படி வலிய வந்து தங்களிடம் நேசங் கொண்டாடுகிருன்? இவ்விதம் திடீரென்று அவ னுக்கு நல்லெண்ணம் ஏற்பட்ட காரணம் என்ன என்று, அவனைத் தன் அண்ணன் ஏன் கேட்கவில்லை? இந்த எண்ணங்களே திரும்பத் திரும்ப அவன் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தன. தான் எப்படி யும் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டு மென்று, மாரி தீர்மானித்துக் கொண்டான்.

உயிரற்ற ராட்சசனின் கண்ணைப்போல் மங்கி யிருந்த சூரியன், இப்போது மேற்கிலிருந்து பாய்ந் தோடிவந்த ஒரு மேகத்துக்குள்ளே புகுந்து, கண்ணை விட்டே மறைந்தது. வான விதானத்தில் சூழ்ந் திருந்த மேகங்களெல்லாம் ஒன்று திரண்டு கறுத்தன.

கொஞ்சம் கொஞ்சமாய் மங்கி, காரிருளும் வந்து மூடியது. அலைகள் அணியணியாய்ப் படையெடுத்து வீசி மோதின. அலைக்கும் அலைக்கு மிடையே தாழ்ந்த பள்ளங்களில், காற்றினல் அடிபட்டுக் கிழிந்து சின்னபின்னமாய்ச் சிதறிய நுரைகள், எல்லை யற்ற அகண்டமாய்ப் பறந்து கொண்டிருந்தன.

கட்டு மரங்களை இன்னும், ஒரு மணி நேரம் வலித்தால் தான் கரை போய்ச் சேரலாம்.

"அதோ பாரு, பாரு!" என்று, திடீரென்று துறைமுகத்தைச் சுட்டிக் காட்டிக் கொண்டு, கத்தினான் வள்ளத்தன். மேலும், "புகை, கனமான புகை. தீ கூடக் கிளம்புது. எண்ணெ டாங்கி எரியுது போலே தோணுது" என்று கூறினான்.

காளியும் மாரியும் ஏககாலத்தில், துடுப்பு வலிப்பதை நிறுத்தி, துறைமுகத்தைத் திரும்பிப் பார்த்தார்கள். ஆனால், ஏதோ தீங்கு வரப்போகிறது என்று மாரிக்கு மட்டில் உள்ளத்தில் ஓர் உணர்ச்சி தோன்றவே, சட்டென்று அவன் மறுபுறம் திரும்பிப் பார்த்தான். பார்த்தபோது, வள்ளத்தனின் முகம் படுகோரமாய் விகாரமடைந்திருந்ததையும், அவன் கண்களில் கொலை வெறி தாண்டவமாடியதையும் ஒரே கணத்தில் அவன் கண்டுகொண்டான். தன் துடுப்புகளைப் போட்டுவிட்டு, தலையிலே ஒரு பெரிய பாராங்கல்லை வள்ளத்தன் தாங்கிக்கொண்டிருந்தான். தண்ணீர் அமைதியா யிருக்கும் இடத்திலே மீன் பிடிப்பதற்கு நங்கூரமாக, ஒரு வளைந்த கழியின் நுனியிலே கட்டி வைத்திருப்பார்களே, அந்தக் கல்தான் அது. மாரி வீரிட்டுக் கத்தினான். காளி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அடுத்த நிமிஷத்திலே அவன் கண்ட பயங்கரக் காட்சியால், இடிவிழுந்த மரம்போலானான். வள்ளத்தன் தூக்கிக்கொண்டிருந்த பாராங்கல், அதிவேகமாய்ப் பாய்ந்துவந்து, தன் தம்பியின் தலை மீது மோதி, அவனைக் கொந்தளிக்கும் கடலிலே தள்ளி விட்டதை, காளி கண்டான். மாரி மூழ்கிய இடத்தில், நீரின் மேல், செக்கச்செவேல் என்று ரத்தக் கறையொன்று தென்பட்டு, மறு நிமிஷமே மறைந்தது. அதைப் பார்த்த காளி, தன் தம்பியை மோதிய கல்

அவன் உயிரையே போக்கிவிட்டது என்று தெரிந்து கொண்டான். எப்போதும் கேட்டுப் பழக்கமான ஒரு பேய்ச்சிரிப்பு, அலைகளைக் கிழித்துக்கொண்டு, அவன் காதிலே வந்து விழுந்தது. அப்போதுதான் காளிக்கு ஸ்மரணை வந்தது. அவன் சீறி நிமிர்ந்தான். துக்கத்தால் பித்துப் பிடித்தவன் போல், வள்ளத் தனைப் பார்த்து ஹோ என்று அலறினான். காளி பார்த்துக்கொண்டே யிருக்கையில், மலை போல் எழுந்து நெளியும் ஓர் அலை, வள்ளத்தனின் கட்டுமரத் தைத் தூக்கி யெறிந்து, அதைக் கட்டியிருந்த கயிறு களைப் பிய்த்துவிட்டது. கட்டவிழ்ந்த மரங்கள், சித றிப் பிரிந்து, பம்பரமாய் வட்டமிட்டன. கொலை பாதகனான வள்ளத்தன், இருளை வாரிப் பிடிப்பது போல் கைகளை விரித்துக்கொண்டு, பொங்குகின்ற நுரைத் திரளுக்குள்ளே மூழ்கி மறைந்தான்.

புயல் ஊளை யிட்டது; அலைகள் உறுமின. காற் றும் நீரும் உக்ரமாய்ப் போராடிய அந்தப் பெரும் குழப்பத்தின் நடுவே, ஓர் உருக்கமான கதறல் கேட் டது: "தம்பீ! நீதாண்டா எனக்கு உயிர் கொடுத்தே! என் கண்ணான தம்பீ! தம்பீ!!..."

மாண்டவரை மீண்டும் கண்ணிலேகூடக் காட்ட மறுத்து விட்டது கடல். எவ்வளவோ மாறுதல்களுக் கிடையே மாறாதிருந்துவரும் ஆழ்கடலின் அகண்ட ஜலப் பரப்புக்குள்ளே, எத்தனையோ நூற்றாண்டுக ளாய்,எண்ணற்ற ரகஸ்யங்கள் ஒளிந்து கிடக்கின்றன. அந்த ரகஸ்யங்களோடு ரகஸ்யமாய் இந்தக் கொலை பாதகத்தையும் அது சேர்த்துக் கொண்டது. இதோ கடல், துக்கத்தோடு அலறுகிறது. ஆயினும், அதன்

ஆழத்திலே புதைந்து கிடக்கும் ரகஸ்யத்தை, கோர மான புயல் காற்றினாலும் பறித்தெடுக்க முடிய வில்லை. இதோ இந்தக் கடல்கரை, கன்னிகழியா எழிலுடன் பொலிகிறது. இம்மண்ணுலகில் சஞ்சலம் நிறைந்த உயிர்க்குலம் தோன்று முன்பே ஒளியும் மணமும் வர்ணமும் எவ்வளவு தூய்மையாய் நிறைந்து விளங்கினவோ, அவ்வாறே இன்றும் இந்தக் கடல் கரை பொலிகிறது.

## 9

இப்போது இரண்டு வருஷங்களுக்குமேல் ஆகி விட்டது. அன்றொரு நாள் மாலை, அந்திக் கதிரவன், மணல் மீதும் கடல் மீதும் பரவிய தன் சொர்ணச் சிறகுகளை மடக்கிக் கொள்ளும் நேரத்திலே, கடல் கரையில் நான் நடந்து கொண்டிருந்தேன். அப் போது, ஒரு கட்டுமரம் புதிதாய்த் தயாராவதைப் பார்த்துக் கொண்டு நின்ற சில ஜனங்களை, நான் கண் டேன். இரண்டு கட்டைகள் ஏற்கெனவே செதுக் கப்பட்டு, கச்சிதமாய், கண் குளிரும் ரோஜா வர்ணத் துடன் கிடந்தன. தச்சன், மூன்றாவது கட்டையைச் செதுக்கிக் கொண்டிருந்தான். அவன் வாச்சியை ஒவ்வொரு முறை வீசும்போதும், அந்தக் கட்டையி லிருந்து, சதை தெரிப்பது போல் ஒவ்வொரு துணுக்கு, சிதறிப் பறந்தது. ஒரு காலத்தில் ஓங்கி வளர்ந்து, சந்திரனையே தன் தலையிலே பூச்சூடி, காற் றிலே இசைபாடிக் களித்திருந்த அந்த மலை வேம்பு, இன்று இதோ மண்ணிலே ஒரு கட்டுமரக் கட்டை யாய் விழுந்து கிடக்கிறது.

"வாச்சியைக்கொஞ்சம் தீட்டிக்கோ, அண்ணே! அது சொத்துச் சொத்துன்னு மரத்தெ நசுக்குது; செதுக்கலே" என்று ஒரு குரல் தச்சனிடம் கூறுவதை நான் கேட்டேன். அது எனக்குப் பழக்கமான குரலா யிருந்ததால், யாரென்று திரும்பிப் பார்த்தேன். நான் நினைத்தபடியே, அது காளிதான். அவனும் என்பக்கம் பார்த்தான். எங்கள் கண்கள் சந்தித்தன. அவன் அந்தக் கூட்டத்தை விட்டு விலகி, என் அருகே வந் தான்.

"என்னப்பா, காளி, உன் துடுப்பைப் போலே, உன் உடம்பும் வர வர மெலிஞ்சு போச்சே, அப்பா. ஏன் இப்படி?" என்று நான் கேட்டேன்.

துக்கம் ததும்பும் கண்களோடு, "ஆமாங்க. அந்தப் பய போனதிலேருந்து இப்படி ஆயிடிச்சு. அதுக்கப்புறம், பல மாச காலம் நான் மீன் பிடிக் கவே போறதில்லே. என் மனசு உடெஞ்சு போச் சுங்க. கடலெ விட்டா, செம்படவங்களுக்கு என்ன பொளெப்புங்க? என் மச்சான் தான் இப்ப எனக்கு ஒத்தாசையா இருக்கான். ஆனலும், **அவன்** மாதிரி வருமா? – அதோ நிக்கிருனே இவன் தான் என் மச் சான்" என்று சொல்லி, ஒரு வாலிபனைச் சுட்டிக் காட்டினன். அவன் மண்ணிலே உட்கார்ந்திருந்தான்.

காளி மேலும் தொடர்ந்து, "இப்பதான் புதுசா இந்தக் கட்டு மரத்தெக் கட்டருேம். இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே, இதெக் கடல்லெ வெள்ளோட் டம் விடலாம்னு நெனச்சிருக்கோம். இதெ சாமி முன்னெ வெச்சு, படையல் எல்லாம் போட்டாச் சுங்க" என்ருன்.

பின்பு, அவன், அந்தப் பழைய நாட்களில் தன் தம்பியின் வரவை எதிர்பார்த்து நோக்குவதேபோல, மரீனு ரஸ்தாவை ஆவலோடு நிமிர்ந்து பார்த்தான். அவன் முகம் திடீரென்று பிரகாசமடைந்திருந்ததைக் கண்டு, நான் ஆச்சர்யமுற்றேன். அவன் நோக்கிய திசையில், நானும் திரும்பிப் பார்த்தேன். அங்கே மணலில் ஒரு பெண், தன் இடுப்பிலே ஒரு குழந்தையைத் தாங்கிக்கொண்டு, பக்கத்திலே ஒரு சிறுவன் தொடர்ந்துவர, இவ்விடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால், ஒரு நாயும் ஓடி வந்துகொண்டிருந்தது.

காளி ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, அந்தப் பெண்ணிடமிருந்த குழந்தையை ஆவலோடு தன் கையிலே பிடுங்கிக்கொண்டு, என்னிடம் திரும்பி வந்தான்.

“இவன்தானுங்க சின்ன மாரி” என்று அவன் கூவியபோது, அவனுடைய முகம் புன்முறுவலாய் மலர்ந்தது. கொழ கொழ என்றிருந்த அந்த இரண்டு வயதுக் குழந்தை, காளியின் மார்பைத் தன் சிறு கால்களால் உதைத்தது. கடலையே அடக்கி யாளும் வலிமை கொண்டது போல் விளங்கியது அந்தக் குழந்தை.

சின்ன மாரியின் கட்டுக் கடங்காத குறும்பைக் கண்டு, ஆனந்தம் பொங்கியவளாய், ஆண்டாயி சற்று எட்ட நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

“தம்பியையே உரிச்சு வெச்சிருக்குங்க இது. அவனேதான். இல்லியா?” என்று சொல்லி, குழந்தை

யைக் காளி தன் மார்போடு அணைத்துக் கொண்டான்.

அந்தச் செம்படவன் ஒரு குழந்தையைப் போல் குதூகல மடைந்தான். அந்த வெள்ளை மனசின் களிப்பு, மிகவும் புனிதமாய் எனக்குத் தோன்றியது. அது என் உள்ளத்தையே கவர்ந்தது. தன் தம்பியே இந்தக் குழந்தையாய் மறு ஜன்மம் எடுத்து வந்திருப்பது போல், அவன் நிச்சயமாய் எண்ணினான். அந்த எண்ணந்தான், அவனுக்கு நிரந்தரமான ஆறுதல் அளித்தது.

# கிளிஞ்சல்

தறியில் பாயும் ஓடம்போல் நாட்கள் பறந்தோடின; ஜப மாலையில் உருளும் மணிகளுக்கு மேல் வேகமாய் ஓடின. ஆனல், துயரத்துக்கு மட்டில், ஓடத் திராணி யில்லை; கால ஓட்டம், அதன் சுமையைக் குறைக்கவில்லை. சியாமளாவின் வாழ்நாட்கள், துயரச் சுமை நிறைந்திருந்தன; வாழ்வே அவளுக்கு ஒளி மங்கிப் போயிற்று.

சியாமளா! என்ன இன்னிசை ததும்பும் பெயர்! ஒரு காலத்தில், சியாமளா மகா அழகி. நிலவிலே மலர்ந்த மல்லிகையைப் பழிக்கும் கழுத்தும் கைகளும்; கட்டுக் கடங்காத இருள்போன்ற கூந்தல்! ஆனல், இனி ஏன் அவள் அழகாயிருக்க வேண்டும்? சூரிய ஒளியிலே மூழ்கி விகசிக்கும் அரும்புகளைப் போல், முன்னே அவள் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த வாழ்க்கைக் குதூகலமெல்லாம் சிதறிப் போயிற்று; ஆனந்த பரவசத்தில் திளைத்த பட்சிகளைப் போல் விம்மி நின்ற அவளுடைய இரு மார்புகளும் பதுங்கிப் போயின. ஓர் இளம் மனைவியின் மனோரதங்களனைத்தும் அவிந்து உதிர்ந்தன. சியாமளாவின் முகத்தில் தென்பட்டவை கண்களல்ல; இரண்டு பெரும் கண்ணீர்த் துளிகள்.

வீட்டுக் காரியங்களை முடித்துவிட்டு, சியாமளா தன் அறையில் உட்கார்ந்திருந்தாள். அங்கே உட்கார்ந்தபடியே, கதவு வழியாய், உள்ளே பார்த்துக்

கொண்டிருந்தாள். ஒரு மூலையில் பொன்னிறமாய்க் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் அடுப்பு, சமையலறை பூராவையும் ஒளி செய்து கொண்டிருந் தது; அலமாரியில் பளபள என்று தேய்த்து வைத் திருக்கும் பாத்திரங்கள் மின்னின; சுவரில் ஆணி யடித்து மாட்டியிருந்த ஒரு கயிற்றிலே, சில கரண்டி களும் துடுப்புகளும் கட்டித் தொங்கிக் கொண்டிருந் தன. அந்த அடுப்பங்கரையே சியாமளாவின் சகல ஆஸ்தியும் சொர்க்கமும்; அதிலேதான், தன் துய ரத்தை அவள் சற்று மறந்திருப்பாள்.

அந்தி வேளையின் இருள் திரை மெல்ல மெல்ல உலகை வந்து கவிந்தது. சிறிது நேரத்தில், சியா மளாவின் தம்பி, ஆபீஸிலிருந்து வந்து விடுவான்; கோயிலுக்குச் சென்ற தாயாரும் திரும்பி விடுவாள். பக்கத்து வீட்டு அம்மாள், வாசற்படியில் நின்று கொண்டு, வாசலில் மாடு கறந்த பால்காரனிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். அந்த வீட்டுத் தாழ்வாரத்தில் சில சிறுமிகள் ஏக ஆரவாரமாய்க் கிள்ளாப்பிருண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்; கடல்கரைக்கு ஒன்றன்பின் ஒன்றாய் இடைவிடாமல் ஓடும் மோட்டார்க் கார்களின் 'ஹாங்' கார சப்தம், முடுக்கிய நாணைப்போல் எதிரே துலங்கிய ரஸ்தாவில் முழங்கிக்கொண்டிருந்தது. ஆனால், இந்தச் சப்தமெல் லாம், பழக்கமற்ற எவனோ மீட்டிய வீணையின் அபஸ்வரம் போல்தான் சியாமளாவின் காதில் கேட் டுக் கொண்டிருந்தது. அபஸ்வரக் களஞ்சியம்! துன்ப மயமான ஒரே தந்தியில் கானம் செய்து கொண்டிருந்த அவளுக்கு, இதெல்லாம் வேறெப்படி யிருக்கும்?

# அருணோதயம் தொகைநூல் வரிசை

இந்த நூல்வரிசை தமிழகத்திற்கு புதியது மட்டு மல்ல, சிறப்புடையது என்று நல்லறிஞர் பலரும் போற்றுகின்றனர்.

உங்கள் ஆதரவும், வரவேற்பும்தான் இதன் வளர்ச்சிக்கு அடிகோலும்.

ஒவ்வொரு மாணவரிடமும் இருக்கவேண்டிய **இலக்கியச் செல்வம்.**

ஒவ்வொரு இலக்கிய ரசிகரும் படிக்கவேண்டிய **அறிவுக் கருவூலம்.**

ஒவ்வொரு நூல் நிலையத்திலும் இருக்கவேண்டிய **கலைப் பெட்டகம்.**

●

***இன்றே எழுதுங்கள்***

## அருணோதயம் : : சென்னை-14.

WRAPPER PRINTED AT THE ASIAN PRINTERS, MADRAS-5.

"சியாமளா!"

வெளியில் எங்கிருந்தோ பெண்ணைக் கூப்பிடும் தாயின் குரல் அது. குழந்தையோடு கொஞ்சும் மெல்லிய குரலில் அவள் ஏதோ பேசுவது, சியாமளாவின் காதில் விழுந்தது. இடையிடையே, ஈசுவரனின் அனந்த கல்யாண குணங்களை வியந்து புகழும் திரு நாமங்களைப் பக்தியோடு அவள் உச்சரிப்பதும், சியாமளாவின் காதில் விழுந்தது.

சியாமளா கதவைத் திறந்தாள்.

"ஏண்டி சியாமளா! தம்பி இன்னும் ஆபீஸிலேயிருந்து வரல்லையா?"

அநாவசியமான கேள்வி; அவன் வராதது அவளுக்கே தெரியும். என்றாலும், பெற்ற மனம், பிள்ளை இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவனைப்பற்றி விசாரித்துக் கொண்டேயிருப்பதில் ஓர் ஆனந்தம் அடைகிறது.

"வரல்லை, அம்மா."

இதுவரையில் பாட்டியின் இடுப்பில் இருந்து வண்ணம் ஒரு தேங்காய்க் கீற்றைக் கடித்துக் கொண்டிருந்த மூன்று வயது ஆண் குழந்தையொன்று, பாட்டியின் இடுப்பை விட்டுக் குதித்து, சியாமளாவிடம் ஓடி வந்தது.

பாட்டி சிரித்துக் கொண்டே, கண்டிப்பது போன்ற குரலில், "வேணுங்கறபோது மட்டும் ஸவாரி செய்ய எங்கிட்ட வரதாக்கும்!" என்றாள்.

குழந்தை சிறிது வெட்கத்தோடு புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டு, தன் தாயின் மடியிலே முகத்

தைப் புதைத்து மூடிக்கொண்டான். மீண்டும் அவன் திடீரென்று அம்புபோல் திரும்பிப் பாய்ந்து, பாட்டியின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்து விட்டு, மறுபடியும் தாயிடம் சென்றான்.

"வாம்மா, வா" என்று சியாமளாவை உள்ளே இழுத்துக் கொண்டு போனான்.

"எங்கேம்மா என்பொம்மையெல்லாம்?" என்று குழந்தை கேட்டான். விளையாட்டுப் பொம்மைகளை, சியாமளா அவனிடம் கொடுத்தாள்.

இரண்டு சக்கரங்கள் ஒடிந்து போனதால், ஒரு பக்கமாய்ச் சாய்ந்து கிடந்தது ஒரு தகர மோட்டார்; 'கீச்' என்று கத்தும் ஓர் எலிக்குஞ்சு, அதன் பித்தானைக் குழந்தை கடித்து விட்டதால், வயிறு பிளந்து கிடந்தது; கிழிந்துபோன ஒரு ரப்பர்ப் பந்தின் இரண்டு பாதிகள், ரப்பர்க் கிண்ணங்களைப் போல் கவிழ்ந்து கிடந்தன.

"விளையாடு" என்றாள் தாய்.

குழந்தை விளையாடினான்.

அவன் விளையாட்டை, சியாமளா உற்றுப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். அந்தப் பார்வையிலே, அன்பு கனிந்திருந்தது; ஆனால், துயரத்தின் சாயை படர்ந்த அன்பு. குழந்தையின் முகவடிவை அவள் கூர்ந்து நோக்கியபோது, அவள் உள்ளம் திடுக்கிட்டது. அவள் மனம், மெல்ல மெல்ல எங்கோ பின்னோக்கிப் பறந்தது. அவள் அசைவற்ற சித்திரம் போல் ஆனாள்; அதுவும் கனவில் கண்ட சித்திரம்போல் ஆகி விட்டாள்.

"சியாமளா! சியாமளா!" என்று ஒரு குரல் கேட்டது; பெருமூச்சைப் போல் தெளிவாய், மிருதுவாய் இருந்தது அந்தக் குரல். அவளுடைய கணவன், அவள் பக்கத்திலே வந்து நின்முன்; ஆர்வம் நிறைந்த கண்களோடு அவளைப் பார்த்தான்.

மூன்று வருஷங்கள் கழிந்ததையே அவள் மறந்தாள். அவளுக்கு வயது பதினேழு. நள்ளிரவு நேரம். தங்கள் படுக்கை யறையில் அவர்கள் இருந்தார்கள். சியாமளா விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். அவன் அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தான்.

"ஏண்டி, இப்படி ராவும் பகலும் அழுது புலம்பிண்டிருக்கே? அதைக் கொஞ்சம் மறக்கமாட்டையா?" என்முன்.

"மறக்கவா? எப்படி மறப்பேன்? தொட்டில் வெறிச்சென்றிருக்கே! குழந்தையின் கத்தல் என் காதை விட்டு அகலவில்லையே!" என்று இரங்கிஞள்.

"அதைப் பத்தியே பக்கத்தாத்தி லெல்லாம் போய்ப் பேசறதும், ஓயாமெ புலம்பறதுமா யிருந்தா, மனசுக்குச் சமாதானம் வந்துடுமா?"

"தலேச்சன் கொழந்தையைச் சாகக் கொடுத்தால், ஒரு பெண்ணுக்கு, என்னமாய்ச் சமாதானம் வரும்? அது உங்களுக்குத் தெரியாது. இன்னொரு பொம்மனுட்டிக்குத் தான் தெரியும்."

"விசித்திரம் தான்! உன் துக்கத்திலே எனக்குப் பங்கில்லையா? அது உனக்கு மாத்திரம் தான் குழந்தையா? எனக்குந்தானே குழந்தை?"

"அது நிஜந்தான். ஆனா, உங்களுக்கு அது மறந்தே போயிடுத்தே! புருஷாள் எதையும் சுலபமாய் மறந்தூடறா. அவா மனசு ஈடுபட எத்தனையோ விஷயங்கள் இருக்கு. நீங்க சந்தோஷமாய்ப் போயிடறக."

"இப்படித் துடுக்காய்ப் பேசாதே, சியாமளா. உன்னைப் போலே தினம் ஒரு ஆவர்த்தி அழுதால் தான் துக்கமா? நான் அப்படி அழறதில்லை. அழுதுண்டே யிருக்கறதினால், ஒரு பிரயோஜனமுமில்லே. அது நியாயமு மில்லே. அர்த்த மில்லாமெ அழுது அழுது யௌவனம் முழுக்க நாசம் பண்ணி விடப் படாது. நமக்கு ஒண்ணும் அப்படி வயசாயிடலே. நம்ம ஆசைகளும் இன்பங்களும் கருகிப் போயிடலே. மனுஷாளுக்கு ஆசையைவிடப் பெரிய பொக்கிஷம் வேறே உண்டா? இன்னும் நாம் எத்தனையோ இன்பமாய் வாழலாம். இனிமேலும் நமக்குப் புத்திர பாக்கியம் ஏற்படலாம். பகவானுடைய அனுக்கிரகத்தினாலே, கூடிய சீக்கிரமே நமக்கு ஒரு குழந்தை பிறக்கும். குழியிலே கிடக்கிற குழந்தை, தாயின் மடியிலே வந்து நிற்குமாம்—இப்படி ஒரு ஔவையார்க் கிழவி சொல்லி யிருக்காள்" என்று, மெல்லிய குரலில் சொல்லிய அவன், சியாமளாவைத் தன் பக்கத்திலே இழுத்து அணைத்துக் கொண்டான்; கண்ணீர் சொரிந்து வாடி வதங்கிய ரோஜாவைப் போல் இருந்த அவள், அவனது அணைப்பிலே புது அரும்புபோல் மாறி ஜொலித்தாள்.

அவளது சிடுசிடுப்பு மறைந்தது; வேதனையோடு துடிதுடித்துக் கொண்டிருந்த அவளுடைய நாடி நரம்புகள் அமைதியுற்றன. உள்ளத்திலே ஓர் இங்கித பரவசம் எழுந்து, அவள் தன்வச மிழந்தாள்.

அவனது ஸ்பரிசமென்ற அன்பு வெள்ளத்திலே, தன் ஆவியையும் உடலையு மெல்லாம் ஒப்புவித்து விட்டாள். அவனைக் கட்டியணைத்துக் கொண்டாள். தன் ஆனந்த நிறைவிலே, மணிப் புறுவின் புலம்பலைப் போல் முனகினாள் : " இனிமேல் ஒரு போதும் உங்க கிட்டக் கோபிச்சுக்க மாட்டேன். என்னவோ துக்கத்தினாலே அசட்டுத்தனமாய் நான் சொன்னதை யெல்லாம் மறந்தூடுங்கோ. எப்போதும் போலவே, என் கிட்டப் பிரீதியா யிருங்கோ. இருக்கேன்னு உங்க வாயாலே சொன்னால்தான் என் மனசு நிம்மதி யாகும்."

ஆனால், அவன் பேசவில்லை. பளீர் என்று மின்னித் துடிக்கும் ஒரு நட்சத்திரத்தைப்போல், அவனது ஆவி முழுதும் லயமுற்றிருந்தது. அவளது ஆவியும் தான் அப்படியே லயித்தது. வான நட்சத்திரங்களின் லயம் போன்ற அந்த இசையிலே, கேவலம் இந்த தேகம் மாய்ந்து போயிற்று ; இரண்டு ஆவிகளுமே ஓர் இன்பகீதமாய் மாறிவிட்டன. அவனது மனோரதம் தன்னிடத்தே பூர்த்தி பெற்று விட்டது என்று அவள் அறிந்து கொண்டாள். அதில் சந்தேகமே யில்லை. தெய்வம் அனுக்கிரகித்து விட்டது. அந்தப் பரவசத்திலே அவள் ஆனந்த பாஷ்பம் சொரிந்தாள். அவனோ, இன்னும் மௌனமே சாதித்தான். அவள் கையைத் தள்ளி, மெல்ல நகர்ந்தான்.

சியாமளா, உடம்பைக் குலுக்கிக் கொண்டு நிமிர்ந்தாள். அந்தப் பழைய காட்சிகளின் ஞாபகங்களை அவளால் தாங்கமுடியவில்லை. சிறுவனோ, அவள் புடவை நுனியைப் பிடித்து இழுத்துக்கொண்டு, " அம்மா, இதே பார் அம்மா " என்று கத்தினான்.

சலசல என்று ஒரு சப்தம் கேட்டது. அவள் காலடியிலே, பளபள என்று ஒளி செய்த பல கிளிஞ்சல்கள் சிதறிக் கிடந்தன. சிறுவன் இரண்டு கிளிஞ்சல்களை எடுத்து ஒன்ருேடொன்று தட்டிக் கொண்டிருந்தான்.

சியாமளா மௌனமாய் நின்ருள். அவள் கண்கள் வெறிச்சென்றிருந்தன; கண்ணீர் ததும்பி நிறைந்திருந்தது. பழைய கால இன்பக் கனவிலே அவள் திளைத்திருந்த சிறிது நேரத்தில், அவளுடைய சிறுவன், அந்த உடைந்த பொம்மைகளில் திருப்தியடையாமல், ஜன்னல் மீதிருந்த கிளிஞ்சல் பெட்டியை எடுத்து விளையாடத் தொடங்கினன். அவள் கண்கள் இன்னும் வெறிச்சென்று தான் இருந்தன; ஆயினும், அந்தக் கிளிஞ்சல்களை அவை கண்டு கொண்டன. அவள் தொண்டையிலே, துக்கம் அடைத்துக் கொண்டது—ஆழமறியாத கடல்போன்ற துக்கம்! ஏனெனில், அன்ெருரு நாள் சந்திரக்கிரகண புண்ய காலத்தில், அவள் கணவன் சமுத்திர ஸ்நானத்துக்குச் சென்ருன். அவனுடைய ஜன்ம நட்சத்திரத்தில் கிரகண பீடை ஏற்பட்டு விட்டதால், அதற்கு நிவர்த்தியாகப் பனையோலைப் பட்டம் கட்டிக் கொண்டு அவன் சமுத்திர ஸ்நானம் செய்ய வேண்டுமென்று, சாஸ்திரிகள் சொன்னர். அவனும் அப்படியே ஸ்நானம் செய்யச் சென்ருன். சென்றவன், மீளவே யில்லை; நீலத் திரை கடலின் ஆழத்திலே புதைந்து விட்டான்.

அந்தக் கிளிஞ்சல்கள், ஒரு நாள் மாலையில் இவளும் அவனும் கடற்கரையிலே சிரிப்பும் களிப்புமாய்ப் பொழுது போக்கிக் கொண்டிருந்த

போது, அவன் பொறுக்கி யெடுத்தவை. ரோஜா, நீலம், தந்தம் முதலிய பல்வேறு வர்ணங்களோடு மின்னும் கிளிஞ்சல்கள்; காற்றிலும் அலையிலும் அலைக்கழிந்து, சுழிந்தும் மடித்தும் வரிகள் விழுந்த கிளிஞ்சல்கள்; மணி ஆபரணங்கள் போல் மணலிலே அங்குமிங்கும் சிதறிக் கிடந்த கிளிஞ்சல்கள்! தந்தை இறந்த பின்னே பிறந்த குழந்தை, அவைகளை வைத்துக் கொண்டு விளையாடினான். தாயை அழைத்தான். அவள் காதில் அது படவேயில்லை.

சியாமளா அறைக்குள்ளே தான் நின்று கொண்டிருந்தாள். ஆயினும், எங்கேயோ ஒரு சூன்யத்தின் நடுவே நிற்பது போலவே அவளுக்குத் தோன்றியது. அவளுடைய இளந்தோள்கள், வேதனைச் சுமை தாங்காமல் நெளிந்திருந்தன. தாய் இப்படி ஒன்றிலும் ஒட்டாமல் ஒதுங்கி நிற்பது கண்டு, குழந்தைக்கு ஒரு வித பயமும் அவநம்பிக்கையும் உண்டாயின. அவனும் ஒதுங்கியே நின்றான். இரவின் இருள் சூழ்ந்தது. கந்தர்வ கணங்கள் கோலாகலமாய் வானவீதியெங்கும் வெள்ளிக் காசுகளை வாரி யிறைத்தது போல், நட்சத்திரங்கள் மின்னத் தொடங்கின. கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. அதன் பின்னே, காலடிச் சப்தமும், பேசும் குரல்களும் கேட்டன. சியாமளாவை அவளுடைய தம்பி அழைக்கும் குரல், அவள் காதில் விழுந்தது. தம்பியைத் தொடர்ந்து, அவள் தாயும் அவளை அழைத்தாள். சியாமளாவுக்கு அப்பொழுது தான், தன் நினைவு வந்தது.

# அரங்கேற்றம்

கூடத்தின் நடுவே இருக்கும் தட்டியின் இடுக்கால் எட்டிப் பாருங்கள்; அங்கே ஒரு குஞ்சுக் குடித்தனம் எவ்வளவு அழகாய் நடக்கிறது, கவனியுங்கள்!

சுமார் ஐந்து வயதுள்ள இரண்டு சிறுமிகள், ஏக மும்முரமாய் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைவிட ஒரு வயது இளையவனான ஒரு சிறுவன், தூணிலே சாய்ந்தபடி, அந்தப் பெண்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அந்தக் கோஷ்டியில் அவனே முக்கிய புருஷன். ஆண் பிள்ளைகளுக்கு இஷ்டமில்லா விட்டால், வேலையே செய்யாமல் சும்மா இருக்கலாம்; யாரும் ஏன் என்று கேட்க முடியாது. இந்தச் சுதந்தரத்தை, சிறுவன் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. அந்தச் சிறுமிகளின் காரியங்களில் தானும் கலந்து கொள்ள வேண்டுமென்று அவனுக்கு உண்டான பேராவல், அவன் கண்களில் ஜொலித்தது. இவனை அந்தப் பெண்கள்தான் இப்படி உட்கார்த்தி வைத்து விட்டார்கள். அவர்கள் கூப்பிடும்போதுதானே, அவர்களின் காரியங்களில் இவன் கலந்துகொள்ள முடியும்?

அந்தப் பெண்கள், கூடத்தின் ஒரு மூலையை, சமையல் அறையாக வைத்துக்கொண்டார்கள். அங்கே பலவித உருவங்களில் மரத்திலும் மாக் கல்லிலும் பித்தளையிலும் செய்த பாத்திரங்கள், மிக்க ஒழுங்காய் வைக்கப்பட்டிருந்தன. முறுக்குப் பிரிந்து சவுரி போல் சிதைந்திருந்த ஒரு துண்டுக் கயிற்றைத்

துடைப்பமாக அவர்கள் உபயோகித்தார்கள். அந்தக் கயிற்றிஞல், ஒரு சிறுமி, தரையைப் பெருக்கிக் கொண்டிருந்தாள்; மற்றெருத்தி, கையிலே குடம் வைத்திருப்பது போல் பாவனை பண்ணிக்கொண்டு, ஜலந் தெளித்தாள்.

சிறுவனுல் இதற்குமேல் சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. அவன் எழுந்திருந்து, " இப்ப நான் வெறகு கொண்டுவரட்டுமா?" என்ருன்.

கிரிஜா தலையை ஆட்டி, புன்சிரிப்புடன், " அதுக் குள்ளே இல்லே, ஜகு! இன்னும் நாங்க கோலம் போடலே; கறிகா நறுக்கலே; அரிசி களையலே. சமைக்கறத்துக்கு முன்னே இன்னும் எத்தனையோ காரியம் இருக்கே. நீ ஒக்காந்துக்கோ. வெறகு எப்ப கொண்டுவரதுன்னு நான் சொல்றேன்" என்ருள். இப்படிச் சொல்லி, அவனை உட்கார்த்திவைத்து, அன்பான தாயைப் போல், அவன் முதுகைத் தடவிக் கொடுத்தாள். ஜகு என்பது, ஜகதீசனுடைய செல்லப் பெயர்.

பிறகு, கிரிஜா, தன் கூட்டாளியான மறு சிறு மியை நோக்கி, " ஜானகீ! எங்கே, கூடையிலிருந்த கத்தரிக்காயையும் பறங்கிக் கீத்தையும் எடுத்துட் டையா?" என்று கேட்டாள்.

" எடுத்தாச்சு" என்ருள் ஜானகி. ஏதோ காணுத அதிசயத்தைக் கண்டவள்போல, ஜானகியின் கண்கள் எப்போதும் அகன்று விரிந்திருக்கும். முகத்தில் ஒரே புன்சிரிப்பு; குழி விழுந்த கன்னங்கள். சின்னஞ் சிறு புருவைப் போல் தோற்றம். பாதங்கள் இரண்டும் இரு வெண்புருக்கள் போல் திகழ்ந்தன. குரலும்கூட, புரு கூவுவதுபோல் மிக மெல்லிய குரல். தும்பைப் பூ

மாதிரி வெண்மையான மேனி. மூக்கு நுனி சற்று நிமிர்ந்திருக்கும். "நீ புல்லாக்குப் போட்டுண்டால், உனக்கு அழகா யிருக்காது" என்று, தாயார் அவளிடம் சொல்லி விட்டாள். அது அவளுக்குக் கொஞ்சம் குறையாகத் தான் இருந்தது. ஆனால், அதற்கு யார் மேல் கோபப்படுவது என்று மாத்திரம் அவளுக்குத் தெரியவில்லை. நிமிராத மூக்கிலேதான் புல்லாக்குத் தொங்க முடியும் என்றால், தன் மூக்கும் நிமிர்ந்திருப்பதை விட்டு ஒரு நாள் ஒழுங்கு படாதா என்று, ஜானகி மனத்துக்குள்ளே ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

கிரிஜாவோ முற்றிலும் வேறு விதமானவள். கடைந்தெடுத்தது போன்ற அங்கங்கள். நேர்த்தியான தேகக்கட்டு. பருவ காலத்தில் அவள் அழகைக் கண்டு எவரும் பிரமிக்கப் போவது நிச்சயம். அவளுடைய குரலினிமை, வெள்ளி மணியோசையையும் வெட்கப்படச் செய்யும்; ஆனால், அவளை யாராவது எதிர்த்துப் பேசினாலோ, அல்லது அதட்டினாலோ, கீச்சுக் குரலாய் அது மாறிவிடும். அழுதாலும் சரிதான், சிரித்தாலும் சரிதான்; இரண்டிலும் ஒரே விதமான ஆவேசத்தை அவளிடம் காணலாம்.

மிக இனிமையான சிரிப்போடு, "சரி; இப்ப நீங்க ரெண்டு பேரும் அப்படி நகந்திருங்கோ, நான் குளிக்கற வரைக்கும். எனக்கப்பறம் நீ குளிக்கலாம், ஜானகி" என்று மற்ற இருவரையும் பார்த்து, கிரிஜா சொன்னாள்.

அவ்விதமே ஜகுவும் ஜானகியும் மறைந்தார்கள். கிரிஜா சுற்றிலும் பார்த்து விட்டு, பக்கத்தில் யாரும்

இல்லையென்று நிச்சயம் செய்து கொண்டாள். சுவர் அருகே சென்ருள். அங்கே ஏதோ ஒரு குழாய் இருப்பதுபோல் பாவனை செய்து கொண்டு, அதைத் திறப்பவள் மாதிரி அபிநயம் செய்தாள். பின்பு உடுப்பைக் களைந்தாள். சொக்காயை மடித்து, நாசூக்காய் ஒரு பக்கத்தில் வைத்தாள். பிறந்த மேனிக்கு நிற்கும் அல்லிக் கொடி போல், ஒய்யாரமாய் நின்று கொண்டாள். திடீரென்று உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு, பின்னல் திரும்பிப் பார்த்தாள். எதிர்ப்பக்கம் இருந்த ஓர் அறையி லிருந்து, ஏதோ நாலு கண்கள் தன்னைக் கூர்ந்து நோக்குவதைக் கண்டாள். உடனே, சட்டென்று உடம்பை நெளித்துக் கீழே படுத்துக் கொண்டு, வெட்கமும் வருத்தமும் அடைந்தவளாய், "நீங்க இப்படிப் பண்றது, ரொம்பப் போக்கிரித் தனம். நீங்க பாக்கப்படாதுன்னு சொன்னேன் இல்லியோ?" என்று கோபித்துக் கொண்டாள். ஜகுவும் ஜானகியும் பதில் சொல்லவில்லை. அதற்குப் பதிலாய், கொல் என்று சிரித்தார்கள். கிரிஜாவுக்கு இன்னும் அதிக ஆத்திரம் வந்தது. அவள் முன்னிலும் கடுமையாய்க் கண்டிக்க எண்ணித் திரும்புமுன், அந்த அறையின் இருளுக்குள் இருவரும் புகுந்து மறைந்து விட்டார்கள்.

பிறகு, கிரிஜா வெகு விஸ்தாரமாக, தன் நீராட்டத்தை நடத்தினாள். மெல்லிய குரலில் சிட்டி யடித்துக் கொண்டே, தன் கற்பனையில் உதித்த அற்புத சோப்பை மேனி யெல்லாம் பூசிக் கொண்டாள்; தன் மனோராஜ்ய மஞ்சள் பொடியை, தளிர் போன்ற தன் கன்னங்களில் தடவிக் கொண்டாள்.

"சனியன் பிடித்த குழாய், என்ன இப்படித் துளித்துளியாய்ச் சொட்டறதே!" என்று கொஞ்சம் சலித்துக் கொண்டாள். பிறகு, உடம்பைத் துவட்டிக் கொண்டாள். சொக்காயைப் பிரித்து அணிந்து கொண்டாள். ஏற்கெனவே வாரிப் பின்னியிருந்த கூந்தலை, தானும் ஒருமுறை வாரிக்கொள்வதுபோல் அபிநயம் செய்தாள். பின்பு, "இனிமேல் நீங்கள் வரலாம்" என்று மற்ற இருவரையும் கூப்பிட்டாள்.

அதன்மேல் அவ்விருவரும் வந்தார்கள். அடுத்தாற் போல் ஜானகியும் இதே மாதிரி குளித்தாயிற்று.

இரண்டு சிறுமிகளும் சேர்ந்து, ஜகதீசனுக்கு ஜுரம் அடிப்பதாக, முடிவு செய்து விட்டார்கள். ஆகையால், அவன் குளிக்காமல் ஈரத்துணியால் உடம்பைத் துடைத்துக் கொண்டால் போதுமென்றும், ஜுரம் குணப்பட்ட பிறகு குளிக்கலாமென்றும் தீர்மானித்தார்கள்.

அதன்பின், சமையல் வேலை வெகு ஜரூராய் நடக்கத் தொடங்கியது. ஐந்து நிமிஷ நேரம் நடந்தது. பற்பலவிதமான கூட்டு, கறிகளெல்லாம் தயாராயின. தயிர், பருப்பு நெய், கறி வகைகள், பரமான்னங்கள் ஆகிய எல்லாம், அடுப்பு மேடையிலும் அதைச் சுற்றியும் ஒழுங்காய் வைக்கப்பட்டன. ஒரு பெண், சாதப் பானையை உற்றுப் பார்த்து, அதிலிருந்து சுழன்றுவரும் ஆவியைத் தாங்க முடியாதது போல, கண்ணை மூடிக் கொண்டாள்.

"சரி; இப்ப வெள்ளித் தட்டை எடுத்து வெச்சு, எங்காத்துக்காரருக்குச் சாதம் போடறேன்" என்று, ஜகதீசனைப் பார்த்துக் கொண்டே, ஜானகி சொன்னாள்.

"என்னடீ! யார் ஆத்துக்காரர்னு சொன்னே?" என்று கறுவினுள் கிரிஜா.

"என் ஆத்துக்காரர்தான்" என்று, உதட்டை மடித்துக் கொண்டே, அழுத்தம் திருத்தமாகப் பதில் அளித்தாள் ஜானகி.

"ஒன் ஆத்துக்காரரா?" என்று மூச்சுத் திணறச் சொல்லிய கிரிஜா, "இல்லவே யில்லை. அவன் என் ஆத்துக்காரர்தான். எங்கம்மா சொல்லி யிருக்கா" என்ருள். இப்படிச் சொல்லிய அவள், ஜகுவின் கையைப் பிடித்து, அவன் கன்னத்திலே முத்தமிட்டுக் கொண்டாள். உடனே ஜானகி ஓடி வந்தாள். வெள்ளித் தட்டைக் கீழே போட்டாள்; ஜகதீசனைப் பிடித்து, தன் பக்கத்திலே இழுத்துக் கொண்டாள். தன் 'எதிரி' யான ஜானகியின் கைகளை, கிரிஜா வெடுக்கென்று கிள்ளினுள். ஜானகியும் பதிலுக்குக் கிள்ளினுள். இந்தத் தகராறில், பையன், மெல்ல நழுவி விட்டான். தடுப்பார் எவருமில்லாமல், அந்தச் சிறுமிகள், கடூரமாகச் சண்டை போட ஆரம்பித்தார்கள். குருவிகள் ஒன்றை ஒன்று கொத்துவது போல், ஒருவரை யொருவர் கடித்துக் கொண்டார்கள்; மயிரைப் பிடித்திழுத்தார்கள்; பூனைகளைப் போல் பிருண்டிக் கொண்டு உறுமினுர்கள். ஜானகிக்குத் தான் அதிகக் காயம். இருவரிலும் அவளே பஞ்சையானவள். அவள், தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டாள். இதைப் பார்த்த ஜகு, ஜானகியிடம் ஓடி வந்து, அவள் கழுத்தைத் தன் கைகளால் கட்டிக் கொண்டு, கிரிஜாவைப் பார்த்து, "நீ ரொம்பப் பொல்லாதவள். ஒன்னை எனக்குப் புடிக்கல்லேடீ" என்ருன்.

கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த ஜானகியின் முகத்திலே கொஞ்சம் புன்சிரிப்பு வந்தது.

கிரிஜா ஒரு பேய் போலானாள். அவள் மார்பு விம்மியது; உதடுகள் சுளித்தன. ஆனால், அவள் அழவில்லை. தன் கண்ணெதிரே, ஒருவரை யொருவர் நெருங்கி, தோளோடு தோளும் கன்னத்தோடு கன்னமும் பொருந்த ஒட்டிக்கொண்டு நிற்கும் ஜகுவையும், ஜானகியையும் அவள் கண்கொட்டாமல் உறுத்துப் பார்த்தாள். அந்தக் கண்களிலே, பொறாமைத் தீ ஜொலித்தது. திடீரென்று அவள், அவர்களைவிட்டுத் திரும்பி, சமையலறைக்கு ஓடி, பாத்திரம் பண்டங்களை யெல்லாம் உதைத்துத் தள்ளினாள். பித்தளைச் செப்புகள், கலகல என்று சப்தமிட்டுக் கொண்டு, நாலா திசையிலும் சிதறின; மாக்கல் பண்டங்கள், செங்கல் தரையிலே வெள்ளைக் கோடுகளைக் கீறிக்கொண்டே ஓடின.

அவளுடைய விரோதிகள், திகைத்துப் போனார்கள்; அவர்களால் சிரிக்கக்கூட முடியவில்லை. அவர்கள் மெல்ல மெல்ல நடந்து, 'கிசு கிசு' என்று ஏதோ பேசிக் கொண்டு, கடைக்கண்ணால் ஒருமுறை பின்னே பார்த்து விட்டு, வெளியே சென்றார்கள்.

கிரிஜா, அந்த விளையாட்டுச் செப்புகளுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டாள்; பரம துக்கத்திலே ஆழ்ந்தவளாய், தன் கண்களைப் பொத்திக் கொண்டாள். சொர்ண மாளிகை ஒன்றை அவர்கள் கட்டினார்கள்; அது திடீரென்று மங்கி, மண்ணோடு மண்ணாகி விட்டது. நீர் ததும்பும் கிரிஜாவின் கண்களுக்கு, உலகமே பனி சூழ்ந்த அந்தி மயக்கத்தில் உருக்குலைந்

தது போல் தோன்றியது; தாயின் கர்ப்பத்திலே உள்ள சிசுவைப் போல், அந்தகாரத்திலே, அவள் மூழ்கி விட்டாள். வாழ்க்கையே, அவளுக்கு அர்த்த மற்ற ஏதோ ஒரு சந்தை யிரைச்சல் போலாயிற்று.

# பொம்மை மரணம்

ஆஸ்பத்திரியிலுள்ள குழந்தைகள் வார்டில், இருபது படுக்கைகள் இருந்தன. இருபது சின்னஞ் சிறு இரும்புக் கட்டில்கள். குழந்தைகள் விழாதபடி இரு புறமும் கம்பியணைப்புகள், தலைமாட்டிலிருந்து பாதி தூரம் வரையில் அந்தக் கட்டில்களில் அமைந் திருந்தன. பத்து வயதுக்குக் குறைந்த ஆண் குழந்தை களும் சரி, பெண் குழந்தைகளும் சரி இந்த வார்டில் வைக்கப்படுவார்கள்.

என் பையனுக்கு வயது, கணக்காய் ஆறு வருஷம் ஏழு மாதம். அவனுடைய ஜாதகத்தில் கிரகங்கள் என்னவோ விபரீதமாய் வக்கரித்துக் கொண்டன. (அற்ப மானிடனை நான், தெய்விக சாஸ்திரமான ஜோதிஷத்தை எதிர்த்து, 'அதெல்லாம் அந்தப் பயலின் குறும்புத்தனமான விளையாட்டால் தான் விளைந்த வினை' என்று எப்படிச் சொல்ல முடியும்?) என் பையனின் வலது புஜத்தில், சரியாய் முழங்கைக்கு நேராய், எலும்பு முறிந்துவிட்டது. அவனைப் பரிசீலனை செய்த சர்ஜன், எலும்பு சத்திர சிகிச்சையில் நிபுணர் என்று கீர்த்தி பெற்றவர். பைய னின் விபத்து எப்படிப்பட்டது என்ற ஆராய்ச்சி, அவருடைய அறைக்குள்ளே தான் நடந்தது. 'கார ணயிட் ப்ரோஸஸ்,' 'ஆஸ்ஸிபிகேஷன்,' 'கால்ஸிபி கேஷன்,' 'ஆஸ்டியோடாமி' என்று என்னென் னவோ தடபுடலான வைத்திய சாஸ்திர வார்த்தை

களையெல்லாம் அவரும், அவருடைய உதவி டாக்டரும் ஏதோ பாட்மின்டன் பந்தடிப்பது மாதிரி, ஒருவருக் கொருவர் பரிமாறிக் கொண்டதைக் கேட்டேன். இந்தச் சர்ச்சைகள் நடந்து கொண்டிருக்கும்போது, அவர்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறியும் ஆவல் ஒரு புறம்; அவர்கள் சொல்லு வது இன்னதென்றே புரியாத ஆச்சர்யம் மறுபுறம்—இந்த இரண்டு உணர்ச்சிகளும் சுந்தரத்தின் முகத்தில் மாறிமாறிப் பிரதிபலித்துக்கொண் டிருந்தன. கடைசி யில், டாக்டர், சிறுவனின் கன்னத்தைத் தடவிக் கொடுத்து, "நீ ஆஸ்பத்திரியிலேயே கொஞ்ச நாள் இருக்கவேணும். இருந்தால், உன் கை, சரியாய்ப் போய்விடும்" என்று, பரிவோடு சொன்னார். அப் போதுதான், அவனுக்குத் தன்னுடைய நிர்க்கதியான நிலைமை புலப்பட்டது. அதுவரையில் டாக்டரின் செயல்களையே ஆச்சரியத்தோடு கவனித்துக் கொண் டிருந்ததால், அவனுக்கு மறந்திருந்த வலியும், இப் போது திடீரென்று வரவர அதிகரிக்கத் தொடங்கி விட்டது. அச்சமயம் குழந்தைகளின் வார்டில், ஒரு படுக்கைகூடக் காலியில்லை. ஏறக்குறையக் குணமாகி யிருந்த யாரோ ஒரு குழந்தையை வீட்டுக்கு அனுப்பி விட்டு, அதன்மேல் தான் சுந்தரத்தை ஆஸ்பத்திரியில் சேர்த்துக்கொண்டார்கள். துளி அழுக்குமில்லாமல் வெள்ளை வெளேர் என்று சலவை செய்யப்பட்ட ஒரு புதிய தலையணை உறையையும், படுக்கை விரிப்பையும் நர்ஸ் கொண்டுவந்து, ஏழாம் நம்பர் படுக்கையைத் தயாரித்தாள். பின்பு, சிறுவனைப் பார்த்து, தாய் போல் புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டு, அவனைப் படுக்கையில் கொண்டுபோய் விட்டாள்.

பெரும்பாலான குழந்தைகள், ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைகள் தான். அவர்களெல்லாரும் ஆஸ்பத்திரி உடுப்பையே அணிந்தார்கள். சுந்தரம் மட்டில் தன் சொந்த உடுப்பை அணிந்து கொள்ளலா மென்று, அனுமதித்தார்கள். இதைக் கண்ட மற்றக் குழந்தைகள் அனைவரும், தங்களையெல்லாம் விட உயர்ந்தவனாக இவனை மதித்தார்கள். முதலில் சில நாட்கள் வரையில், சுந்தரத்துக்கு, அவர்களுடன் சேரக் கூச்சமாயிருந்தது. ஆனால், வெகு சீக்கிரத்திலேயே, அவனுக்கு அவர்களிடம் சகஜபாவம் ஏற்பட்டுவிட்டது; அவர்களோடு தாராளமாய்க் கலந்து கொள்ளவும் தொடங்கி விட்டான். மனிதர்களை ஒருவரோ டொருவர் சேரமுடியாமல் பிரித்து வைக்கும் பிரம்மாண்டமான தடைச் சுவர்களையெல்லாம் தகர்த் தெறியும் வலிமை, குழந்தைகளின் சின்னஞ் சிறு கைகளுக்கு இருக்கிறது. ஏனெனில், அவர்களுடைய இயற்கையான அன்பு, தெய்விகமானது.

வார்டில் நோயால் வருந்திக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்குச் சந்தோஷ மூட்டுவதற்காக, சில சௌகரியங்கள் செய்திருந்தார்கள். விளையாடப் பொம்மைகளும், சவாரி செய்ய மூன்று சக்கர சைக்கிள்களும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். மிகவும் கடுமையான ஸ்திதியில் உள்ள குழந்தைகள் மட்டில் தான், படுக்கையோடு அடைத்துக் கிடந்தார்கள். மற்றக் குழந்தைகள் அனைவரும், குதூகலமாய் விளையாடிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளின் விளையாட்டே ஓர் அலாதி அழகு அல்லவா? வார்டு, ஒரு சமயம், மிருகக் காட்சிச்சாலைக் கூண்டுகளையெல்லாம் திறந்து விட்ட மாதிரி, ஓரே அமக்களமா யிருக்

கும்; பள்ளிக்கூட வாத்திச்சியைப்போல், நர்ஸ் வந்து, குழந்தைகளைக் கனகடுமையாய் அதட்டுவாள். மற்ஹொரு சமயம், மௌனப் பொம்மைகள் அடங்கிய, ஒரு கண்காட்சிச் சாலையைப் போல், வார்டு மாறி விடும்; ஆஸ்பத்திரி சர்ஜன் பார்வையிடுவதற்காக வருகிறார் என்றவுடனே, சிறுவர்களெல்லாரும் படுக்கையிலே படுத்துப் போர்வையை இழுத்து மூடிக் கொண்டு கிடப்பார்கள்.

ஆப்பரேஷன் நடந்து, இரண்டு மூன்று வாரங்கள் ஆகிவிட்டன. சர்ஜனின் கத்தியை, சுந்தரம் தீரமாகவே பொறுத்துக் கொண்டான். படுக்கையிலே நிமிர்ந்தபடி படுத்திருந்தான். மாவுபோட்டுக் கட்டுக் கட்டியிருந்த அவன் கை, அவனது மார்பிலே பதிந்து கிடந்தது. அவன் உடம்பு வெளிறிட் டிருந்தது. இயற்கையிலே விசாலமான அவனுடைய கண்கள், ரத்தச் சேதத்தினால் உண்டான சோர்வினாலும், குளோரபார மயக்கத்தினாலும் மேலும் விசாலமாய்த் தென்பட்டன. மயக்க மருந்தின் வாசனை இன்னும் அவன் நாக்கைச் சுற்றிக்கொண்டே யிருந்ததாம். "இது ஏன்?" என்று அவன் என்னை விசாரித்தான். குழந்தைக்கு வீட்டு ஞாபகம் வந்துவிட்டது. "ஆஸ் பத்திரிலே யிருந்து, எப்ப என்னெ அழச்சுண்டு போவே?" என்று என்னைக் கேட்கத் தொடங்கி விட்டான்.

"இன்னும் ஒரு வாரத்திலெ போகலாம். டாக்டரைக் கேட்கறேன்" என்று சொல்லி, அவனைச் சமாதானம் செய்தேன்.

அந்த வாரமும் கழிந்தது. அவன் கைக்கு மீண்டும் புதிதாய் மாவு வைத்துக் கட்டுக் கட்டினார்

கள். ஒவ்வொரு நாள் மாலையிலும் நான் அவனை விட்டுப் புறப்படும்போது, அதே கேள்வியைத் திரும்பத் திரும்ப, அவனும் கேட்டுக்கொண்டேயிருந்தான். நானும் அதே பதிலையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

"என்னடா கண்ணு, பினத்திண்டே யிருக்கே? உன் அந்தக் கை மாதிரி இந்தக் கையும் ஜோராய் ஆக வேண்டாமா, அப்பா?" என்றேன்.

அவன் புன்சிரிப்புடன், "ஆமாம். ஆனா, அதுக்கு ரொம்ப ரொம்ப நாள் ஆகுமோ?" என்று கேட்டான்.

"இல்லே; ரொம்ப நாள் ஆகாது."

நான் சொன்னது பொய் என்று எனக்கே தெரியும். என்றாலும், எலும்பு சத்திர சிகிச்சையின் நுட்பங்களெல்லாம் தெரிந்தவனைப் போலவே, நான் பாசாங்கு செய்தேன். என்னுடைய அந்தப் பாசாங்கு, பாலகனின் நிஷ்களங்கமான மனத்துக்கு நிம்மதியூட்டும் அருமருந்தாக உதவியது; இதனால் அவன் இன்னுமோர் இருபத்தி நாலு மணிநேரம் அமைதியாய்த் தூங்குவான் அல்லவா?

ஒரு நாள் பிற்பகலில், நான் வழக்கம்போல் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தபோது, அங்கே, என்றுமில்லாத தொரு மௌனம் சூழ்ந்திருக்கக் கண்டேன். குழந்தைகளின் விளையாட்டையோ, ஆரவாரத்தையோ காணோம். அவர்கள் அனைவரும், தங்கள் தங்கள் கட்டிலிலே சேர்த்துக் கட்டிவைத்தாற்போல், அசையாது படுத்திருந்தார்கள். ஏதோ ஒரு விசேஷ சம்பவம் நடந்திருப்பதாக, அந்த மௌனம் சுட்டிக்

காட்டியது. எனக்குமே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. வார்டு முழுவதையும் சுற்றி, ஒரு கண்ணோட்டம் விட்டேன். அதோ அந்தக் கோடியிலே ஒரு மூலையில், தலைமை நர்ஸும், ஆஸ்பத்திரி ஸர்ஜனும், ஓர் ஆண் நர்ஸும், மற்றொரு பெண் நர்ஸும் ஒரு படுக்கையைச் சூழ்ந்து நிற்கக் கண்டேன். ஸர்ஜன் குனிந்து, ஓர் உருவத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். கூடைபோல் கவிந்து, பனிபோல் மெல்லியதாய், செக்கச் செவேல் என்றிருந்த ஒரு வலைக்குக் கீழே, அந்த உருவம் கிடந்தது. வலையின் உட்புறத்தில், ஒரு சின்னஞ்சிறு எலக்ட்ரிக் பல்பு, பளிச்சென்று அந்த உருவத்தின்மீது ஒளி வீசிக் கொண்டிருந்தது. இந்தக் காட்சி எனக்குப் புதியதும், புரியாத விந்தையுமாயிருந்தது. என் பையனைக் கேட்டால் ஏதாவது புலப்படுமா என்று கருதி, அவனை விசாரித்தேன்.

"அதுவா? அது புதுக் கேஸ், அப்பா" என்று சுருக்கமாகப் பதில் சொன்னான் சிறுவன்.

"அதை எப்பக் கொண்டுவந்தா?"

"நர்ஸ் எனக்குப் பாலும் பிஸ்கோத்தும் கொடுப்பா பாரு; அப்ப கொண்டு வந்தா."

என் கடிகாரத்தைப் பார்த்தேன். பாலும் பிஸ்கோத்தும், மத்தியானம் பன்னிரண்டு மணிக்குக் கொடுப்பார்கள். இப்போது மணி மூன்றரை. புதிய கேஸ், மிக்க அபாயமானதாய்த்தான் இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டேன். பையனின் முகத்தை உற்று நோக்கினேன். முகம் கொஞ்சம் வாடியிருந்தது; கண்கள், காய்ச்சல் வரப்போகிறவனைப் போல் ஜொலித்தன. அவனது இடது கையை,

என் கையால் பிடித்து, அவன் தலையைத் தடவிக் கொடுத்தேன்.

" உனக்குப் பயமாயிருக்கா ? " என்று பரிவோடு கேட்டேன்.

" இல்லே."

" நான் டாக்டரைப் பார்த்தேன்."

" என்ன சொன்னர் ? "என்று அவன் ஆவலோடு கேட்டான்.

"வர திங்கட்கிழமை, நீ என்னோடே வீட்டுக்கு வந்துடலாம்."

அவன் சந்தோஷமாய்ப் புன்முறுவல் செய்தான். நல்ல வேளை ! இனி என் பையனிடம் நான் பொய் சொல்லத் தேவையில்லை.

அடுத்த நிமிஷம், திடீரென்று, என்னை யறியாமலே, அதோ அந்த யாரோ ஊர் பேர் தெரியாத குழந்தைக்காக, பகவானை நான் பிரார்த்திக்கத் தொடங்கிவிட்டேன். உலகத்திலே எத்தனையோ சோக சம்பவங்கள் நிகழ்கின்றன. ஆனல், அத்தனையிலும் மகா சோகமானது ஒரு குழந்தையின் மரணம் தான் என்று எனக்குத் தோன்றுகிறது. சாவு என்ருலே, எனக்கு வெறுப்பு. நரகத்திலே வேண்டுமானுலும் கிடந்துழன்று துளித்துளியாக உடல் கரைந்து மறைந்தாலும், நான் சகித்துக்கொள்ளுவேன் ; சாவை மாத்திரம் என்னல் சகிக்க முடியாது. இதை வெளிப் படையாக ஒப்புக்கொள்ள, நான் வெட்கப்படவில்லை.

ஆகையால், யாரோ தெரியாத அந்த அந்நியக் குழந்தையின் உயிருக்காக, நான் பிரார்த்தித்தேன்.

பகவானே! மன மிரங்கு! ஐயோ! அந்தக் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை கொடு! கள்ளியும் முள்ளும் நிறைந்த காடு போன்ற இவ்வுலகத்தில், குழந்தைகள் தானே கண் குளிரும் வர்ணப் பூஞ்செடிகள்போல் விளங்குகிருர்கள்? மனிதர்களின் குரோத சமுத்திரத்திலே, இனிமை ஊட்டப் பிறந்த அமிர்தத் துளிகளும் அவர்களேயல்லவா? பகவானே! மனமிரங்கு! ஐயோ! அந்தக் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை கொடு! உன் சர்வவல்லமையைப் பயன் படுத்து. இப்படிப் பட்ட ஒவ்வொரு சாவும் அந்த வல்லமைக்கன்ரே இழுக்கு? உன்னிடம் மனிதனுக்குள்ள பக்தியையே அன்ரே நலியச் செய்கிறது?

நான் இப்படி உருக்கமாய்ப் பிரார்த்திக்கையில், என்னையறியாமலே, வாய்விட்டுப் புலம்பிவிட்டேன் போல் இருக்கிறது. சுந்தரம் என்னைக் கூர்ந்து இமை கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்தான். உள்ள வேதனைக்கு ஆறுதலாகவே உணர்ச்சிகள் பொங்குகின்றன; அவைகளை அடக்கிப் பயனில்லை. ஆகையால், மௌனமாகவே என் உள்ளத்தில் குமுறிய உணர்ச்சித் திரளை, அந்தக் கட்டிடமே, ஒலி பெருக்கி போல் பேரொலி செய்திருந்தாலுங்கூட, நான் வெட்கப்படமாட்டேன். என் சிறுவன்மீது குனிந்து, அவன் கன்னத்தைச் சரேலென்று என் உதடுகளால் முத்தமிட்டுக்கொண்டேன். அவன் கண்கள், என்னை நூற்றுக் கணக்கான கேள்விகள் கேட்க விரும்பியது போல் ஒளி செய்தன.

"கண்ணு, தூங்கம்மா. குருட்டு யோசனையெல்லாம் பண்ணிண் டிருக்காதே" என்று அன்பு கனியச் சொன்னேன்.

"என்னிக்கி, அப்பா, திங்கக் கிழமை?" என்று அவன் ஆவலாய் வினவினான்.

"இன்னிக்கித்தான்."

"இல்லே; இது இல்லே" என்று சொல்லி, மெதுவாக விரலை மடக்கி, வாரத்தின் நாட்களை அவன் எண்ணத் தொடங்கினான்: "நான் ஆத்துக்கு வர இன்னும் ஆறு நாள் இருக்கு" என்று, சந்தோஷத்தோடு கூறினான்.

"ஆமாம். இப்ப தூங்கு" என்று மீண்டும் சொன்னேன்; என் கண்கள், வார்டின் அதோ அந்த மூலையை நோக்கி மறுபடியும் திரும்பின.

அங்கே அந்தச் செந்நிற வலைக்குக் கீழே கிடந்த தேகத்தைப் பார்த்துக் குனிந்த வண்ணம்தான், ஆஸ்பத்திரி சர்ஜன் இன்னமும் நின்று கொண்டிருந்தார். நர்ஸ் என்னைத் திரும்பிப் பார்த்தால் இது பற்றி அவளைக் கேட்கலாம் என்று, சுமார் பத்து நிமிஷம் வரையில் காத்து நின்றேன். ஆனால், அவள் குனிந்தபடியே இருந்தாள். என்ன ஆச்சரியம்! இந்த வைத்தியத் தொழிலில் இருப்பவர்களே இப்படித்தான். பாக்கி சமயத்திலெல்லாம் நம்முடன் ரொம்ப சரளமாய்ப் பழகுகிறார்கள்; தங்கள் வேலையில் ஈடுபட்டிருக்கும் போதோ, எவ்வளவு அந்நியமாயும் கல்லு மாதிரியும் ஆகிவிடுகிறார்கள்!

பையனுக்குக் கடைசியாய் ஒன்றிரு வார்த்தைகள் ஆறுதல் கூறிவிட்டு, வார்டை விட்டு வெளியே நடந்தேன். அன்றிரவு அவன் சரியாகத் தூங்கமாட்டான் என்ற கவலை, என் மனத்துக்குள்ளே உறுத்திக்

கொண்டிருந்தது. அவன் அவ்வளவு உணர்ச்சிக் களஞ்சியம்.

ஆனால், யார் என்று தெரியாத அந்த அந்நியக் குழந்தையைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று, கட்டுக்கடங்காத ஓர் ஆவல், எனக்கு உண்டாயிற்று. ஆஸ்பத்திரி வராந்தாவுக்கு வெளியே வந்ததும், சற்று நின்று, வாசல் காப்போனை விசாரித்தேன் :

"குழந்தைகள் வார்டில் கடுமையான கேஸ் ஒன்று வந்திருக்கிறுப் போல் இருக்கே. அதைப் பத்தி உனக்கு ஏதாவது தெரியுமா ?"

"பதினேழாம் நம்பர்ப் படுக்கையா, ஸார்? ஆமாம். ரொம்ப டேஞ்சர், ஸார்."

"என்ன வியாதி ?"

"வியாதி ஒண்ணு மில்லீங்க. ஒரு அபாயம் நேர்ந்திடிச்சு. ராயபுரம் மண்ணெண்ணெய் டாங்கி இருக்கு, பாருங்க ; அதிலே, நேத்து மாலே, ஒரு துவாரம் விளுந்து, எண்ணெய் ஒளுக ஆரம்பிச்சிடிச்சு. பக்கத்திலே ஒரு சேரி இருக்குது. அந்தச் சேரியின் ஏழைக் குளந்தைங்கள்ளாம், ஆளுக்கொரு சீசாவோ தகர டப்பாவோ எடுத்துக்கிட்டு வந்து, எண்ணெ பிடிச்சுதுங்க. இந்த ஏழைங்களுக்கு இந்தப் பஞ்ச காலத்திலே, ஒரு பொட்டு மண்ணெண்ணெ யாரு எனுமாக் கொடுப்பா ? அதுங்களுக்கு ஒரு பொட்டு எண்ணெ கெடச்சா அது பெரிய பொதையல் மாதிரி தானே, ஸார். அந்தக் குளந்தைங்கள்ளெ, பொட்டைக் குட்டிங்கள்தான் சாஸ்தி. இந்தமாதிரி கும்பலிலே, பொட்டைக் குட்டிங்க, போட்ற கூச்சலும்

மோதி யிடிச்சுக்கிறதும் சொல்லணுமா? திடீர்னு, இந்தக் குழந்தைங்கள்ளாம் சேந்தாப்பிலே பெருங் கூச்சல் போட்டதுங்க. எவனோ வேடிக்கை பாக்க வந்த புண்ணியவான், அசதி மறதியா, ஒரு தீக்குச்சி யெக் கிள்ளிச்சோ, ஒரு ஸிகரெட் துண்டையோ, எண்ணெ ஒளுக்கிலே போட்டிருக்கான். அது தீப் பத்திக்கிட்டு, எல்லாப் பசங்களையும் குட்டிங்களையும் பொசுக்கிப் போட்டிடுச்சு—நாகப் பாம்பு நாக்கெ நாக்கெ நீட்டிக்கினு தீண்டுமே அந்த மாதிரி தீண்டிப் பிடிச்சு. பத்துப் பன்னண்டு, குளந்தைங்களே, இன் னிக் காலையிலே ஆஸ்பத்திரிக்குக் கொணுந்து, மருந்து போட்டுக் கட்டி அனுப்பிச்சிட்டாங்க. ரொம்ப அபாயமான ஒரு குட்டியெ மாத்தரம் ஆஸ்பத்திரியி லேயே வெச்சிருக்காங்க. குளந்தை பேரைப் பதிஞ்சிக் கிறப்போ, உச்சி நேரம், ஒரு மணியிருக்கும். அந்தக் குட்டியின் தோல் பூராவும் வெள்ளரிப் பளம் மாதிரி உரிஞ்சு போச்சுதாம், ஸார். ஐயோ பாவம்!''

அடுத்த நாள், மத்தியானம் நான் ஆஸ்பத்திரிக் குப் போன போது, மறுபடியும் குழந்தைகள் வார்டு, மிக்க அமைதியாகவே இருந்தது. வியாதிகளின் வேதனையும் வறுமைத் துன்பமுமே ஒன்று திரண்டு உருப்பெற்று, இந்தப் பேய் அமைதியைப் படைத் தனவோ என்று தோன்றியது. நர்ஸ் தன் மேஜைக்கு முன்னே உட்கார்ந்து ஏதோ ஒரு ரெஜிஸ்டரைப் புரட்டிக்கொண் டிருந்தாள். நான் அவளைக் கடந்து செல்லுகையில் என் கண்கள் வெகு வேகமாக, வார் டின் கோடியை நோக்கிப் பாய்ந்தன. படுக்கையிலே கிடந்த உருவத்தைப் பார்த்தபோது, என் உள்ளத் தின் பரபரப்பு, சற்றுச் சமனம் அடைந்தது. அந்தப்

படுக்கைமீது, கூடை போன்ற அந்த வலை, இப்போது கவிந்திருக்கவில்லை. அந்தக் குழந்தைக்கு மூச்சு மூட்டும் முயற்சி வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்று, நான் எண்ணினேன். தன் துன்ப வேதனையைப் பொறுத்துக்கொள்ளும் சக்தியை, குழந்தைக்கு அவர்கள் தந்துவிட்டார்கள்!

என் பையனுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனித்துவிட்டு, மெல்ல மெல்ல அந்தப் படுக்கையின் அருகே சென்றேன். கட்டிலுக்கு மேலே, ஓர் ஆணியில், வியாதியின் விவரங்கள் அடங்கிய 'சார்ட்' தொங்கிக்கொண்டிருந்தது. அதை நான் படித்துப் பார்த்தேன். அதில் 'பொன்னி. வயது, எட்டு. வியாதி கடுமையான தீக்காயம்' என்று எழுதியிருந்தது. அதற்குக் கீழே, மிக நுணுக்கமான கையெழுத்தில் விபத்தின் விவரம் விரிவாக எழுதப்பட்டிருந்தது. நான் அதைப் படிக்க விரும்பவில்லை.

சிறுமியை நோக்கினேன். கழுத்துவரையில் ஒரு போர்வையால் மூடப்பட்டிருந்தாள். அவளுடைய சின்னஞ்சிறு முகம் கருமையாயிருந்தது. தலையிலே பறட்டை மயிர் அடர்ந்திருந்தது. கண்கள் உறக்கத்தால் மூடியிருந்தன. அவள் மார்பு, மெல்ல மெல்ல அலைபோல் மேலும் கீழும் அசைந்துகொண்டிருந்தது. எப்படியாயினும் சரி; 'அவளுடைய வேதனையை, உறக்கத்திலே, அவள் மறந்திருந்தாள். ஆனால், இந்த உறக்கத்தின் அமைதி எவ்வளவு நேரத்துக்கு நீடித்திருக்க முடியும்?

பின்பு, எனக்குத் தெரியாமலே, என் பார்வை, அவளருகே படுத்திருந்த ஒரு பொம்மையின்மீது சென்றது. பெரிய பொம்மை; ஒரு யூரேஷியப்

பெண் பொம்மை. அது அங்கியும் பாவாடையும் கட்டி, நன்ருய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வெல்வட் வர்ணமான பூட்ஸ் அதன் கால்களில் மாட்டியிருந் தது. பொம்மையின் கன்னங்கள் ரோஜா நிறத்துடன் பொலிந்தன ; உதடுகளும் அதே நிறந்தான். ஆகாய நீலக் கற்களேயே பதித்த கண்கள். தலை மயிர் சொர்ண நிறமாய்ச் சுருண்டிருந்தது. பொம்மையின் தலை மேல் ஒரு பெரிய ரிப்பன், அழகிய பட்டுப் பூச்சி போல் முடிச்சுப் போடப்பட்டிருந்தது. குழி விழுந்த மிருதுவான தன் பொம்மைக் கைகளில், அது ஒரு பூனைக் குட்டியைத் தாங்கி, மார்போடு அணைத்துக் கொண்டிருந்தது. வேதனையால் துன்புறும் குழந்தை தன் வலியை மறந்து சிறிது ஆறுதல் பெறுவதற்காக, பொம்மையை அதன் பக்கத்தில் கிடத்தியிருந்தார்கள். தனது தன்னல மற்ற சேவையினுல் பூரிப்படைந்தது போல், பணிவோடும், கம்பீரமாகவும், குழந்தையின் அருகே கிடந்தது அந்தப் பொம்மை. பகவானே! இந்தச் சிறுமியை நீ தான் காப்பாற்ற வேணும்! என் உள்ள முருகி, மீண்டும் மீண்டும் இவ்வாறு பிரார்த்தித்தேன்.

என் பையனை ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்க, இன்னும் இரண்டே நாட்கள்தான் இருந்தன. அந்த ஏழைப் பெண் பொன்னியும் குணமடைந்து வந் தாள். இந்த இரண்டு சந்தோஷத்திஞலும், எனக்கு என்னவோ அளவு மீறிய உற்சாகம் உண்டாயிற்று. ஒரு பவுண்டுப் பெப்பர்மிண்டு வாங்கி, வார்டிலிருந்த குழந்தைகளுக்கெல்லாம் வழங்கினேன். அடுத்த நாள் சாயங்காலம் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது,படுக்கை நம்பர் 17 காலியா யிருக்கக் கண்டு, ஆச்சரியமடைந்

தேன். சிறுமியைக் கட்டுக் கட்டுவதற்காக, மாடியி லுள்ள ஆப்பரேஷன் அறைக்கு ஒருவேளை, எடுத்துச் சென்றிருப்பார்களோ என்று எண்ணினேன். என் மனத்திலே ஓடிய யோசனையை, சுந்தரம் எப்படியோ ஊகித்து விட்டான். அமைதியும், தெளிவும், தன் வயதுக்கு மிஞ்சிய அலட்சிய பாவமும் கொண்ட குரலில், அவன் சொன்னான் :

"அவ இன்னிக்குக் காலமே செத்துப் போயிட்டா. அவ அம்மா வந்து 'கோ'ன்னு அழுதா. இங்கே ஒண்ணும் சந்தடி பண்ணாதேன்னு, அவளை நர்ஸ் தடுத்துப்புட்டா."

" இன்னிக்குக் காலமே செத்துப் போயிட்டாளா!" என்று திகைப்புடன் நான் கூவினேன். தீப்புண், ரணங்கண்டு அழுகிப் போய்விட்டதாக்கும்! மேலும், தொடர்ந்து, "ஆமாம்; செத்துப்போறதுன்னா, என் னடா கண்ணு? உனக்குத் தெரியுமா?" என்று என் பையனைக் கேட்டேன்.

சுந்தரம் சிறிது நேரம் மௌனமாயிருந்து விட்டு, பிறகு சொன்னான் : " ஓ! நன்னாத் தெரியுமே. பாட்டி செத்துப்போனா. நீங்கள்ளாம் அழுதக இல்லியா? அதுக்கப்பறம் அவளெ எங்கெயோ எடுத்துண்டு போனக..."

என் தாயாரின் மரணத்தைப் பற்றியே, அவன் பிரஸ்தாபித்தான். எனக்கு அதைத் தாங்கமுடிய வில்லை. நான் கேட்டேன் : "உனக்குப் பயமா யில்லையா?"

"இல்லே; ஆனா, அதோ அந்தப் பொம்மை எனக்குப் பிடிக்கவே யில்லே" என்று, மிக்க அழுத்த மான குரலில் சொன்னான்.

"எந்தப் பொம்மை?" என்று நான் கேட்டேன்.

"அதா? அது அன்னிக்கி நர்ஸ் குடுத்தா பாரு, செத்துப்போன பொண்ணுகிட்ட; அந்தப் பொம்மை தான்."

"அந்தப் பொம்மைக் கென்ன வந்தது?"

"ரெண்டு மூணு நாளைக்கு முன்னாலே ஒரு நா, நீ வரத்துக்கு முந்தி, அந்தப் பொம்மையெ, நர்ஸ் எனக்கு விளையாடக் குடுத்தா. வாண்டான்னுட்டேன். அவ விடமாட்டேன்னு அதெ என் பக்கத்திலே படுக் கப் போட்டு, என்னெக் கேலிபண்ணி, சிரிச்சா. நான் அதெ எட்டி விட்டெறிஞ்சுட்டேன்...எனக்குப் பொம்மனாட்டிப் பொம்மையே பிடிக்கல்லே." அவன் முகத்திலே, சிறிது அருவருப்புக் குறி, நிழல்போல் ஓடியது.

சுந்தரத்தை ஆஸ்பத்திரியி லிருந்து விடுவிக்கப் போகிற அன்று சாயங்காலம். வார்டு ரெஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுவிட்டு, அட்மிஷன் டிக் கட்டை, நர்ஸிட மிருந்து திரும்பி வாங்கிக்கொண்டு வருகிறேன். அப்போது, நர்ஸ் உட்கார்ந்திருந்த இடத்தில் சுவர் அருகே இருந்த கண்ணாடி பீரோவை, தற்செயலாக நோக்கினேன். மனமுருக்கும் துர்ப்பாக் கிய நிலைமையிலே நான் கண்டதும் நன்றாய் அறிந்தது மான அந்த யூரேஷியப் பொம்மைமீது, என் கண்கள் ஆழ்ப் பதிந்துவிட்டன. அதையே நான் கண்கொட் டாமல் பார்த்துக்கொண் டிருந்தபோது, என் உடம்

பிலே ஒரு நடுக்கம் ஏற்பட்டது. பொம்மையின் சொர்ண நிறச் சுருள் மயிரும், அதன் தலைமீது பட்டுப் பூச்சிபோல் அமர்ந்திருந்த ரிப்பன் முடிச்சும் விழுந்து விட்டன; எண்ணெய் காணாத பறட்டை மயிர், தலை முழுதும் சூழ்ந்தது. ரோஜா நிறக் கன்னங்கள், பொலிவிழந்து, கோரமாய்க் கறுத்துப் போயின. அங்கியும் பாவாடையும் வெல்வட் வர்ண பூட்ஸூம், மாயமாய் மறைந்தன. ஆகாய நீலநிறக் கற்கள் பதித்த கண்கள், வெறுங் குழிகளாய்ப் போயின. அதன் பொம்மைக் கைகளில் இருந்த பூனைக் குட்டி, எங்கோ குதித்தோடிப் போய்விட்டது. பொம்மை இதோ டீரோவிலே வெறுங் கட்டைபோல் அலங்கார மிழந்து அம்மணமாய்க் கிடந்தது; அதன் உடம்பெல் லாம் காயம்பட்டுக் கீற்று விழுந்து நிறம் குலைந்து பயங்கரமா யிருந்தது.

தன்னுணர்வற்று, என் கண்கள் தாமாக மூடிக் கொண்டன. என் பையனின் சின்னஞ்சிறு கையிலே என் கையைக் கெட்டியாய்க் கோத்துப் பிடித்துக் கொண்டு, ஆஸ்பத்திரியின் அந்தக் குழந்தைகள் வார்டை விட்டு, வெளியேறி வந்துவிட்டேன்.

# ஞாபகச் சின்னம்

ஐந்து நிமிஷம் வரையில், ஸிங்கர் தையல் மெஷி னின் ' க்ர்ர்ர் ' என்ற குறுகுறுப்பையன்றி, வேறு சந்தடி ஏதுமில்லை. நகருக்கு ஒதுப்புறமாய் அமைதி யான தொரு மூலையிலே, குடியிருப்பு வீடொன்றின் முன்புறத்தில் சின்னஞ் சிறியதோர் அறையில்தான் அந்தக் கடை இருந்தது. தையல்காரன் ஒரு வாலிப முஸ்லீம். வயது இருபதுக்கு ஒன்றிரண்டு கூட இருக்கும். நல்ல உயரம். சதைப்பற்று நிறைந்த உடம்பு. அவன் வேலை செய்த மெஷினைப் போலவே அவன் உடம்பும் கட்டு மஸ்தா யிருந்தது. பனித் துளி போன்ற மெல்லிய துணித் துண்டொன்றை ஊசிக் கடியே அவன் நீட்டுகையில், தளிரொத்த அவன் விரல் கள், சிலந்தியின் கால்கள் போல் விதிர்த்தன.

சுந்தரமான ரவிக்கையொன்று, கனவிலிருந்து தோன்றுவதுபோல், உருவாயிற்று. தையல் வாலி பன், தன் பீடத்திலே நிமிர்ந்து உட்கார்ந்தான். பிறகு, சுவரிலே சாய்ந்து, தன் கை வேலைப் பாட்டை உற்று நோக்கினன். ஒரு பெருமூச்சு விட்டான்.

அவனது தோழனை பூனை, ' மியா ' என்று கூச்ச லிட்டது; தன் எஜமானின் தோளிலே தாவியமர்ந்து, வாலை முறுக்கி, அவன் கழுத்தோடு கழுத்தாய்க் கட் டிக்கொண்டது. அன்போடு முதுகிலே தன் எஜ மான் தன்னைத் தட்டிக் கொடுப்பான் என்று, அது எதிர்பார்த்தது; ஆனல், ஏமாந்தது. மறுபடியும்

ஒரு 'மியா'. அதோடு கீழே குதித்து, திரும்பிப் பார்த்து, ஓட்டம் பிடித்தது பூனை.

நூருத்தீன், தனது ஆழ்ந்த சிந்தனைக் கனவினின் றும் விழித்தெழுந்தான். "இம்மாதிரியே இனி என் ஞல் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்க முடியாது; நாளொன்றுக்கு எட்டணுப் பிச்சைக் காசுக்கா, இப்படி வேலை செய்வது?" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். "வேலை நயத்தை இந்த நாளிலே யார் பாராட்டுகிருர்கள்? பிரபு வீட்டுப் பெண்ணு யிருந்தாலும், தையலழகு அவளுக்கென்ன தெரிகிறது? ஹௌரியைப்பற்றி ஒரு காப்பிரிக்கு என்ன தெரியுமோ அவ்வளவுதான், அவளுக்கும் தையல் பெருமை தெரியும்! என் வேலை யெல்லாம் வீணுகிறது; இளமையெல்லாம் நாசமாகிறது. என் வயது முதிர்ந்த பெற்ருேருக்கு ஒரு வேளைச் சோறு போடக் கூட வழியின்றி, இங்கே நான் தவித்துக் கொண்டிருக்கிறேன். பிஸ்மில்லா! நான் கோழை யல்ல. நான் போய்த்தான் தீர்வேன்" என்று கதறினுன். பிறகு, தன் திடசங்கல்பக் குரலைத் தானே செவி கொடுத்துக் கேட்பவன் போல், சிறிது நின்ருன். ஏதோ அவன் காலடியிலே குறுகுறுத்தது. கம்பளம் போன்ற ஓர் உஷ்ணம் அவன் பாதத்திலே சூடேற்றி யது. அவன் குனிந்து பார்த்தான். அவனது தோழ ஞன பூனைதான் அது. நூருத்தீனின் முகத்திலே, புன்முறுவல் பூத்தது.

அஸ்தமிக்க இன்னும், இரண்டு மணி நேர மிருந் தும், நூருத்தீன் தனது துருக்கித் தொப்பியை மாட் டிக்கொண்டு, கடையைக் கட்டினுன்.

## 2

"என் மகனே! நீ எங்களை இந்தத் தள்ளாத வயதிலே தனியாய் விட்டுவிட்டுப் போகலாகாது" என்று கத்தினாள் ரெஷம்ஜான். மழையில் நனைந்த இலைச் சருகு போல், அவளது குரல் நடுங்கியது. "மெஸப்படோமியா! அந்த நாட்டைப் பற்றிக் கேட்டதே யில்லையே! அது ரொம்ப ரொம்பத் தூரத்திலே தான் இருக்கும். அங்குள்ள ஜனங்கள் எப்படியோ! அது அல்லாவுக்குத்தான் தெரியும். அங்கே மனிதர்கள் ஒருவரையொருவர் கொல்லுவதா யன்றோ சொல்லுகிறாய். வேண்டாமடா, என் கண்ணே! நீ போனால், நாங்கள் உயிர் தரியோம்" என்று மேலும் அவள் கதறினாள். அவனது தோளைப் பிடித்து, கன்னத்தில் தடவி, தன் ஆத்மாவையே அவன் கண்களுக்குள்ளே பொழிந்து நிறைப்பது போல், உருக்கமாய் நோக்கினாள்.

தந்தை குலாம் ஆலியோ மௌனமாய் உட்கார்ந்திருந்தார். அவரது உடலம் ஆடியது. தமது நீண்ட தாடியை, அவர் உருவி விட்டுக்கொண்டார். தம் மனைவியை மணந்த சிறிது காலத்துக்குள்ளேயே, அவளது அபார மதிநுட்பத்தை அறிந்து கொண்டவர் குலாம் ஆலி. நூருத்தீன், அவர்களின் ஒரே குழந்தை; அவர்களின் செல்வம், ஒளி, நம்பிக்கை எல்லாம் அவனே. குலாம் ஆலியின் முன்னோர் ஒருவர், வல்லமை மிக்க ஆற்காட்டு நவாப்பிடம் சேவை புரிந்தார். அவருடைய உடைகளிலே இழைந்திருந்த தாரகைக் கணங்களும் மலர்களும் கொடிகளும், குலாம் ஆலியின் பூ வேலைகளிலே மங்காது மறை

யாது ஒளிர்ந்து கொண்டிருந்தன. பூ வேலையிலே குலாம் ஆலி ஒரு நிபுணர். தம் சகோதரர்கள் வரவர அதிகமாய்ப் 'பறங்கி'யின் உடுப்புகளைத் தரித்து வருவது கண்டு, அவர் வருந்தினர். அருமையான பூ வேலைப் பாடுகள் செய்த லுங்கிகளையும், பைஜாமாக்களையும் யார் லட்சியம் செய்கிறார்கள் என்று அவர் துக்கித் தார்.

இப்போது அவருடைய மகன், ராணுவ உடுப்பு இலாக்காவின் தையற்காரனாக, மெஸப்படோமியா செல்லத் தீர்மானித்துவிட்டான். "பாவம்! பெரும் பணக்குவியலைக் குவித்து விடலாம் என்று கனவு காண்கிறான் நம் குழந்தை. ஆனால், அவன் போனபின் யார் நம்மைக் காப்பாற்றுவார்கள்?" என்று அவர் எண்ணினர். தாடியைக் கைப்பிடித்தபடியே, துயரத் தால் அவர் உடம்பு குலுங்கியது.

"அம்மா! நான் சீக்கிரம் திரும்பி வந்து விடு வேன். என் வாழ்க்கையிலேயே இதுதான் எனக்குக் கிடைத்திருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம். இதை நான் கைநழுவ விடலாகாது. இருபது வருஷமாய் ஓயாது உழைத்தும் சம்பாதிக்க முடியாத பணத்தை, அங்கே போய் இரண்டே வருஷத்தில் சம்பாதித்து விடலாம். அம்மா! நான் சீக்கிரமே வந்துவிடுகிறேன். வந்த பின்பு நாள்தோறும் புலவும் கிச்சடியும் உண்ண லாம்" என்று கூறினன்.

"மீயான்! மீயான்!" என்று கிழவி புலம்பினள். மேலும் "நீ இங்கே சம்பாதிப்பது, நம் சாப்பாட்டுக் குப் போதும். நாணயமாய்ச் செய்யும் ஊழியத்துக்கு அல்லா பரிசளிக்காமல் போகமாட்டார். நீயோ வாலி

பன் ; கள்ளங் கபடற்றவன். இதுவோ பொல்லாத உலகம்" என்று சொல்லி, தடை செய்து பார்த்தாள்.

ஆனால், நூருத்தீனோ, பத்துச் சேர் நிறையுள்ள கருங்கல்போல் தன் தீர்மானத்திலே உறுதியாய் நின்றான். பெற்றோரைக் கட்டித் தழுவிப் பிரிவுரை கூறி, அவர்கள் பிடியினின்றும் திமிறி ஓடிவிட்டான். ரெஷம்ஜான், தனது முன்றானையால் முகத்தை மறைத்துக்கொண்டு, விம்மி யழுதாள் ; குலாம் ஆலியின் தாடி முழுதும், மௌனக் கண்ணீரால் அடியோடு நனைந்து விட்டது.

"குதா ஹபீஸ்! குதா ஹபீஸ்!" என்று அவ்விருவரும் அவனுக்குப் பின்னே கதறினார்கள்.

3

இரண்டு வருஷம் கழிந்தது ; மூன்றும் சென்றது. நூருத்தீன்! நூருத்தீன்!—அந்தத் தள்ளாத முஸ்லீமும் அவருடைய மனைவியும் வசித்த அவர்களின் வீட்டிலே, மகன் நூருத்தீன், உருவற்றதொரு வெறும் புலம்பலாய் மாறிவிட்டான்.

கண்காணாத தூரத்திலே மெஸப்படோமியாவில் சாவுத்தேவன் விறுவிறு என்று வேலை தீர்க்கலானான். நிமோனியாக் கொள்ளை நோய், மும்முரமாய் மனிதர்களைச் சாய்த்தது.

குலாம் ஆலியும், ரெஷம்ஜானும் தங்கள் மகன் க்ஷேமமாய்த் திரும்பி வந்து சேரவேண்டுமென்று, அல்லாவைப் பிரார்த்தித்தார்கள்.

ஆனால், கண்காணா அவ்வந்நிய நாட்டிலே, நூருத்தீன் மாண்டு பிடிசாம்பலானான்!

குலாம் ஆலியின் கண்பார்வை மங்கிவிட்டது. அவருடைய விரல்கள், ஊசியைத் தப்புத் தப்பாய் ஓட்டின. அவர் இழைத்த தாரகைக் கணங்களும் மலர்களும் கொடிகளும், கேலிச் சித்திரங்கள் போல் கோணிப் போயின. "என் மகனே! நான் முழுக் குருடாகு முன்னே, மாண்டு மறையு முன்னே, உன்னைக் காண்பேனோடா!" என்று, முதிய குலாம் ஆலி, தம் கையிலுள்ள மென்மையான பட்டுத் துண்டிலே குனிந்து சிரமப்பட்டுப் பூவிழைத்துக் கொண்டே, முணு முணுப்பார்.

கண்காணு அந்நிய நாட்டிலே, நூருத்தீன் மாண்டு பிடிசாம்பலாகி விட்டான்.

"என் கண்மணியின் காலடிச் சப்தமா கேட்கிறது? ஒவ்வோர் இரவும் அவன் என்னிடம் வந்து, வெள்ளியும் செப்புமாய், என் கைநிறையக் காசுகளை நிரப்புவானே! அதுவே எனக்குத் தங்கமாயிருந்தது. ஆவலோடு சோற்றையுண்ணுவான். யூசுப் மாதிரியே என் கண்ணுக்கு அவன் தோன்றினுன். பளிச்சென்று பிரகாசித்தான்; அழகாகவே யிருந்தான். நாளைக்கு, ஆமாம், நாளைக்கு என் நூருத்தீன் என்னிடம் வந்து விடுவான்" என்று தாய் புலம்பினுள்.

கண்காணு அந்நிய நாட்டிலே நூருத்தீன் மாண்டு பிடிசாம்பலாகி விட்டான்.

## 4

சூரியோதய வேளை. பொடித்த மலர்த்தூளைத் தூவியது போல் பனி பெய்தது. பல்கோடி வைர மணிக் குமிழ்களுடன், மஞ்சள் மணல் கரைச் சரிகை பூண்டு, கறுத்தகண்ட அலைகடல், காற்றினுல் அலைக்

கழிக்கப்பட்டு, முன்னே குமுறிக்கொண்டிருந்தது. பின்னே கூவம் நதி, விரிந்து கறுத்ததொரு நாகம் போல் சுழன்று கொண்டிருந்தது இன்னும் அப்பால் பசிய மரங்கள் வளையமிட்டன. இந்தச் சூழலின் நடு மத்தியிலே, கம்பீரமான யுத்த-ஞாபகார்த்தச் சின்னத் தூபி எழுந்தது.

அது ஏன் அங்கே நிற்கிற தென்று குலாம் ஆலியும் ரெஷம்ஜானும் அறிவார்கள்; போர்க்களத்திலே வீரசொர்க்கம் புகுந்தவர்களின் ஞாபகத்தை என்றென்றும் நிலைநாட்டத்தான், அது நிற்கிறது! ஆம்; யுத்த தேவன் ஒரு மகத்தான சமத்துவ ஸ்தாபகனே யாவான். ராணுவச் சமையல்காரனும், ராணுவ ஏகாலியும், ராணுவத் தையல்காரனும், ராணுவக் குதிரையோட்டியும், தமுக்கடிப்போனும், தாரையூதியும், வீர சிப்பாயும் ஒன்ருகவே ஈட்டி முனையிலே குத்துண்டு, துப்பாக்கிக் குண்டால் தகிக்கப்பட்டு, அங்காரகன் மடியிலே தவழ்ந்து, அவன் அருள் பெறுகின்றனர். ஒருவன் எமனுடன் மல்லுக் கட்டுவான்; மற்றவன் எமனுக்குத் தன் கடனைச் செலுத்திடுவான். ஒருவனுக்குச் சலவைக் கல் ஞாபகச்சிலை ஏற்படலாம்; மற்ருெருவனுக்கு ஒரு வெறுங்கல்லைக் கூட ஊன்றுவோர் இரார். ஆனுல், சமாதானம் நிலைத்து, யுத்த ஞாபகச் சின்னம் எழும்பும் போதோ, வீரனின் நினைவை, கீதமாய்ப் பொழியும் ராணுவ சங்கீதம்; வீரப்பிரதாபக் கீர்த்தியின் மகுடம், உன்னத கம்பீரப் பிரகாசத்தோடு, மாண்ட வீரர் அத்தனை பேர் மீதும் ஒளி வீசும்.

வயது முதிர்ந்த இந்தத் தம்பதிகள், அலங்கத்தைக் கடந்து, உள்ளே புகுந்து, வானளாவிய அந்த

ஸ்தூபியின் முன்னே அசைவற்று நின்றனர். தலைக்கு மேலே, பல வர்ணமும் பல ரூபமும் தாங்கிக் கவிந்தன மேகங்கள். முத்தும், பிளந்த பவளமும், வாய் விரித்த நிலக்கரிச் சுரங்கமும் போல், அவை உருப்பெற்று மிதந்தன. முத்துக்கள் மங்கி விட்டன; பவளங்கள் உடைந்தன; பொடித்த மலர்த் தூளிகளிலே நிலக் கரித்தூசி கலந்து மண்ணுயின!

"என் மகனே!-ஓ, என் மகனே!" என்று தன் முக மூடியை விலக்கிப் புலம்பினுள் ரெஷம்ஜான். "கண்காணு நாட்டிலே, காப்பிரிகளுக்கும் பிறருக்கும் நடுவே மாண்டாய். உனக்கொரு கல்லறை கட்டி, விளக்கேற்றி, அல்லாவைத் தொழ, எங்களால் இயல வில்லை. ஆனுல், அல்லா அருள் சுரந்தார். அவர் உனக் குக் கல்லறையும் கட்டி, கோடி விளக்குகளும் ஏற்றி விட்டார். உல்-ஹாமுட்-உல்-இல்லா!" என்று அவள் கோஷித்தாள். அவள் கண்களிலே கண்ணீர் துளித்தது. வானத்தை ஏறிட்டு நோக்கிய அவள் விழி களிலே, ஏதோவொரு தெய்விகக் காட்சியைக் கண் டது போன்ற ஓர் ஆனந்தம் பொங்கியது. அந்த கம் பீரக் கருங்கல் ஸ்தூபி கூனிக் குறுகி, உயிர் பெற்று அவளுடைய வாலிப மகனுக மாறிவிட்டது போல், அவளுக்குத் தோன்றியது. "உல்-ஹாமுட்-உல்-இல்லா!" என்று மீண்டும் அவள் கோஷித்தாள். ஆண்டவனை வாழ்த்தும் அந்த கோஷத்தை, அவள் கணவரும் எதிரொலி செய்தார். கடலிலே அலையும் கப்பலைப் போல் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்த காற்று, திடீரென்று நின்று, இந்தத் தம்பதிகளின் 'உல்-ஹாமுட்-உல்-இல்லா' என்ற பரவச கோஷத்

தைக் கேட்டு வாங்கி, பின், அதை நிலத்திலும் கடலி லும் கடலிலும் நிலத்திலும், நிலத்துக்கும் கடலுக் கும் தாரகைக் கணங்கள் உறை வானமண்டலத்துக் கும் கொண்டு சென்று முழங்கியது !

# ரத்தினம்

“இன்னும் ஒரு திராம் போடு” என்று, உதட்டைச் சப்பிக் கொண்டே, அவன் கூறினன். கையிலே இருந்த கண்ணுடி டம்ளரைக் ‘குஷி’யாகப் பார்த்த வண்ணம், முன்னே நீட்டினன். இதுவரை அவன் ஐந்து ‘கிளாஸ்’ குடித்தாயிற்று; இது ஆருவது ‘கிளாஸ்’. கடைக்காரன், கங்காரு நடப்பது போல் நடந்துவந்து, செவந்து தெளிந்த ‘ஆரக்’ சாராயத்தை வார்த்தான்.

ரத்தினத்துக்கு வயது சுமார் நாற்பது இருக்கும். அரையிலே வேட்டி கட்டி, மேலே ஒரு ‘ஷர்ட்’ அணிந்திருந்தான். மேகவர்ணப் பட்டு அங்கவஸ்திரம் ஒன்றைத் தோளிலே போட்டிருந்தான். பிறைச் சந்திரனைப்போல் தலை வழுக்கை விழுந்திருந்தது. கன்னங்கரேல் என்று உலுப்பி நின்ற கட்டு மீசைக்கு மேல், கம்பீரமாக அவனுடைய மூக்கு நீட்டிக்கொண்டிருந்தது. முழங் கையை உயர்த்தி ஒரே வாயாய் அந்தச் சாராயத்தைக் கபக் என்று விழுங்கிவிட்டு, கண்ணுடி டம்ளரை மேஜைமீது டப்பென்று வைத்தான். இதற்குள்ளேயே அவன் ஜோபியிலிருந்த மணிபர்ஸை, இடது கை வெளியே எடுத்து விட்டது. வெகு அலட்சியமாக இரண்டு ரூபாய்களை மேஜை மீது சுண்டியெறிந்தான். பாக்கி ஐந்து அணுச் சில்லறையை, இவனிடம் கடைக்காரன் திருப்பிக் கொடுத்தான்.

ரத்தினம் கடையை விட்டு வெளியே நடந்தான். நடக்கவாவது! பூமியிலே கால் பாவாமல், விரல் நுனியிலே நர்த்தனமாடிக்கொண்டு சென்ருன். ஏனென்ருல், அவனுடைய உள்ளமென்ற பூந்தோட்டத்தில ஏதோ ஒரு கானக்குயில் புகுந்து, தத்தித் தத்தி, சிறகடித்து, உல்லாசமாய்த் துள்ளிக்கொண்டிருந்தது. உலகமே தன்னைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பது போல, அவனுக்குத் தோன்றியது. அவனும் ஒரு மோகனப் புன்னகை செய்து கொண்டே நடந்தான்.

வெளியே ரஸ்தாவில், அவனுடைய மகனும் மனைவியும் வந்து சேர்ந்தார்கள். மங்கி, சதைப்பற்றில்லாத ஓர் எலும்புக் கூடாயிருந்தாள். யௌவனத்தின் காந்தியும் களிப்பும் குன்றி, சலிப்படைந்தவளாய், அவள் காணப்பட்டாள். ஒன்பது வருஷத்துக்கு முன்னே, ஒரு குழந்தைக்குத் தாயாகும் பரவசம் அவளுக்குக் கிட்டியது. இன்னும் பலமுறை அந்த ஆனந்தம் திரும்புமென்று, அன்று அவள் எதிர்பார்த்தாள். ஆனல், அவளது இளமை பொங்கி நின்ற காலத்திலேயே, அதன் ஊற்றுக்கண் வற்றிவிட்டது; ஒரே ஒரு மகனைப் பெற்றதோடு, அவள் திருப்திகொள்ள வேண்டியதாயிற்று.

தன் புருஷன் ஒய்யார நடை போட்டுக்கொண்டு வருவதைக் கண்டதும், அவள் உள்ளத்திலே ரத்தம் கொதித்தது; முகமும் செவந்தது.

"இன்னிக்கி அப்படியெல்லாம் செய்யமாட்டேன்னு சொன்னியே?" என்று தன் ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு சொன்னுள் மங்கி.

அப்போது மாலை மணி நாலு. வெயில் இன்னும் கடுமையாகவே காய்ந்துகொண்டிருந்தது. ஆனால், ரத்தினமோ, பனியும் நிலவும் சூழ்ந்த குளுமையான ஓர் உலகத்தில் உலவிக்கொண்டிருந்தான். அவனுடைய வார்த்தைகள் பனிபோல் குளிர்ந்து நிலவு போல் கனிந்திருந்தன.

"உனக்கு வெக்கமில்லே?" என்று, தன்னையும் மீறிய உரத்த குரலில் அவள் கத்தினாள்; மேலும் தொடர்ந்து, "அதுவும் நம்ம புள்ளெயும் கூட வருதேன்னு தெரியுஞ்சுக்கிட்டே இப்படிச் செய்யிறியே! கோவில்லெ திருவிழாப் பாக்கப்போறமே; அதையாவது நெனச்சியா? என்ன வெக்கக்கேடு!" என்றாள்.

"ஒரே ஒரு சொட்டுத்தான் புள்ளே" என்று நாக் குழறிய குரலில் அவன் சொன்னான். சொட்டு என்றால் என்ன அர்த்தம் என்பது மங்கிக்கு நன்றாய்த் தெரியும். பின்னும் ரத்தினம், "சிநேகிதங்க கூப்பிடறப்போ மாட்டேங்க முடியுமா?" என்றான். இப்படிச் சொல்லிவிட்டால், அவளுடைய கோபம் சிறிது தணியும் என்பது அவன் எண்ணம்.

"சிநேகிதங்களாம் சிநேகிதம்! அவங்க குடிக்கிற மொந்தைக்கும் ஒன் காசெத்தான் தொலைக்கிறே!"

"அதெ நீ கேக்க வேண்டியதில்லெ."

"கேக்க வேண்டியதில்லையா? நான் கேக்காமெ பின்னெ யார் கேக்கறது?"

"வாயெ மூடுடி!"

"இந்தா, இது நம்ம வீடில்லே. இங்கேயெல்லாம் கலாட்டாப் பண்ணுதே. தெருவிலே போறவங்கள்ளாம் சிரிக்கிருங்களே!"

"மூடுடி வாயை! கேடுகெட்ட தேவடியா! நான் செத்துத் தொலெஞ்சா ஒன்பாடு ரொம்பக் குஷி தான்" என்று வெகு ஆத்திரத்தோடு அவன் கத்திஞன்.

அவர்களுடைய சண்டையின் உச்ச ஸ்தாயி இது தான். இதோடு அது முடிந்து விட்டது. தனக்கும் தன் மனைவிக்கும் வாக்குவாதம் நடக்கும்போதெல்லாம், இந்த அலங்காரமான வசவின் மூலம்தான், ரத்தினம் அவளை வாயடக்குவது வழக்கம்.

அவர்கள் நின்ற இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் கோவில் இருக்கிறது. அங்கேதான் அறுபத்துமூவர் உற்சவம். இந்த உற்சவம் மகா வைபவமாய் நடைபெறும். அதைக் கண்டுகளிக்க, வெள்ளம்போல் ஜனங்கள் வருவார்கள். கோவிலேச் சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும், அறுபத்து மூன்று நாயன்மார் விக்கிரகங்களை நீண்ட ஊர்வலமாக எழுந்தருளச் செய்வார்கள்.

அதுதான், அந்த நாயன்மார்கள், மனித ஜாதியின் கட்டிளங்குமரிகள் எவ்வளவு சுந்தரவதிகளாய் இருக்கிருர்கள் என்று காணும் காலம். ஆனுல், தசையும், குருதியும் கமழும் நறுமணமோ, கலகல என்று ஒலிக்கும் ஒளிநகையோ, கொஞ்சிக் குளிர மலரும் கண்ணிமையோ, வாழ்க்கை யின்பங்களை அவர்கள் நுகரும்படி உயிரூட்ட முடியாத வெண்கலப் பிரதிருதியாய் அன்ருே இருக்கிறது அவர்கள் திருமேனி

இந்த அபாக்கியத்துக்கு, அவர்கள் தங்கள் விதியைத் தான் ஒரு வேளை நொந்து கொண்டார்களோ! அன்று தினம், மனிதன், கடவுளையே தன் பிரதி பிம்பமாய்ப் படைத்துவிட்டான். களிப்பும் குதூகலமும், ஓட்டமும் உல்லாசமுமாய், தொட்டதெல்லாம் உணர்ச்சிபெற்று உருமாறச் செய்யும் வல்லமையோடு, எதேச்சையாய் அங்குமிங்கும் மனித குலம் திரிந்து கொண்டிருந்தது. ஒருவரோடொருவர் மோதியிடித்துக் கலந்து, பேதா பேதங்களைக் கடந்து, அடைதற்கரிய தேவலோகத்தை, மனிதர்கள் அன்று அடைந்து விட்டார்கள்.

அதிகாலையில், ரத்தினம் தன் வீட்டை விட்டுப் புறப்பட்டான். அப்போது, அவன் தன் மனைவியிடம் "ஒரு அலுவலா வெளியே பேறேன். உருமச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்திடறேன். அப்படி வரலெ யாஞ, நம்ம கடெய மூடிப்பிட்டு, புள்ளெயக் கூட்டிக்கிட்டு, அந்தக் கட்டெத்தொட்டி யிருக்கெ அங்கெ நீ வந்திடு. அங்கெ நான் காத்துக்கிட்டிருக்கேன். எல்லாருமாச் சாமி பாக்கப் போகலாம்" என்று சொல்லி யிருந்தான்.

அவன் குறிப்பிட்ட இடத்தை, மங்கிக்கு நன்ருய்த் தெரியும். 'கட்டைத்தொட்டி' என்று அவன் பிரஸ்தாபித்த உடனேயே, அவள் மனம் கலவரமடைந்தது. ஏனென்ருல் அந்த இடத்தில் வீசும் காற்றே, குடிவெறி கொண்டு அலையும்.

"தினம் குடிக்கிருப்பிலெ, இன்னிக்குமா குடிக்கப்போறெ? சாமி கும்பிடப் போருேம். இன்னிக்கு மாத்திரம் வேணுமே" என்று, மங்கி அவனை வேண்டிக் கொண்டாள்.

"இன்று செய்யலாம். இன்று செய்யப்படாதுங்கறதெல்லாம் எனக்கு நல்லாத் தெரியும். நீ சொல்ல வேணும்" என்று துடுக்காய் அவன் பதில் சொன்னான்.

அதன்மேல், மங்கி தன் சேலை முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டு, கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். "சரி, போ. குடிக்கலே" என்று, ரத்தினம் அரைமனதோடு ஒப்புக்கொண்டான்.

ஆனால், இப்போதோ, என்ன அக்கிரமம்! சகிக்க முடியாத அந்தத் துர்நாற்றத்தோடு, இதோ அவன் வந்து நிற்கிறான். சிநேகிதர்களோடு ஒரே ஒரு சொட்டாம்! உருப்புரியாமல் குழந்தைகள் மாதிரி ஓர் உளறல் வேறே! என்ன அக்கிரமம்!

உற்சவம் பார்க்க வந்துள்ள அந்த மனித சமுத்திரத்தில், தாங்கள் எத்தனை சிறிய துளிகள் என்ற சிந்தனையே இல்லாமல், இந்தப் புருஷனும் மனைவியும் மகனும், மெல்ல மெல்ல நடந்தார்கள். மனைவி, தன் புருஷனின் பக்கத்திலே, அவனோடு ஒட்டிக்கொண்டு தான் சென்றாள்; என்றாலும், அவனோடு ஏன் செல்லுகிறோம் என்ற வெறுப்பு, அவள் மனதை அலைத்துக் கொண்டிருந்தது. பையனோ, இவர்களை விட்டுக் கொஞ்சதூரம் முன்னால் போய்க்கொண்டிருந்தான்.

ரத்தினம் திடீரென்று, தன் சிடுசிடுப்பை விட்டு, "இன்னிக்கிக் காலையிலே, வியாபாரம் எப்பிடி?" என்று மனைவியைக் கேட்டான்.

கடுமையான கோபத்தை வெளியிடும் மார்க்கம், மௌனம் சாதிப்பதே என்று மங்கிக்குத் தெரியும்; ஆனால், அந்த மௌனத்தின் வலிமையும் கூட, தன் புருஷன் இப்போதுள்ள நிலையில், பயனில்லை என்று

கண்டாள். ஆகையால், அவளும் பேசத் தொடங்கினாள்.

“வியாபாரமா, வியாபாரம்! வளக்கமா வருமே சின்னப் பசங்களும் குட்டிங்களும்; வந்து தம்பிடி, காலணுவுக்கு ஏதாவது வாங்கிக்கிட்டு, ஒரு பெப்பர் மிண்டு, இல்லேன்னு கொஞ்சம் பட்டாணி, சக்கரெ ஏதாச்சும் கொசிரு கொடுன்னு கேக்குமே; அதுங்க கூட இன்னக்கி வரல்லெ” என்று மங்கி பதிலளித்தாள்.

தங்களுடைய பலசரக்குக் கடை, ஒரு காலத்தில் எவ்வளவு லட்சுமீகரமாய் இருந்தது என்று அவளுக்கு ஞாபகம் வந்தது. இதோ வரிசை வரிசையாய் ஸோடா பாட்டில்களும், வெற்றிலை பாக்குப் புகையிலையும், கொத்துக் கொத்தாய் வாழைப்பழங்களும் அடுக்கிவைத்து, ஒரு கொடிக் கயிற்றிலே செய்திப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் சரம் சரமாய் ஆகாச வாணம்போல் பல வர்ணங்களில் தொங்கிக் கொண்டிருக்கிறதே; இந்தச் சிறிய கடையில், ஒரு காலத்தில், பலவித மதிப்புடைய பல ரகமான மளிகைகள் ஏராளமாய் நிறைந்திருக்குமே! அந்தச் செழிப்பையெல்லாம் அவள் நினைத்துக்கொண்டாள். அப்பேர்ப்பட்ட கடை, சுருங்கிப்போய், இப்போது இந்தக் கதிக்கு ஏன் வந்துவிட்டது? தன் புருஷனுடைய சகவாச தோஷம்தான் அதற்குக் காரணம்; அவனிடம் வளர்ந்துவிட்ட சூதாட்டப் பித்துத்தான் காரணம்.

தாங்கள் அடியோடு நாசமாகாமல், அவள் தன்னுடைய சிக்கனத்தினாலேயே தங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாள். தன் புருஷன் வெளியே போய்

விடுகிற போதெல்லாம், தானே கடையில் உட்கார்ந்து வியாபாரம் செய்யவேண்டி நேர்ந்தது அவள் மன துக்கு மிகவும் சங்கடமாய்த்தான் இருந்தது. என்ரு லும், அவள் மிகவும் தீவிரமாகவே நடந்துகொண் டாள்; செல்வச் செழிப்போடு இருந்தபோது எவ் வளவு அடக்கமாய் இருந்தாளோ அதேபோல்தான், தங்கள் வறுமையிலும் அவள் அடக்கமாய் இருந்தாள்.

"தம்பிடி வாங்கற பசங்களா! நாசமாப்போன தம்பிடி இருக்குதே தம்பிடி!" என்று ரத்தினம் முன கிஞன். அவன் குரல் வரவரத் தடுமாறிக் குழறியது; நடையும் அதற்கேற்றவாறு தள்ளாடித் தத்தளித்தது. "தம்பிடி தம்பிடியாய்ச் சேந்து அணு ஆகுது; அணு அணுவாய்ச் சேந்து ரூபா ஆகுது. தம்பிடியெ ஏன் திட்டணும்?" என்று மேலும் தொடர்ந்து அவன் உளறிஞன்.

"அடடா! எவ்வளவு புத்தி வந்திடுச்சு ஒனக்கு! ரூபா ரூபாயா, பத்து ரூபா நோட்டு, நூறு ரூபா நோட்டுக் கெல்லாம் ஒன்கிட்டச் சாமான் வாங்கற வாடிக்கெக்காரங்க இருந்தாங்களே; அப்ப எல்லாம் இந்தப் புத்தி ஒனக்கு இருந்திருந்தால்..."

மங்கியின் இந்தக் கேலி வார்த்தைகளைக் கேட்டுத் தலை கவிழ்ந்த ரத்தினம், மல்லுக்குத் தயாராகிறவனைப் போல் சட்டென்று அவளை ஒருவிதக் கோணல் பார்வை பார்த்துக்கொண்டு, "நீ இப்ப என்னதான் சொல்றே?" என்று கேட்டான்.

அவளும் அதிக ஆத்திரத்தோடு, "என்ன சொல் றேன்? இப்படிக் கட்டுத் திட்டமில்லாமெ கெட்ட வழியிலெ யெல்லாம் பணத்தெ அழிக்காதேங்கிறேன். வீட்டைப் பந்தகம் வெச்சிட்டோம். என் நகை எல்

லாம் வித்தோ அடகு வெச்சோ ஒண்ணு பாக்கி இல் லாமெ தொலஞ்சிடுச்சு. உன்கிட்ட எத்தனையோ கெஞ்சிப்பாத்திட்டேன்; அத்தனையும் வீணாச்சு. கண் ணீர் விட்டு அளுதேன்; அதுக்கும் உன் மனசு இரங் கலே. அக்கம் பக்கத்து வீட்டுக்காரங்க பேசற பேச்செ, என் காதலெ கேக்க முடியலே" என்றாள்.

"அக்கம்பக்கத்து வீட்டுக்காரங்களா! அத்தனை யும் கேடுகெட்ட நாயுங்க! அதுங்க மாதிரிதான், நீயும் ஒரு கேடுகெட்ட நாய்!" என்று, மூச்சு வாங்கிக் கொண்டே கூறிய ரத்தினம், தன் மார்பைத் தட்டிக் கொண்டு, "எனக்கு நான்தான் எசமான். ஒரு பொம் புள்ளெ பேத்தறத்தை யெல்லாம் நான்கேட்டுக்கிட்டு இருக்கமுடியாது" என்றான்.

சிறுவன், பின்னே திரும்பிப் பார்த்தான். ஏதோ கடுமையாய்ப் பதிலளிப்பதற்காகத் திறந்த மங்கியின் உதடுகள், சட்டென்று மூடிக்கொண்டன; ஆனால் அவள் இதயத்திலே நொந்து கிடந்த ஒரு புண் வாய் திறந்து, வேதனையோடு ரத்தம் வடிந்தது.

ரத்தினம், தனக்குத் தானே எஜமானான ரத்தி னம், யாருமே தனக்கு நிகரில்லை யென்ற செருக்கோடு தலை நிமிர்ந்தான். அப்புறம் இருவரும் பேசவே யில்லை; மௌனமாகவே நடந்தார்கள்.

## 2

கண்ணைப் பறிக்கும் கோலாகலமான காட்சியை அவர்கள் கண்டார்கள். அலங்காரமான பலவகைக் கடைகள்! ஓயாத கிலுகிலுப்பைச் சத்தம்! சின்னஞ் சிறு மணிகளின் கண கண என்ற ஓசை! சமுத்திரம் போல் ஆரவாரம் செய்யும் மனிதர்களின் பேரிரைச்

சல்! விசாலமான நான்கு மாடவீதிகளும் சேருமிடத்தில், குளத்தின் நீண்ட படிகள், அலைபோல் வளைந்து வளைந்து மின்னும் வானவில் மாதிரி ஜொலித்தன— அவ்வளவு ஆடம்பரமாய் உடைகள் அணிந்து, நெருங்கித் திமிர்ந்து, ஏராளமான ஜனங்கள் அந்தப் படிகளிலே நின்றுகொண்டும் நடந்துகொண்டுமிருந்தார்கள். பாசி படர்ந்து எப்போதும் நிச்சலமாய் இருக்கும் அந்தக் குளத்தின் ஜலம்கூட, சுற்றிலும் நடமாடும் மக்களின் குதூகலச் சிரிப்பின் அதிர்ச்சியால், அலைபூத்து ஆனந்திப்பதுபோல் தோன்றியது. அந்தக் குளத்துக்குப் பின்னே, யோகிகள் கண்ட கனவுபோல, வானளாவிய கோவில் கோபுரம் நிமிர்ந்து நின்றது. தெய்விகம் நிறைந்த அதன் கம்பீரத்தோற்றம், ஊனமடைந்த மனித ஜாதியைக் கண்டு பழிப்பதுபோல் இருந்தது. சூரியன் மலைவாயில் விழுந்தது. அந்தி மயங்கிய ஒளியில், அந்த அற்புதக்காட்சி, வர்ணிக்க முடியாத ஒரு மாய மந்திர ஜாலம்போல் ஒளிர்ந்தது.

நாயன்மார் விக்கிரகங்கள், மகா வைபவத்தோடு, பவனி வரும் நேரம் நெருங்கியது. வாத்திய கோஷங்கள் எழுந்தன; தாரைகள் ஊதின; கொம்பு, கொட்டு மேளங்கள் முழங்கின; ஜாலர்கள் சப்தித்தன. களிமண் செப்பிலே மெல்லிய ஜவ்வுகளை ஒட்டித் தம்பிடிக்கு விற்கும் தம்பட்டங்களை வாங்கிச் சின்னஞ் சிறு குழந்தைகளும் ஒலி எழுப்பிக்கொண்டிருந்தன. நாலு திசையும் எழுந்த கீத கோஷங்கள், ஒன்றுடன் ஒன்று இழைந்து திரண்டு, கட்டு மீறிய நாத சமுத்திரமாய்ப் பொங்கி, அள்ளி வீசும் அலைபோல் சிதறின. விதம் விதமான ஜனங்கள் நிறைந்த

அந்தக் கூட்டம், கொந்தளித்த கடல்போல் ஆரவாரம் செய்தது. வரவர இருண்டு வரும் அந்த நேரத்தில், ஆண்களும் பெண்களும், காட்டுப் பூக்களைப் போல், தங்களுக்கன்னியமான ஏதோ ஓர் அதிசய சோபை பெற்றுத் திகழ்ந்தார்கள். மனிதர்களுக்குத் தாங்கள் தோற்கலாகாது என்று, வானுலக தேவதைகளே, இவர்களின் நடுவே வந்து, மர்மமாய் அந்தக் கும்மாளத்திலே கலந்து கொண்டார்களோ என்றும் தோன்றியது.

ரத்தினம், தன் மனைவியின் பக்கத்திலே நடந்தான். சர்வ ஜனங்களும் ஒரே குடும்பமாய்க் கூடிக் களிக்கும் இந்த நேரத்தில், ரத்தினம் மட்டில், இதிலெல்லாம் ஒட்டாமல், உற்சாகம் குன்றியிருந்தான்; அவன் மனம் எங்கேயோ அலைந்துகொண்டிருப்பது போல் தோன்றியது. மங்கி, தன் மகனுக்கு, ஒவ்வொரு கடையாக வேடிக்கை காட்டிக்கொண்டும், இனிப்பான மிட்டாய்களை வாங்கிக் கொடுத்துக் கொண்டும் சென்றாள்.

ஒரு பக்கத்திலே ஜிகினுக் கண்ணாடியை வைத்துக்கொண்டு, கண கண என்று மணியடித்து, "பாரு பாரு, பட்டணம் பாரு" என்று உரக்கக் கூவியழைத்தான் ஒருவன். அந்தக் காட்சிகளையும் தன் மகனுக்கு, மங்கி காட்டினாள். ஊருக்கு ஊர் சுற்றும் ஒரு ஸர்க்கூட் பயாஸ்கோப் கொட்டகைக்கு முன்னே ராணுவ கீதம் வாசிக்கும் பஞ்சாப் பாண்டை, அவன் கேட்பதற்காகச் சிறிது நின்றாள். ஆனால், இதையெல்லாம் தாண்டி ராட்டினங்கள் சுழலும் இடத்துக்கருகே செல்லும்போதுதான், பையன் ஆனந்தம் தாளாமல்,

கைகளைக் கொட்டிக்கொண்டு, 'ஆ - ஊ!' என்று குதிக்கத் தொடங்கிவிட்டான். ரத்தினத்துக்கே, புன் சிரிப்பு வந்தது; நாக்குத் தடுமாறினாலும் கூட, ஏதோ 'குஷி' யாய்ப் பேசலானான்.

"ஒனக்கு எது வேணும், தம்பீ? தொட்டில் தொங்குதே, அதுவா? யானை, குதிரெ, நாக்காலி எல்லாம் பறக்குதெ, அதுவா?" என்று, மகனை ரத்தினம் கேட்டான்.

"எனக்குக் குதிரெதான் வேணும், அப்பா" என்று உடனே சொன்னான் சிறுவன்.

குடை ராட்டினத்தின் நடுவே உள்ள பல் சக்கரப் படியிலே கையை வைத்து அதைச் சுற்றுவதற்குத் தயாராய் இருந்த ஒருவன், "யானை சவாரி! குதிரை சவாரி! எதுவானாலும் கால் காலணா! வாருங்கோ - ஏறுங்கோ!" என்று கூவிக்கொண்டிருந்தான்.

ஜனங்கள் ஒருவர்மேல் ஒருவர் மோதி யிடித்துக் கொண்டு, ராட்டினத்தை அணுகினார்கள். ரத்தினம், தன் மகனை ராட்டினக் குதிரை ஒன்றின்மீது 'பொத்' என்று உட்கார்த்திவிட்டு, பின்னே நகர்ந்தான். குதிரைகள் அனைத்திலும் ஆட்கள் ஏறியான உடனே, ராட்டினம் சுழல ஆரம்பித்தது.

குதிரைகள் முதலிலே மெல்ல மெல்ல முன்னும் பின்னும் ஆடி அசைந்தன; பின்பு, மேலும் கீழும் உயர்ந்து தாழ்ந்தன; பிறகு, வர வர அகன்ற வட்டமாய்ச் சுழன்று, எழும்பி விழுந்து, ஜாம் ஜாம் என்று காற்றிலே தாவிப் பாய்ந்தன. கிர்ர்ர்ர், கிர்ர்ர்ர் என்று

ராட்டினம் அதி வேகமாய்ச் சுழன்றபோது, குதிரைகளும் அவைகளில் சவாரி செய்வோருமே மாயமாய் மறைந்துவிட்டார்கள். பூமியே, ஒரு மந்திர ஜால ராட்டினம்போல் குறுகிச் சிறுத்து, ஆனந்த வெறியோடு சுழல்வதாய்த் தோன்றியது.

பளீர் என்று ஒரு சப்தம் கேட்டது. யாரோ கைதட்டிய சப்தம். அது அங்கே நிகழ்ந்த சகல சந்தடிகளையும் மிஞ்சி எழுந்தது. சட்டென்று எல்லோர் கண்களும், அந்தச் சப்தம் வந்த திசையை நோக்கித் திரும்பின.

பம்பரம்போல் சுழலும் ராட்டினத்தை, விழித்த கண் விழித்தபடி பார்த்துக்கொண்டும், வெறிபிடித்தவன்போல் கைகளை ஆட்டிக்கொண்டும் ரத்தினம் நின்ருன்; அவன் கண்களில், ஒரு பேய் ஒளி ஜொலித்தது. "பாரு! மும்தாஸ், மும்தாஸ் பறக்குது பாரு!...இந்தத் தடவெதான் சரியாப் பிடிச்சிட்டேன்...குருதெ சொல்ருணும்! எவன் சொல்றவன்?...மும்தாஸ் தான் இன்னிக்கி அடிக்கப் போவுதுன்னு எனக்குத் தெரியுமெ... அம்புமாதிரி பறக்குதா! ஜாஸ்மின்...ரஷீது... ஜொஹால்...எல்லாம் பிந்திடுச்சி...பாரு! இது மூணும் ரேஸு...இப்பவும் அதுதான் வின்னு...அடே கவுஸு, இங்கெ பாருடா! அடிச்சேண்டா ஒரு பிரேஸ் ...இஸ்ஸ்...அடேடே...என்னடா இது...ரஷீதில்லே பாய்ஞ்சு வருது!...என் கண்ணுதான் அவிஞ்சிடுச்சா ...கலகலன்னு ரூபா கொட்டுதே...ரஷீது! ...ரஷீது! ...ஒரு ஹெட்லெ அடிச்சுட்டாண்டா...நாசமாப் போவ...தொலஞ்சிடுச்சி...நானு...நானு..." என்று ரத்தினம் என்னென்னவோ உளறினன்.

உடனே, 'பொத்' என்று அவன் கீழே விழுந்து விட்டான். தொண்டையைக் கைகளால் பிடித்துக் கொண்டு, கால்களை ஆகாயத்திலே உதைத்துக் கொண்டு, தரையிலே அவன் புரண்டான்.

பக்கத்திலே நின்ற மங்கி, தன் புருஷனின் விசித்திரமான செயலைக்கண்டு மனம் திகைத்தவளாய்,குந்தி உட்கார்ந்து, அவனைத் தூக்க முயன்றாள். ஆனால், அவன் அலங்கோலமாய்க் கிடந்தான்; அவன் கைகள் தொய்ந்து பரத்திக் கிடந்தன; அவனுடைய ஒருகால், தட்டிக்கடைத் தூணிலே மாட்டி முறுக்கிக்கொண்டிருந்தது. வாயிலிருந்து நுரை வழிந்தது; கண் விழிகள் பிதுங்கி, கோவைப்பழம்போல் செவந்திருந்தன. விலா எலும்புகள் முறிந்துவிழுமோ என்று அஞ்சும்படி, மார்பு உப்பி உப்பி விழுந்தது, இந்தப் பயங்கரத்தைக் கண்டு மனம் பதறிய மங்கி, சிறிதுநேரம் வரையில் ஒன்றுமே புரியாமல் ஊமையாகிவிட்டாள். வெட்கமும் துயரமும் நெஞ்சை யடைக்க, தான்தான் விம்மியழுகிறாள் என்ற நினைவுகூட அவளுக்கில்லை. கொஞ்சநேரம் கழித்துத் தான், தனக்கு இன்ன கதி நேர்ந்திருக்கிறது என்ற உணர்வு, திடீரென்று அவளுக்கு உதயமாயிற்று; எழுந்து நின்று தன் மகனை அழைத்தாள்.

இதற்கிடையிலே, ராட்டினக் குதிரைகளின் ஓட்டம் தளர்ந்து மெதுப்பட்டது. அதன் பல்சக்கரத்தைச் சுற்றும் மனிதன், யாரோ விசித்திரமாய்க் கூக்குரல் போடுகிறார்களே என்று கவனித்தான்; கீழே விழுந்து கிடக்கும் ஏதோ ஒன்றைச் சுற்றி ஜனங்களெல்லாம் நெருக்கி யிடித்துக்கொண்டு நிற்பது,

அவன் கண்களுக்குத் தோன்றியது. சிறுவன், பயமும் வியப்பும் சூழ்ந்தவனாய், தாயை ஒட்டிக்கொண்டு நின்றான். தாய் அழுதது கண்டு, அவனுக்கும் அழுகை வந்தது. தன் அப்பனுக்கு ஏதோ கோளாறு நேரிட்டிருக்கிறது என்று, மங்கலாக ஓர் அனுமானம் அவன் மனதில் தோன்றியது.

"தள்ளிப்போங்க; தள்ளிப்போங்க" என்று சொல்லிக்கொண்டு, சூழ்ந்துநின்ற ஜனங்களை விலக்கி உள்ளேபுகுந்து,பிரஞ்ஞையற்றுக்கிடந்த ரத்தினத்தை சில மனிதர்கள் வெளியே தூக்கிச் சென்றார்கள். ரஸ்தாவின் மறுமுனைக்குப் போய், அங்கே நின்ற ஒரு ஜட்காவில், அவனைப் படுக்கப்போட்டார்கள். நினைவழிந்து கலங்கியிருந்த மங்கிக்கு, இதற்கு நன்றி செலுத்தக்கூடத் தோன்றவில்லை.

ஜட்கா புறப்பட்டுவிட்டது.

வெகு தூரத்திலே, தாரை தம்பட்டைகள் முழங்கின; பொங்கும் கடலலைகள் பாறைமேல் மோதுவது போல் பேரிரைச்சல் கேட்டது. அறுபத்து மூன்று நாயன்மார்களும் ராஜ வைபவத்தோடு மெல்லமெல்ல இன்னும் திரு உலாச் சென்றுகொண்டுதான் இருக்கிறார்கள்.

ஜட்கா எகிறிக் குதித்தது. ரத்தினம் ஏதோ வேதனையோடு மெல்லிய குரலில் முனகினான். முனகல் நின்றதும், ரேஸ் பாஷையில், பந்தயக் குதிரைகளின் பிறப்பு வளர்ப்புகளைப்பற்றியே பேசத் தொடங்கினான். குதிரைப் பந்தய டிக்கட்டுகள் விற்கும் ஜன்னல்களிலே கலகல என்று அருவிபோல் பாய்ந்தோடும் வெள்ளி ரூபாய்களின் சலசலப்பு, அவன் காதை

விட்டு அகலாமல் இன்னிசை பொழிந்துகொண்டிருந்தது; பந்தய ஸ்தலத்தில், பேராவலோடு தன் குதிரையின் ஜயத்தை எதிர்பார்த்து, தான் நின்றுகொண்டிருப்பது போலவே அவனுக்குத் தோன்றியது; உலகமே ஒரு பந்தய மைதானமாக அவன் மனதில் பட்டது. அவன் பினத்துகிற பிதற்றலை, மங்கிக்குக் கேட்கச் சகிக்கவில்லை. சென்ற மூன்று மாத காலத்தில், குதிரைப் பந்தயத்திலே ஏராளமான பணத்தை, தன் புருஷன் இழந்துவிட்டான் என்று அவளுக்குத் தெரியும். குடியும் வெறியும் மிகுந்ததால்தான் தன்னையே மறந்து, அவன் இப்படி விபரீதமாய் நடந்துகொண்டான். ராட்டினம் சுழன்ற சுழற்சியில் பறந்த மரக் குதிரைகளே, தாவிப் பாயும் பந்தயக் குதிரைகளாய் அவனுக்குத் தோன்றிவிட்டன !

3

ரத்தினத்துக்கு, ஜன்னி பிறந்துவிட்டது. அவன் பிழைக்கவில்லை. மூச்சு நிற்கும் வரையில், அவன் பேசிய பேச்செல்லாம் குதிரைகளைப் பற்றியேதான். தனது கடைசிப் பந்தயத்திலும், அவன் இழந்து நாசமாகிவிட்டான்!

அவனுடைய கருமாதி நடந்து சில தினங்கள் கழித்து, மங்கியை அவள் மகன் கேட்டான் : "ஏன் ஆத்தா, எப்ப பாத்தாலும், குதிரெ குதிரெ இன்னே அப்பா பேசிக்கிட்டாரு ?"

" அதெல்லாம் ஒனக்குப் புரியாது, கண்ணு ! குதிரெங்கண்ணு அவுங்குளுக்கு அவ்வளவு பிரியம்."

"குதிரெங்ககிட்டப் பிரியம்னு, அப்பா ஏன் ஒரு குதிரெகூட வெச்சுக்கலே ?" என்று வினவினான் சிறுவன். அவன் பள்ளிக்கூடம் செல்வதை விட்டு, கடை

யில் தாயின்பக்கமே எப்போதும் இருந்துகொண்டு, தகப்பனைப்பற்றி ஏதேனும் கேள்வி கேட்ட வண்ணமா யிருந்தான். அதிலேதான் அவனுக்குப் பிடித்தமா யிருந்தது.

"குதிரெங்க, அவுங்குளுக்குப் பணம் குடுத்துது."

"குதிரெங்க எப்பிடிப் பணம் குடுக்கும்?"

"அவுங்கள்ளாம் அங்கே குதிரெ விடுறுங்க... இல்லேயில்லே; இதெல்லாம் ஒண்ணும் ஒனக்கு விளங் காது, கண்ணு!"

"அவுங்கண்ணு யாரு? யாரு குதிரெ விடுறு?"

"பெரிய பெரிய ராசா, துரைங்கள்ளாம் குதிரெ விடுறுங்க. ஒரு குதிரெ மத்தக் குதிரெயெத் தாண்டி முன்னுலே வந்திடணும். அப்பிடி வந்திச்சின்னு, அது மேலே யாரு பந்தயம் கட்டினுஞே, அவனுக்குப் பணங் குடுப்பாங்க."

"பந்தயமின்னு, என்ன ஆத்தா?"

மங்கி மௌனம் சாதித்தாள்.

"அப்பிடியானு, அப்பாவுக்கு ரொமப ரொம்பப் பணம் கெடச்சிதோ?"

குமுறி வந்த கண்ணீர்த் துளியை மறைப்பதற் காக, மங்கி தன் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

"நானும் பெரியவனுனதும், அதே மாதிரி பந்தயம்..."

"ஐயோ! வேணும், வேணும், கண்ணு! அதெ வாயாலெகூடச் சொல்லாதே" என்று அவள்

வீறிட்டுக் கத்திவிட்டாள். அவளுடைய கடும் வேதனையைக் கண்டு பயந்த சிறுவன், வாய் திறவாமல் மௌனமானான். தன் தகப்பன் செத்த காரணம்கூட, ஒரு மின்னொளிபோல, அவன் மனதிலே சிறிது புலனாயிற்று. ஒரு கணம் கழித்து, தாயின் மார்பிலே அவன் தன் முகத்தைப் புதைத்து, பொருமிப் பொருமி அழத் தொடங்கிவிட்டான். ஒரு மனிதனின் துயரத்தை மற்றொரு மனிதனின் உள்ளத்திலே பாய்ச்சிவிடக் கூடிய ஏதோ ஒரு மனோவசிய சக்தியைப் போல், தாயின் துயரத்தை மகன் அறிந்து கொண்டு விட்டதாய்த் தோன்றியது.

# உடன்கட்டை

பேரூர் ஒரு பெரும் சிவக்ஷேத்திரம்; கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள ஒரு சிறு நகரம். சிவன் கோயி லில் பெரும் பகுதியையும் திருமலை நாயக்கரின் மைத் துனர் அளகாத்ரி நாயக்கர்தான் கட்டினாராம். திப்பு சுல்தான் ஒரு கேடும் செய்யாமல் விட்டுச் சென்ற கியாதி, இந்தக் கோயிலுக்குத்தான் உண்டு.

1830–ஆம் வருஷத்தில் பேரூர் ஒரு சிற்றூ ராகவே இருந்தது. கோவிலும் அதனை அடுத்த பிரா மணர் அக்கிரஹாரமும் பேரூராக விளங்கின. அங்கே சாஸ்திர ஆராய்ச்சி, வேதபாராயணம் இவைகளுக்குக் குறைவே கிடையாது. சந்தோஷமும் குதூகலமும் பிரதிபலிக்கும் ஜனங்களின் குறைவற்ற வாழ்க்கை, அவ்வூரில் பொங்கும் தக்ஷிணகங்கை என்ற காஞ்சி நதியின் பரிசுத்த ஜலத்தைப்போல், பெருகிப் பிரகா சித்தது. அக்கிரகாரத்தின் கிழக்குக் கோடியில் வேங்கடரமண சாஸ்திரியாரின் வீடு இருந்தது. ஊராரின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர் சாஸ் திரியார். ஹிந்து தர்ம சாஸ்திரத்திலும் வேதாந்தத் திலும் நிபுணர். குணத்திலும் நடத்தையிலும் அருந் ததி அவருக்கு ஏற்ற மனைவியாவாள். அவர்களின் வயோதிக காலத்தில் மகளாய்ப் பிறந்து, அவர்களது குழந்தையில்லாக் குறையைப் பார்வதி தீர்த்து வைத்தாள்.

உத்தமமான சதிபதிகளுக்குப் பிறந்த குழந்தை, மட்டமாக இருக்குமா? தகப்பனின் புத்தியும் தாயின்

நன்னடத்தையும், பார்வதியிடம் பொங்கி வந்தன. வருஷங்கள் சென்றன. சாஸ்திரங்கள் விதித்தபடி மணம் முடிக்கவேண்டிய பருவத்தை, பார்வதி அடைந்தாள். கொள்ளேகாலம் கங்காதர சர்மா, கன்னிகையைத் தானம் பெற்றுக்கொண்டார். இன்ப வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே, ராதாகிருஷ்ணன் பிறந்தான். பேரன் பிறந்ததால், புத்திரன் இல்லை என்ற குறையும் சாஸ்திரியாருக்குச் சிறிது தீர்ந்தது.

மாப்பிள்ளையை மகன்போல் பாவித்து, சர்மாவுக்குச் சாஸ்திரியார் வேத வேதாந்தப் பயிற்சியெல்லாம் செய்து வைத்தார். காலையில் காஞ்சி நதியில் நீராட்டம்; ஜபதபம்; கடவுள் வழிபாடு; வேதாந்த ஆராய்ச்சி; போஜனம்; ஆராய்ச்சி; மாலை ஸ்நானம்; கடவுள் வழிபாடு இப்படியே—அவர்களுடைய காலம் நிம்மதியாய்க் கழிந்தது. பார்வதி, அவள் தாயார், குழந்தை ஆகிய மூவரும் அன்பினால் இன்பமும், இன்பத்தினால் பிரேமையும் பொங்கும் ஆனந்த வாழ்க்கையை இடைவிடாது அனுபவித்துவந்தார்கள்.

இவர்களின் குடும்பம்போல் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழும் குடும்பம், வேறெதுவும் கிடையாதென்ற சேதி சுற்றுப்புறத்திலுள்ள கிராமங்களில் பரவியிருந்தது. ஆனால், இந்தக் குடும்பத்தின் ஆனந்த வாழ்க்கையில் கொடும் விதி புகுந்து தன் லீலையைப் புரியத் தயாராகிக்கொண்டிருந்ததை, ஒருவரும் கனவுகூடக் காணவில்லை.

கொடும் பனியால் கருகி மடியும் மலர்கள்போல், மாந்தர்களை மடியச் செய்தாள் மஹாமாரி. பறையர் தெருவில் ஆரம்பித்துக் குடியானவர் தெருவில் கோர

தாண்டவம் புரிந்தாள் தேவி. அக்கிரஹாரத்துக்குள் வரமாட்டாள் என்று மனப்பால் குடித்த பேதைகளின் எண்ணத்தில் மண்போட, அக்கிரஹாரத்திலும் நுழைந்தது வைசூரி. ஊருக்குப் பெரியவரை மரியாதை செய்வதுபோல், சாஸ்திரியாரின் வீட்டில் நுழைந்து, கங்காதர சர்மாவின்மேல் தன் சக்தியை அது உபயோகித்தது. வியாதி முற்றவே, சாஸ்திரியாரின் வீட்டை அணுகவும் ஊரார் பயந்தார்கள். அன்பும் மரியாதையும் காட்டியவர்கள், அவரை இந்தக் கஷ்டகாலத்தில் தனியே விட்டுவிட்டார்கள்.

நெருப்பில் துடிக்கும் புழுப்போல், குருத்து வாழை இலைமேல் சர்மாவின் உடல் துடித்தது. வேதம் ஒலித்த வாயிலிருந்து பேத்தலும் பிதற்றலும் கிளம்பின. 'பிழைப்பான்' என்று நம்பிய சாஸ்திரியார், கடைசியில் கடவுள்மேல் பாரத்தைப் போட்டுவிட்டார். கடவுளும் கைவிட்டார். அணையும் தருணத்தில் சுடர்விட்டெரியும் விளக்குப் போல், சர்மாவின் உயிர் சிறிது சக்தி பெற்றது. "இனிமேல் நான் பிழைக்கமாட்டேன். குழந்தையை நெனச்சாவது நீ உயிரோடே இரு. அசட்டுப் பிசட்டுன்னு ஒண்ணும் பண்ணிப்பிடாதே" என்று, கண்ணீர் சொரியும் பார்வதியிடம், சர்மா கூறினார்.

காலன் அணுகிவிட்டதை அறிந்த சாஸ்திரியார், தெய்வ நாம ஸ்மரணம் செய்தார். யானையைக் காக்க ஓடிவந்த பரந்தாமனின் கண்ணோக்கம் சர்மாவின்மேல் விழுந்தது. அவர் முகம் சற்றுத் தெளிவடைந்தது.

"சர்வ தர்மங்களையும் விட்டுவிட்டு என்னையே **சரண் அடை.** சகல பாவங்களினின்றும் உன்னை

நான் விடுவிக்கிறேன். துயர்ப்படாதே" என்று கீதை யில் பகவான் கூறுவதை, சாஸ்திரியார் ஜபித்தார், இது சர்மாவின் உயிருக்குச் சஞ்சீவிபோல் இருந்தது. சதைப் பற்றற்ற கைகளைச் சந்தோஷத்துடன் தூக்கி, "பரமனே! உன்னைச் சரண் அடைகிறேன்" என்று அவர் கூவினார். தூக்கிய கைகள் கீழே விழுந்தன. சர்மா கடவுள் திருவடியை அடைந்தார்.

கணவனை இழந்த மனைவியின் கதறல், கல்லையும் கரைத்தது. வயோதிகரின் மனத்தைப் பிளந்து பொங் கியது துக்கவெள்ளம். விஷயம் தெரியாத குழந்தை ராதாகிருஷ்ணனின் பரந்த கண்கள், ஆச்சரியத்துடன் அவர்களை விழித்துப் பார்த்தன.

## 2

"ஆமாம். வேறே என்ன செய்யறது? சாஸ்தி ரங்களை மீறலாமா? உடன்கட்டை ஏறவேண்டி யதுதான்" என்றார் எண்பது வயதுக் கிழவர். கூட் டத்திலுள்ளவர்களும் ஆமோதித்தார்கள்.

"மிகவும் சிறிசு. அவ குழந்தையையும், எங்க வயோதிகத்தையும் எண்ணிப் பார்த்தாவது இதை நிறுத்த முடியாதா?" என்று அழுதாள் அருந்ததி.

"சீச்சீ, என்ன முட்டாள்தனம்! பெரிய பண் டிதருக்கு மனைவியாயிருக்கிற நீ கூட இப்படிக் கலங்க லாமா? உடன் கட்டை ஏறும் பத்தினியை விட விதந்துவா மேல்?" என்றார் கிழவர்.

"அவன் செத்த அப்புறம் ஒன் பெண் இருந்து என்ன பலன்? இந்த மாதிரி செய்ய எண்ணற உங்

களோடே இருக்கிறதெவிட, ஊரை விட்டு ஓடிப் போறதே மேல்" என்ருள் ஒரு கிழவி.

உடன்கட்டை ஏறுவதில் ஒரு குருட்டு நம்பிக்கை, மதாசார அனுஷ்டானம் இவைகளை வற்புறுத்துவார்கள் எல்லாம் அறிந்த பண்டிதர்கள். விதவையின் அவமான வாழ்வைவிட, உடன்கட்டை ஏறும் பெருமையைப் பெரிதாக எண்ணிஞர் சாஸ்திரியார். இவ்விதம் பார்வதி உடன்கட்டை ஏற ஏற்பாடு நடந்தது.

சூரியன் அஸ்தமித்தான். காஞ்சி நதிக் கரையை நோக்கிப் பிரேத ஊர்வலம் கிளம்பியது. பந்தங்கள் ஏந்திய பலர் அணிவகுத்துச் செல்ல, முதலில் பிரேதம் சென்றது. அதன் பின்னே பெண்கள் புடை சூழ ஸதிபார்வதி எலுமிச்சம் பழங்களை அம்மானை ஆடிக் கொண்டே மெல்ல மெல்ல நடந்தாள். இவர்களைச் சுற்றி ஊர் ஜனங்களின் கூட்டம். நதிக்கரையில் சிதை தயாராயிருந்தது; நன்ருய் உலர்ந்த விறகு மெத்தை. பூர்வாங்கக் கிரியைகள் முடிந்தன. சிதை மீது ஏறியது பிரேதம். ஸதியும் முன் வந்தாள். எண்ணெயைக் குடித்துவிட்டு, பந்தங்கள் கொழுந்து விட்டு எரிந்தன. இந்த வெளிச்சத்தில் சிதையை நோக்கி வரும் ஸதியின் தோற்றம் அடியோடு மாறியது. மஞ்சள் கரைகொண்ட சிவப்பு ஆடை. முழங்கால்வரை அவிழ்ந்து தொங்கும் கூந்தல். நெற்றியில் குங்குமம். பந்தங்களின் கோர ஒளியைப் பிரதிபலிக்கும் மஞ்சள் தடவிய கன்னங்கள். கையில் வெற்றிலை பாக்கும் பழமும் நிறைந்த தட்டு. அவசர அவசரமாக, புரோகிதர் சடங்குகளை முடித்தார்.

வெற்றிலை பழம் முதலியன நிறைந்த தட்டைப் புரோகிதரிடம் சமர்ப்பித்து, பார்வதி தன் பெற்றோரை நமஸ்கரித்தாள். அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வெளிவரவில்லை. சாஸ்திரியாரும், அருந்ததியும் சிலைபோல் நின்றூர்கள். கரைபுரண்ட துக்கத்தால், உணர்ச்சி இழந்தார்கள். புரோகிதர் பக்கம் ஸதி திரும்பிஞள். "நான் சொல்லுவதைத் திரும்பச் சொல்லு,'வாழ்வு, சாவு இரண்டிலும்,நாதா, உம்மைப் பிரியேன். நான் எப்போதும் உம்முடனேயே இருக்கேன்' என்று சொல்லு" என்ருர் புரோகிதர்.

தன் நினைவற்று, கிளிப்பிள்ளையைப்போல், அந்த வார்த்தைகளை அவள் திருப்பிச் சொன்னுள். புரோகிதர் அளித்த தீபத்தை ஏந்தி, மும்முறை சிதையைச் சுற்றி வலம் வந்தாள். ஓர் அழகிய யுவதி பலியாவதைக் கண்டு பயந்தோ என்னவோ காற்று அசையாமல் இருந்தது. பார்வதி சிதைமீது ஏறிஞள். தீபச் சுடர் விறகின்மீது பாய்ந்தது. சிதையும் பற்றியது. கதிகலங்கிய ஸதி கணவனின் உடலை அணைந்தாள். உடனே புரோகிதரும் பிறரும் நெய்க்குடங்களைக் கவிழ்த்து, தணிந்த அக்கினியை மீண்டும் வளர்த்தார்கள். ஜ்வாலை கொழுந்துவிட்டுக் கிளம்பியது. பார்வதி திடீரென்று அலறிஞள். ஆனுல், கூடியிருந்த ஜனங்களின் ஜயகோஷத்தில் அவளது அலறல் அமுங்கிவிட்டது. பார்வதியின் பரிதாபத்தைப் பரமனிடம் சென்று முறையிடுவதுபோல், தீயின் நாக்குகள் வானுற ஓங்கிப் புலம்பின. ஜனங்களின் கோஷம் ஓய்ந்து, நிசப்தம் நிலவியது. "ஸதி பகவானின் பாதாரவிந்தங்களை அடைந்துவிட்டாள்" என்று புரோகிதர் முழங்கிஞர். அதை ஆமோதிப்

பதுபோல், சடார் படார் என்று தீச்சுடர்கள் வெடித்தன.

## 3

**வெ**ள்ளி முளைத்தது. உடன் கட்டை ஏறிய பார்வதியை எண்ணி அழுத கண்ணைப்போல், சந்திரன் சிவந்து பிரகாசித்தான். பெண்கள் கண் விழித்து, அவரவர் வீட்டு வேலைகளில் ஈடுபட்டார்கள். அருந்ததியும் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு கொல்லைப் புறம் சென்ருள். " கண்ணே! இனிமே நீ எப்பயடீ திரும்பி வருவே! அம்மான்னு என்னெ அன்போடே அழைக்க யாருடீ இருக்கா! என்னெயும் ஒன்னோடே அழைச்சுண்டாவது போயிடேன்!" என்று புலம்பிக் கொண்டே, பாத்திரங்களை அருந்ததி தேய்க்கத் தொடங்கிளுள்.

" அழாதேடீ, அம்மா! நானே இதோ உன்கிட்ட வந்துட்டேன் " என்று ஒரு குரல் கேட்டது.

அருந்ததி திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தாள். பொழுது புலர்வதால் மங்கிவரும் சந்திரனின் ஒளியில் ஸதி பார்வதி, தாயின் முன் தோன்றிஞள்.

" அம்மா! என்னை மறுபடியும் பார்க்கறது ஒனக்குச் சந்தோஷமா இல்லையா?" என்று கேட்டாள் பார்வதி.

" இல்லே, இல்லே. நீ என் பெண் இல்லே. அவளுடைய ஆவி நீ. ஏதோ பாசத்தாலே திரும்பி வந்திருக்கிற பிசாசு நீ. இல்லேன்னு, எரிஞ்சு சாம்பலாய்ப்போன நீ எப்படித் திரும்பி வர முடியும்!"

என்று, பயத்தால் நடுங்கிய குரலில் சொன்னாள் அருந்ததி.

"இல்லே, அம்மா. நான் எரிஞ்சு சாகலே. புகை சூழ்ந்துண்ட உடனே, சூடு பொறுக்காதவபோலக் கதறினேன். அதெ நிஜம்னு நினைச்சு, புரோகிதர் ஏமாந்துட்டார். சந்தடி பண்ணாமே, தவழ்ந்துபோய் ஆத்துத் தண்ணிலெ முழுகிப்புட்டேன். அப்புறம் அந்த அரசமரம் இருக்கே, அதும் பொந்திலே போய் ஒளிஞ்சுண்டேன். எல்லாரும் கலெஞ்சு போனத்துக்குப் பின்னாடி, நடுநிசியிலே யார் கண்ணிலெயும் படாமெ,இங்கே வந்து மறைஞ்சுண்டேன்.இதுனாலே, என்னெக் கோழைன்னு நினைக்காதே, அம்மா. உயிரெ விடறதுக்கு நான் பயப்படலெ. ஆனா, உயிர் போகச்சே, அவா சொன்னாளே 'கொழந்தெயெ நினைச்சாவது உயிரோடே இரு'ன்னு? அதெ நான் காப்பாத்த வாண்டாமா? அதுக்காகத்தான் திரும்பி வந்துட்டேன்" என்றாள் பார்வதி.

இதைக் கேட்ட அருந்ததி, உணர்ச்சிமீறி ஆனந்தம் பொங்கியவளாய், மகள் பார்வதியை வாரியணைத்துக்கொண்டாள். இந்தப் பரவச வெள்ளத்திலே, இருவரும் ஒரு வார்த்தையும் பேசவில்லை; திடீரென்று, அருந்ததியின் அணைந்த கைகள் தளர்ந்து பிரிந்தன. அவள் கீழே சாய்ந்தாள். கட்டு மீறிய ஆனந்தம், அவள் மூச்சைத் திணறடித்து, உயிரையே குடித்து விட்டது. பால் கரக்கும் வேளை வந்ததால், 'அம்மா! அம்மா!' என்று பசுங்கன்று கத்தியது. காலகீதத்துக்குச் சுருதி போடுவதுபோல, சுவர்க் கோழி ஒலித்துக்கொண்டிருந்தது. மின்மினிகள், தங்கள் சின்

னஞ் சிறு தீபங்களை அணைத்து விட்டன. கங்குலில் மங்கிய சந்திரன், மேகத் திரை யொன்றின் பின் மறைந்துகொண்டான். ஒரு தெய்விக சாந்தி எங்கும் நிலவியது. அதிலே கலந்துவிட்டாள் அருந்ததி; கால சக்கரத்தின் சுழலிலிருந்து அவள் விடுபட்டுவிட்டாள். சந்தேகத்தால் மனம் பதைத்த பார்வதி, கீழே விழுந்த தாயின் முகத்தைக் குனிந்து நோக்கினாள். அவள் சந்தேகம் நிஜமாகிவிட்டது. "அம்மா! உன்னைக் கொல்றதுக்காடீ திரும்பி வந்தேன் இந்தப் பாவி!" என்று தன்னை மறந்து கதறினாள்.

இந்தக் குரலைக் கேட்டு, சாஸ்திரி வெளியே ஓடி வந்தார். தாம் சொப்பனத்திலும் நினையாத இந்தக் காட்சி, அவரைத் திகைப்படையச் செய்தது.

"யாரு, பார்வதியா!—பார்வதியா!"

சாஸ்திரியாரின் குரல், ஒரு பயமும் ஆச்சரியமும் கலந்து நடுங்கியது.

"ஆமாம், பார்வதிதான்."

அந்தப் பதில், எங்கிருந்தோ அகாத தூரத்திலிருந்து மங்கி வரும் உயிரற்ற எதிரொலிபோல, சாஸ்திரியாரின் காதுகளில் விழுந்தது.

"பாவி, பார்வதிதான்; திரும்பிவந்து, அம்மாவையும் கொன்னுட்டேன்" என்று, அவள் தொடர்ந்து சொன்னாள்.

சாஸ்திரியாருக்கு ஒன்றும் புரியவில்லை. அங்குமிங்கும் நோக்கினார். மனைவியின் தேகத்தைத் தொட்டுப் பார்த்தார். அது ஜில்லென்று கட்டையாய்க் கிடந்தது.

பொழுது புலர்ந்தது. அந்தத் தெளிவில், சாஸ்திரியாரின் முகம் ஒரு கோர மாறுதலை அடைந்தது. அவர் புத்தியும் பேதளித்தது. வெறிக்க வெறிக்க எங்கோ பார்த்த கண்களுடன், பேய்போல் சிரித்துக் கொண்டு, தெருவிலே ஓடினார்.

ஓடிக்கொண்டே, "சிநேகிதர்களே! மகா ஜனங்களே! எல்லோரும் எழுந்திருங்கோ! இந்த அதிசயத்தைப் பாருங்கோ! சிவபெருமான் திருவிளையாடல்! என் சம்சாரத்தெ எடுத்துண்டு, என் பெண்ணைத் தந்துட்டார்" என்றார்.

சாஸ்திரியாரின் இந்தக் கலவர வார்த்தைகள், முதலிலே ஜனங்களுக்கு விந்தையாய்இருந்தன.பின்பு, இவருக்கு ஏதேனும் சித்தப் பிரமை பிடித்து விட்டதோ என்று அவர்கள் நினைத்தார்கள். ஒருவர் ஒருவராய்க் கூடித் திரண்டு, சாஸ்திரியாரின் வீட்டில், அவர்கள் புகுந்தார்கள்.

பார்வதி நின்றுகொண்டிருந்தாள். என்றுமே இல்லாத ஜோதியுடன் பிரகாசித்தன அவள் கண்கள். அவளுக்கு முன்னே தரையில், ஆவிபோன அருந்ததியின் உடலம் கிடந்தது-இதுவே அவர்கள் கண்ட காட்சி.

"அடி பாவி! பாழும் விதந்து, நீ திரும்பிவந்துட்டயே? ஒன் பாவமே ஒன் தாயெக் கொன்னுடுத்து; ஒன் தகப்பனின் புத்தியையும் தடுமாறப் பண்ணிடுத்து! ஊரையே நாசம் பண்ணறத்துக்குத்தான் நீ வந்திருக்கே!" என்று பார்வதியைத் திட்டிக்கொண்டே, அவர்கள் அவளுடைய கையையும் காலையும் கட்டினார்கள்.

சதி பார்வதி மீண்டும் தகனமாகிவிட்டாள். ஆனால், பழைய வைபவங்கள் இல்லை; மங்களகரமான பழைய ஊர்வலமில்லை; பழைய ஜய கோஷங்களுமில்லை.

பேரூர் இன்றும் ஒரு பெரும் சிவக்ஷேத்திரமாகவே விளங்குகிறது. தக்ஷிண கங்கையின் பிரவாகமும் அங்கே ஓடிக்கொண்டுதான் இருக்கிறது.

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அன்பளிப்பு
திரு.க. சண்முகசுந்தரம்
தமிழியல் துறை

ஆசிரியரின் அடுத்த புத்தகம்

# சி ங் கா ரி

முதலிய சிறுகதைகள்